REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 செப்டெம்பர் 11 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
92 ANNIVERSARY
வரு. 92 இல. 217 | Wednesday 11, September, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## G.C.E O/L பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியிட எதிர்பார்ப்பு

**பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை இம்மாத இறுதிக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

06

### சஜித், அநுரவின் எதிர்காலம் முக்கியமல்ல

# உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை சிந்தியுங்கள்



**கிளிநொச்சியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**



**கிளிநொச்சியிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

சஜித்தின் அல்லது அநுரவின் எதிர்காலத்தை அல்ல, தமதும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்து, இந்த நாட்டு மக்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி வாக்களிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கிளிநொச்சியில் நேற்று (10) நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக்

06

# அரச ஊழியர் சம்பள அதிகரிப்பு உறுதி

### அமைச்சரவையில் ஏற்கனவே அங்கீகாரம்

2025ஆம் ஆண்டு அமுல்படுத்தப்படவுள்ள அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை என வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானதென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

**உணர்வுபூர்வமான விடயங்களின்போது மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம்**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதற்கான அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்துள்ளதாகவும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை கடந்த 12.08.2024 திகதியன்று சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

06

### பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும்

## 'மஹாபொல' கொடுப்பனவு தொகை அதிகரிப்பு

**2025 ஏப்ரல் முதல் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்**



பல்கலைக்கழக மாணவர்களின் 'மஹாபொல' மற்றும் புலமைப்பரிசில் உதவித் தவணை கொடுப்பனவுத் தொகையை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைவாக 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமுலுக்குவரும் வகையில், மஹாபொல புலமைப்பரிசிலுக்கான கொடுப்பனவை 7,500 ரூபாவாகவும் உதவுத் தொகை தவணைக் கட்டணத்தை 6,500 ரூபாவாகவும் அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன

06

### நிதித்துறை ஸ்தீரம், சீர்திருத்த வேலைத்திட்டம்

## ADB வங்கியிடமிருந்து கடன்பெற அமைச்சரவையில் அங்கீகாரம்



இலங்கையின் நிதித்துறையின் ஸ்திரத்தன்மை மற்றும் சீர்திருத்த வேலைத்திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் வசதியை பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் நிதித்துறை ஸ்திரத்தன்மை மற்றும் சீர்திருத்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த 02 உப திட்டங்களின் கீழ், 400 மில்லியன் அமெரிக்க டொலர்

06

## இராஜாங்க அமைச்சர்கள் ஐவர் அதிரடியாக பதவி நீக்கம்



உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 05 இராஜாங்க அமைச்சர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக் ஷ, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க

06

02
**வாக்காளர் அட்டைகள் விநியோகம்**
14 ஆம் திகதி விசேட தினமாக அறிவிப்பு
**இதுவரை 51 வீதம் பூர்த்தி**



02
**பெருந்தோட்டத் தொழிலாளருக்கு நேற்று முதல் 1,350 ரூபா அடிப்படைச் சம்பளம்**
**இ.தொ.கா தலைவர்**

## மட்டு. மாவட்டத்திலிருந்தும் தலைவர்கள் உருவாக்கப்படுவர்

**இளைஞர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை வழங்குவேன்**



தமது அரசாங்கத்தில், மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அதிவேக வீதிகள் கொண்டுவரப்படும் எனவும் இதன்மூலம் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்திகள் முன்னேற்றமடையும் எனவும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

06

## மாலைதீவில் அந்நியச் செலாவணி கையிருப்பில் பாரிய வீழ்ச்சி



சர்வதேச ரீதியில் பிரபலமான சுற்றுலா நாடாகத் திகழும் மாலைதீவு, தற்போது அந்நியச் செலாவணி கையிருப்பு வீழ்ச்சியினால் கடும் நிதி நெருக்கடியைச் எதிர்நோக்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த நாடு தற்போது எதிர்கொண்டுள்ள

06

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மேலதிக வகுப்பு, கருத்தரங்குகள் இன்று நள்ளிரவுடன் நிறுத்தப்படும்



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அனைத்து மேலதிக வகுப்புகள், விரிவுரைகள் அல்லது பயிற்சிப் பட்டறைகள் அனைத்தும் இன்று (11) நள்ளிரவு முதல் நிறுத்தப்படவேண்டுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 15 ஆம் திகதி, தரம் 5

06

### தேர்தலில் தமிழரசு கட்சி யாருக்கு ஆதரவு?

## இறுதி முடிவு இன்று அல்லது நாளை அறிக்கையினூடாக கட்சி அறிவிக்கும்



ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பது தொடர்பான இறுதி முடிவை, அறிக்கையொன்றினூடாக வெளியிடுவோமென தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். வவுனியாவில் நேற்று (10) நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் விசேட குழு கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு

06

### நேற்று நள்ளிரவு முதல்

## மில்கோ பால் மா விலை குறைப்பு



நேற்று நள்ளிரவு முதல் (10) அமுலுக்கு வரும் வகையில், மில்கோ பால் மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 1 கிலோ பால் மா பைக்கற்றொன்றின் விலை 190 ரூபாவினால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 2,585

06

### மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள

## தேர்தல் விஞ்ஞாபனங்கள் நடைமுறைக்கு சாத்தியமல்ல

**ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர**



ஜனாதிபதி வேட்பாளர்கள் முன்வைத்துள்ள விஞ்ஞாபனங்கள் அனைத்தும் நடைமுறைக்குச் சாத்தியமற்றவையென ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

எஹலியகொடை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே

06

## மட்டு. நகரில் 06 வயது சிறுமி சோழன் உலக சாதனை

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 06 வயது சிறுமியொருவர் சோழன் உலக சாதனையில் இடம்பிடித்துள்ளார்.

காவ்யஸ்ரீ என்ற இச் சிறுமி, மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறு வரிசைகளைக் கொண்ட 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கு 06 நிமிடங்கள் 50 வினாடிகளில் விடையளித்து சோழன் உலக சாதனையை படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம், பீபல்ஸ் ஹெல்பிங், பீபல்ஸ் பவுண்டேஷன் மற்றும் கதிரவன் சமூக அபிவிருத்தி நிறுவனம் போன்ற அமைப்புகள் இணைந்து இந்த சாதனை நிகழ்வு நேற்று முன்தினம் (09)

06

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 11 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.09
அஸர் - 03.13
மஃரிப் - 06.14
இஷா - 07.25

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 26
ராகுகாலம் : பகல் : 12.03 - 1.33வரை
சுபநேரம் : மாலை : 04.33 - 06.03வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

முஸ்லிம்களுக்கு அநீதி இழைத்தவர்களை

# சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**கம்பளையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைத்துள்ள அனைவரையும் சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுப்பது எமது பொறுப்பாகும் என நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக்கோரி தவறு நடந்துள்ளதுள்ளமையை தாம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, கம்பளை யில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டத்துக்கு மக்களை சேர்க்க முடியாதென சிலர் கூறி வருகின்றனர். ஆனால், இங்கு கம்பளையில் ஒரு மக்கள் படையே திரண்டு வந்துள்ளது.

அனைவரும் ஆவலாக எதிர்பார்த்திருந்த விடயம் தொடர்பாக மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு நல்ல செய்தியன்று கிடைக்கவுள்ளது. அதுதான் மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கான தீர்வு. 06

வாக்களிக்க அனைவரும் செல்வதால்

# தேர்தல் தினத்தன்று சுகாதார சேவைகள் சீர்குலையலாம்

## சுகாதார நிபுணர்கள் சங்கம் அச்சம்

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று சுகாதார சேவைகள் சீர்குலைவதைத் தடுப்பதற்கு சுகாதார அமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமையினால், வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு இடையூறு ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



எனவே, சுகாதார ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் வாக்குச் சாவடியாவது அல்லது அவர்கள் கடமையாற்றும் இடத்துக்கு மாற்றிடம் வழங்க வேண்டுமென இச்சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரமே தபால் மூலம் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏனைய சுகாதாரப் பணியாளர் அனைவரும் அவரவர் தொகுதிகளுக்குச் சென்று வாக்களிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அனைத்து சுகாதார ஊழியர்களும் வாக்களிக்க தத்தமது தொகுதிகளுக்குச் சென்றால், வைத்தியசாலை செயற்பாடுகள் பாதிக்கப்படலாமென சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டியுள்ளார். 06

ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம்

# ஊடகத்துறை பற்றிய ஆய்வறிக்கை லேக்ஹவுஸ் தலைவரிடம் கையளிப்பு



சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் (IFJ) வழிகாட்டுதலின் கீழ், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (FMETU) நாடளாவிய ரீதியில் முன்னெடுத்த ஆய்வறிக்கை லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் கலாநிதி ஹரேந்திர காரியவசத்திடம் கையளிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையை Federation of Media Employees Trade unions யின் பொதுச் செயலாளர் தர்மசிறி லங்காபேலி நேற்று (10) கையளித்தார்.

தேசிய ஊடக மேம்பாட்டுக் கொள்கை மற்றும் ஊடகவியலாளர்களின் தொழில்சார் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை நிறுவும் நோக்கத்துடன், ஊடகவியலாளர்களும், ஊடக நிறுவனங்களும் அதன் தலைவர்களும், சிவில் சமூகமும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக இந்த ஆய்வறிக்கை இடம் 06 பெற்றுள்ளது.

கின்னஸ் உலக சாதனை

# யாழ். மாணவியை சந்தித்த ஜனாதிபதி

கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த, யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாதங்கி கனகசுந்தரம் என்ற மாணவியை, ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க நேரில் சந்தித்து பாராட்டியுள்ளார்.

"அதிக எண்ணிக்கையான பாதணிகளை வேகமாக அடுக்குதல்" என்னும் தலைப்பின் கீழ் இச் சாதனை நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது. அதன்படி, 10 பாதணிகளை ஒன்றன்மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி இம் மாணவி சாதனையை புரிந்துள்ளார். கடந்த மே மாதம் 20ஆம் திகதி கொடிகாமத்தில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கமைவாக, இச் சாதனை காணொளியாக பதிவு செய்யப்பட்டு இணையத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டது.

இதனையடுத்து, மூன்று மாதங்களின் பின்னர், world guiness assesment commity மூலம் இதன் உண்மைத் தன்மை ஆராய்ந்து, ஒகஸ்ட் 28 ஆம் திகதியன்று, இது கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழும் மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 06

அநுரவின் அண்மைய உரை

# வாக்களிக்கத் தவறுவோருக்கு மறைமுக வன்முறை அச்சுறுத்தல்



## தேசபிரேமி ஜனதா பலவேகய குற்றச்சாட்டு

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிக்கத் தவறுவோர் வன்முறையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதையே, அநுரவின் அண்மைய உரை மறைமுகமாக வெளிப்படுத்துவதாக தேசபிரேமி ஜனதா பலவேகயவின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் இதனை தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

அண்மையில் வடக்கில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார கூட்டத்தில், அதன் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க, வடக்கிலுள்ள தமிழ் சமூகம் தென்னிலங்கையின் வாக்குப்பதிவு முறையை பின்பற்றி தனக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் அவ்வாறு செய்யத் தவறினால் வடக்கிலுள்ள தமிழர்கள் பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இன துருவமுனைப்பு ஏற்பட்டால், இனவாத மோதல் ஏற்படலாம் என்பதே அநுரவின் மறைக்கப்பட்ட செய்தியாகும் என சுகத் ஹேவாபத்திரன தெரிவித்துள்ளார்.

தேசபிரேமி ஜனதா பலவேகயவின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணிலின் வெற்றிக்காக

# இ.தொ.காவின் இரத்தினபுரி மாவட்ட இறுதி பேரணிகள் 11 முதல் 18 வரை

சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின், இரத்தினபுரி மாவட்டத்துக்கான இறுதிக்கட்ட தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்று (11) முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதன்படி, இன்று (11) கலவான தேர்தல் தொகுதியிலும் நாளை (12) எஹெலியகொட தேர்தல் தொகுதியிலும் நாளை மறுதினம் 13 ஆம் திகதி பெல்மதுளை தேர்தல் தொகுதியிலும், 14 ஆம் திகதி இரத்தினபுரி தேர்தல் தொகுதியிலும் எதிர்வரும் 15 திகதி இரத்தினபுரியில் மாபெரும் பொதுக்கூட்டமொன்றை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், 16ஆம் திகதி நிவிதிகல தேர்தல் தொகுதியிலும் 17ஆம் திகதி இறக்குவானை மற்றும் கொலன்ன தேர்தல் தொகுதியிலும் 18 ஆம் திகதி பலாங்கொடை தேர்தல் தொகுதியில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் இந் நிகழ்வுகளில், இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய செயற்குழுவை கூட்ட அவசியமில்லை

## இலங்கை தமிழரசுக் கட்சி முடிவு

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை எதிர்வரும் 14ஆம் திகதி மீண்டும் கூட்டவேண்டியதற்கான தேவையில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட 05 பேர் கொண்ட தமிழரசுக் கட்சியின் குழு நேற்று கூடியபோதே இத்தீர்மானம் எடுக்கப்ப ட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்கனவே தீர்மானித்திருந்தது. இத்தீர்மானம் நேற்றைய கூட்டத்தின் போது உறுதிசெய்யப்பட்டதாகவும் சஜித் பிரேமதாசவை சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள விடயங்களை அமுலாக்குவதற்கான கால வரையறை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடுவதற்கு தமிழரசு கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை, எதிர்வரும் நாட்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் கொழும்பில் சந்திப்பாரெனவும், அதன்பின்னரே மீண்டும் 05 பேர் கொண்ட குழு கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெருந்தோட்டத் தொழிலாளருக்கு நேற்று முதல் 1,350 ரூபா அடிப்படைச் சம்பளம்

## தோட்டக் கம்பனிகளுடனான பேச்சுவார்த்தை மூலம், மிகுதி 350 ரூபா கிடைக்க நடவடிக்கை

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான அடிப்படை நாட் சம்பளமான 1,350 ரூபா, முதற் கட்டமாக நேற்று (10) வழங்கப்பட்டதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மேலும், 1,350 ரூபா அடிப்படைச் சம்பளத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுத்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை பெற்றுக்கொடுக்க ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்களுக்கும் அவர் தனது நன்றியை தெரிவித்துள்ளார். 06



அறிவிப்பின்றி 05 நாட்களுக்குள்

# கடமைக்கு சமுகமளிக்காவிடின் சேவையை விட்டு விலகவேண்டும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

அரசாங்க அதிகாரிகள் அறிவிப்பின்றி 05 நாட்களுக்கு மேல் கடமைக்கு சமுகமளிக்காவிடின், அடுத்த 05 நாட்களுக்குள் அவர்கள் சேவையை விட்டு வெளியேறுவதற்கான அறிவிப்பை அறிவிக்க வேண்டுமென அரசாங்க சேவை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கையொன்றினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகள் முன்னறிவிப்பின்றி கடமைக்கு சமூகமளிக்காதமையினாலும், சில சந்தர்ப்பங்களில் சேவையிலிருந்து விலகியதை அறிவிப்பதற்கு ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் எடுத்துக்கொள்வதனாலும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரி ஒருவரது பதவி தொடர்பான இராஜினாமா அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பின்னர், அது குறித்து தவறு மன்னிப்புக் கோருவதற்குரிய செயல்விளக்கம் வழங்கப்படுமாயின், அது அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரிவு 216 இன் கீழ் சமர்ப்பிக்கப்படவேண்டும்,




மேலும், சுய விருப்பத்துக்கமைய சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் முன்வைப்பது குறித்தும் சம்பந்தப்பட்ட ஒழுக்க நடைமுறை குறித்தும் விசாரணை அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் எனவும் அரசாங்க சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் 14 ஆம் திகதி விசேட தினமாக அறிவிப்பு

## இதுவரை 51 வீதம் பூர்த்தி

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் 51 சதவீதம் நிறைவடைந்துள்ளதுடன் இரண்டாம் கட்ட வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட தினமாக மீண்டும் 14 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இதுவரையில் வாக்காளர் அட்டைகளை பெறாதவர்கள் அன்றைய தினம் அவர்களுக்கான வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறு இல்லாவிடின், அருகிலுள்ள தபாலகத்துக்குச் சென்று வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுவரையில் 51 சதவீதமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள், தமது கடமை நேரத்தில் அருகிலுள்ள தபால் அலுவலகத்துக்குச்சென்று தேசிய அடையாள அட்டையை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியமென சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.


SRI LANKA
PARIS 2024
உங்கள் சளைக்காத திறமைக்கு
தேசத்தின் கௌரவம்
பாரிஸ் பராலிம்பிக் போட்டிகளில் திறமை காட்டி தேசத்திற்கு பெருமை சேர்த்த வெள்ளிப்பதக்கம் வென்ற வீரர் சமித்த துலான் தலைமையிலான தீரம் மிக்க இலங்கை போட்டியாளர்களுக்கு வாழ்த்துகள்.
உங்கள் வெற்றி எதிர்காலக் கனவுகளை நனவாக்க தவிர்க்க முடியாத உந்துசக்தியாகும்.
தடைக்கற்கள் தாண்டி முன்னேறிச் செல்லும் உளவுரண் மிக்க போட்டியாளர்களுக்கு MAS இன் சிரந்தாழ்ந்த வாழ்த்துக்கள்.
ACCESSIBLE BY DESIGN
2024 பராலிம்பிக் போட்டிகளில் இலங்கை அணியின் உத்தியோகபூர்வ ஆடை அணிகலன் பங்குதாரர்
MAS
துணிவே மாற்றம்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 25ஆம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 07

## குறள் தரும் சிந்தனை



மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்

ஆணவங் கொண்டு அநீதி விளைவிப்பவர்களை, நாம் நம் பொறுமைக் குணத்தால் வென்று விடலாம்.

# இம்முறை வன்செயல்கள் குறைந்த தேர்தல் களம்!

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. ஒவ்வொரு அபேட்சகரும் தங்களது தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். தேர்தல் பிரசாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம் நிறைவடைவதற்கு இன்னும் ஒரு வார காலம் உள்ள நிலையில், பிரசாரக்களம் கொதிநிலை அடைந்திருக்கிறது. அதனால் பிரதான பிரசாரக் கூட்டங்கள் மாத்திரமன்றி சிறு கூட்டங்கள், சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள், மாநாடுகள், வீடுவீடாக வாக்கு சேகரிக்கும் நடவடிக்கைகள் என பலவிதமான வழிகள் கையாளப்படுகின்றன.

இதன் விளைவாக இத்தேர்தல் மக்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாகியுள்ளது. அத்தோடு தேர்தல் குறித்து வாக்காளர்கள் அதிக கவனம் செலுத்தும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் தேர்தல் சட்ட விதிமுறைகள் மீறப்படுவது அதிகரித்து வருவதாக சுயாதீன தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.

இவ்வாறான சூழலில் தேர்தல் வன்முறைகள் ஏற்படலாம் என்ற அ ச்சமும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாமெனக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் கவனம் செலுத்திய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தி, 'ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நாட்டில் வன்முறை சம்பவங்கள் இடம்பெறலாமெனக் கூறப்படுவது குறித்து உறுதியான தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி எவ்விதமான வன்முறைகளும் ஏற்படாது என்பதை உறுதிபடக் குறிப்பிடுகிறேன். தேசிய பாதுகாப்பு கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மை. அமைச்சர் குறிப்பிடுவது போன்று நாட்டில் வன்முறைகள் ஏற்படக்கூடிய முன் அறிகுறிகள் தென்படுவதாக இல்லை.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் முன்னொரு போதுமில்லாத வகையில் அமைதியான முறையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இம்முறை தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகி பல வாரங்களாகியுள்ளது. தற்போது இப்பிரசாரம் உச்சகட்ட கொதிநிலையை அடைந்திருக்கிறது. இற்றைவரையும் வன்முறைகள் அற்ற முறையில் தேர்தல் களம் காணப்படுகிறது. அதனால் தேர்தலின் பின்னர் நாட்டில் வன்முறைச் சம்பங்கள் இடம்பெறலாமெனக் கூறப்படுவதில் உண்மைகள் இருக்க முடியாது. அதுவே பரவலான கருத்தாக உள்ளது.

மேலும் இத்தேர்தலுக்கான பிரசார காலம் ஆரம்பமாகி நிறைவடையும் கட்டத்தையும் அண்மித்துள்ளது. இக்காலப்பகுதியில் இரண்டொரு வன்முறைச் சம்பவங்கள்தான் பதிவாகியுள்ளன. ஆனால் கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட எல்லாத் தேர்தல் காலங்களிலும் வன்முறைகள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. உயிரிழப்புகளும் இரத்தம் சிந்துதல்களும் பதிவாகியுள்ளன. அந்த தேர்தல் காலங்களுடன் ஒப்பிடும் போது இத்தேர்தல் பிரசார காலம் வன்முறைகள் அற்ற முறையில் காணப்படுகிறது.

அதேவேளை இத்தேர்தலை அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. அதற்கு ஏற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. தேர்தல் வன்முறைகள் அற்ற முறையில் நடத்தப்படுவதற்கு தேவையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குவதில் வாக்காளர்கள் உறுதியாக உள்ளனர்.

கடந்த காலங்களைப் போன்று வன்முறைகள் இன்றி தேர்தல் நடத்தப்படுவதை விரும்பாத சில தீய சக்திகள்தான் வன்முறைகள் இடம்பெறலாமென தெரிவித்திருக்கலாம் என வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான வதந்திகளின் ஊடாக வாக்காளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தவும் அவர்கள் வாக்களிப்பதில் சுதந்திரமாக எடுக்கக்கூடிய முடிவுகளில் செல்வாக்கு செலுத்தவும், அவற்றின் ஊடாக அற்ப அரசியல் இலாபம் அடைந்து கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகக் கருதப்படுகிறது.

ஆனால் தேர்தல்கள் ஆணைக்குழுவும், வாக்காளர்களும் வன்முறைகள் அற்ற முறையில் தேர்தல் நடத்தப்படுவதில் உறுதியாக உள்ளனர். அதேநேரம் தேர்தலுக்கு முன்னரோ பின்னரோ வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற வாய்ப்பிருக்காது என்பதுதான் மக்களின் கருத்தாக உள்ளது.

'தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஏதேனும் செயற்பாடுகள் இடம்பெறுமாயின் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்று அமைச்சர் உறுதிபடக் கூறியுள்ளார்.

ஆகவே தேர்தல் வன்முறைகள் குறித்து வாக்காளர்கள் அச்சம் கொள்ள வேண்டிய தேவை ஏற்படாது. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதே காலத்தின் அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# சிறுபான்மை சமூகத்தினரின் பாதுகாப்பு கருதி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க வேண்டும்

## கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஏ.எம். ஜெமில் கூறுகிறார்



சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு, எதிர்கால இருப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்த மக்கள் முன்வர வேண்டுமென கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கல்முனைத் தொகுதி முகவருமான ஏ.எம். ஜெமில் தெரிவித்தார்.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தில் தேர்தல் காரியாலயத் திறப்புவிழாவும், ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. அக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜெமில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"இரு ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளை நாம் மறந்துவிடக் கூடாது. நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்திருந்த வேளையில் நாட்டைப் பொறுப்பேற்க இப்போது போட்டியிடும் எந்த வேட்பாளரும் முன்வரவில்லை. ஆனால் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் அனுபவத்தைக் கொண்டு மக்களுக்காக நாட்டைப் பொறுப்பேற்றார்.

இன்று இலங்கை மீண்டும் அபிவிருத்தியை நோக்கிய பாதையில் பயணிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே களம் அமைத்துக் கொடுத்தார் என்பதை அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மை மக்களின் இருப்பை நிலைத்திருக்க செய்யக்கூடிய ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார்.

எனவே கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை சரியாக பயன்படுத்த வேண்டும்.

சிறுபான்மை மக்கள் இனவாத அரசியலால் பட்ட துன்பதுயரங்களை மறந்து விடக்கூடாது. அன்றைய காலத்தில் ஜே.வி.பியினர் செய்த அட்டூழியங்களை மறந்து விடமுடியாது. அதேபோன்றுதான் ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

எனவே மக்கள் சிந்தித்து தன்னலமற்ற அரசியல் அனபவமிக்க சாணக்கியம் நிறைந்த வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும்".

இவ்வாறு ஜெமில் தெரிவித்தார்.

**எம்.எப். றிபாஸ்...**
(பாலமுனை தினகரன் நிருபர்)

# முழு உலகையுமே நிலைகுலைய வைத்த செப்டம்பர்-11 பயங்கரவாதத் தாக்குதல்!



## மூவாயிரத்துக்கும் மேற்பட்டோரைப் பலிகொண்ட கொடூரச் செயலின் 23 ஆண்டுகள் பூர்த்தி இன்று

உலக வல்லரசுகளில் முன்னோடி என்ற அடையாளத்துடன் விளங்கி வந்த அமெரிக்காவின் அடித்தளத்தையே அசைத்துப் பார்க்கும் ஒரு சம்பவம் 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி நடந்தது.

அமெரிக்காவின் வடமேற்கு நகரங்களில் இருந்து கலிபோர்னியாவை நோக்கிச் செல்ல வேண்டிய நான்கு விமானங்கள் குறுகிய நேர இடைவெளியில் கடத்தப்பட்டு மிகப்பெரிய பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டன. உலக வர்த்தக மையக் கட்டடம், பாதுகாப்புத் துறையின் தலைமையிடமான பென்டகன் போன்ற முக்கியமான இடங்கள் தாக்குதலுக்கு இலக்காயின.

அமெரிக்காவின் மீதான தாக்குதல் நடந்து 23 ஆண்டுகள் ஆகின்றன.

அது பொஸ்டன் நகரம். அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையோரம் நியூயோர்க் நகருக்கு வடக்கே அது அமைந்திருக்கிறது. செப்டம்பர் 11ஆம் திகதி பொஸ்டன் நகர விமான நிலையத்தில் இருந்து கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்துக்குச் செல்வ தற்காகத் தயாராக இருந்தது அமெ ரிக்கன் எயார்லைன்ஸ் 11 என்ற விமானம்.

போர்ட்லேண்ட் நகரில் இருந்து பொஸ்டனுக்கு மற்றொரு விமானத்தில் வந்த முகமது அட்டா, அப்துல் அஜீஸ் அல்ஓமாரி ஆகிய இருவரும் இந்த விமானத்தில் பயணம் செய்தாக வேண்டும். அவர்களது நண்பர்களான வலீத் அல் ஷேஹ்றி, வெய்ல் அல்ஷேஹ்றி, சதாம் அல் சுகாமி ஆகிய மூவரும் ஒரு வாடகைக் காரைப் பிடித்து பொஸ்டன் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

காலை ஏழு மணியாக இன்னும் 8 நிமிடங்கள் இருந்தன. CAPPS எனப்படும் கணினி முறையில் தெரிவு செய்யப்படும் சோதனைகளைக் கடந்துதான் விமானத்துக்குப் போக முடியும். வெய்ல், வலீத் மற்றும் சதாம் அல் சுகாமி ஆகியோரை கூடுதல் பரிசோதனைக்காக CAPPS அமைப்பு தெரிவு செய்தது. ஆயினும் அவர்களிடம் இருந்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனால் 5 பேரும் விமானத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். விமானத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கையைத் தெரிவு செய்து அமர்ந்தனர்.

அது போயிங் 767 ரக விமானம். 8 விமானப் பணியாளர்களும் அன்று வந்திருந்தனர். மொத்தம் 81 பயணிகளுடன் விமானம் புறப்பட்டபோது மணி 7.59. பொஸ்டனின் லோகன் விமான நிலையத்தின் ஓடுபாதையில் சீறிப் பாய்ந்த விமானம், சில நிமிடங்களில் விண்ணில் பறக்கத் தொடங்கியது. 15 நிமிடங்களுக்குள்ளாக தரையில் இருந்து 26 ஆயிரம் அடி உயரத்துக்குச் சென்றுவிட்டது.

தலைமை விமானியான கப்டன் ஜோன் ஓகோனோவ்ஸ்கி, தரைககட்டுப்பாட்டு அறையில் இருந்து வந்த சில கட்டளைகளை பின்பற்றினார். சீட் பெல்ட்டுகளை அகற்றுவதற்கான நேரம். பணிப்பெண்கள் தங்களது சேவையைத் தொடங்குவார்கள்.

விமானத்தை 35 ஆயிரம் அடிக்கு கொண்டு செல்லுமாறு தரைக்கட்டுப்பாட்டு அறையில் இருந்து அறிவுறுத்தப்பட்டது. ஆனால் எந்தப் பதிலும் இல்லை. தொடர்ந்து முயற்சி நடக்கிறது, ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் சரியாக 8.14 மணியை ஒட்டிய நேரத்தில் விமானம் கடத்தப்பட்டதாக அமெரிக்க விசாரணை ஆணையம் முடிவுக்கு வருகிறது. அந்த நேரத்தில் இரு விமானப் பணியாளர்களை தீவிரவாதிகள் இருவர் ஆயுதங்களால் குத்திக் காயப்படுத்தியிருந்தனர்.

இந்தத் தகவல்களையெல்லாம் விமானப் பணிப்பெண்ணான பெட்டி ஓங் தன்னிடம் இருந்த எயார்ஃபோன் மூலமாக வடக்கு கரோலினாவின் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் முன்பதிவு அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு விமானம் கடத்தப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்.

"எங்களால் மூச்சு விட முடியவில்லை. விமானம் கடத்தப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன்" என்று அவர் கூறியதுதான் அமெரிக்கா மீதான பயங்கரவாதத் தாக்குதலுக்கான முதல் எச்சரிக்கை. அவர் பேசிய உரையாடலின் ஒலிப்பதிவு பின்னர் பொதுவெளியில் வெளியிடப்பட்டது.

பெட்டி ஓங் அளித்த தகவல் உடனடியாக தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கு பறந்தது. ஏற்கனவே தரைக் கட்டுப்பாட்டு மையம் விமானத்தைத் தொடர்பு கொள்ள இயலாமல் பதற்றத்தில் இருந்ததால், இந்தத் தகவல் கிடைத்ததும் விமானம் கடத்தப்பட்டதை உறுதி செய்தது. உலக வல்லரசான அமெரிக்காவின் விமானம் அதன் வான் எல்லையிலேயே கடத்தப்பட்டிருந்தது.

விமானம் வழக்கமாகச் செல்ல வேண்டிய பாதையில் இருந்து திரும்பியது. பொஸ்டன் தரைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் எவ்வளவோ முயன்றும் விமானிகளுடன் பேச முடியவில்லை. தொடர்பு முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் அந்த நேரத்தில் விமானத்தை இயக்கிக் கொண்டிருந்தவர் விமானியல்ல. பயணியாக விமானத்தில் ஏறிய அட்டா. விமானத்தை இயக்கும் பயிற்சி பெற்ற பயங்கரவாதி அவர்.

" பயணிகள் யாரும் நகரக்கூடாது. மீறினால் நீங்களும் விமானமும் ஆபத்தைச் சந்திக்க நேரிடும். அமைதியாக இருங்கள். விமான நிலையத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம்" என்று அட்டா எச்சரித்தது பயணிகள் யாருக்கும் கேட்கவில்லை. மாறாக பொஸ்டன் தரைக் கட்டுப்பாட்டு அறையில் இருந்தவர்களுக்கு அ து கேட்டது. அட்டா தவறான பொத்தானை அழுத்திப் பேசியதுதான் காரணம்.

பெட்டி ஓங் போலவே, மற்றொரு பணிப்பெண்ணான ஏமி ஸ்வீனியும் தனது எயார்போன் மூலமாக விமானத்துக்குள் நடப்பதை தரையில் இருந்த அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கூறிக் கொண்டிருந்தார்.

விமானப் பணிப் பெண்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளையெல்லாம் தாண்டி ஒரு பதற்றமான சூழலை மிகவும் பொறுப்பாகக் கையாண்டு கொண்டிருந்தனர். எயார்போன் மூலமாகத் தொடர்பு கொண்டிருந்த பெட்டி ஓங், ஏமி ஸ்வீனி ஆகிய இருவருமே தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல், விமானத்தின் சூழலை தரையில் இருந்த அதிகாரிகளுக்கு தெளிவாகக் விளக்கிக் கொண்டிருந்தனர்.

அட்டாவுடன் வந்தவர்கள் பயணிகளை மிரட்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் வெடிகுண்டுகள் வைத்திருப்பதாகக் கூறினர். ஆனால் கத்திகள், தடிகள் போன்ற ஆயுதங்களை மட்டுமே வைத்திருந்ததாகத் தெரியவந்தது.

8.41 மணிக்கு விமானம் நியூ யோர்க் நகரை நோக்கித் திரும்புவது உறுதிசெய்யப்பட்டது. கென்டி விமான நிலையத்துக்குச் செல்லக்கூடும் என்று கருதப்பட்டது. 8.44 மணிக்கு பெட்டி ஓங்கின் எயார்போன் இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஸ்வீனி தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். ஆனால் அவரது குரலில் பதற்றம் இருந்தது. "விமானம் மிகத் தாழ்வாகப் பறந்து கொண்டிருக்கிறது" என்றார்.

அந்த நேரத்தில் விமானத்தின் வேகம் மணிக்கு 740 கிலோ மீட்டர். கண்ணுக்கு எட்டும் தொலைவில் வர்த்தக மையக் கட்டடம் வந்துவிட்டது. பயங்கரவாதிகள் திட்டமிட்டபடி வர்த்தக மைய வளாகத்தின் வடக்குக் கட்டடத்தில் விமானத்தை மோதினர். 93 ஆவது மாடிக்கும் 99 ஆவது மாடிக்கும் இடையே அமெரிக்கன் எயார்லைன்ஸ் 11 விமானம் புகுந்தது. அப்போது மணி 8.46.

பெருஞ்சத்தத்துடன் நெருப்பும், கரும்புகையும் எழுந்தன. மக்களின் அபயக் குரல்களைக் கேட்க முடிந்தது. ஆனாலும் உள்ளே சிக்கியிருந்தவர்களால் தப்பிக்க இயலவில்லை. வேறு யாரும் உள்ளே சென்று காப்பாற்றவும் முடியவில்லை. ஏனென்றால், விமானத்தின் எரிபொருள் கட்டடத்தின் 22 ஆவது மாடி வரைக்கும் கீழ்நோக்கி வடிந்து கொண்டிருந்தது. இதனால் கட்டடம் முழுவதும் நெருப்பு பரவியிருந்தது.

இந்தச் சம்பவத்தை மக்கள் முழுமையாக உள்வாங்கிக் கொள்ளாத நிலையில், அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. அட்டா கூறியது போல கடத்தல்காரர்களின் கட்டுப்பாட்டில் சில விமானங்கள் இருந்தன. அவை இன்னும் பேரழிவை ஏற்படுத்துவதற்காக வானில் பறந்து கொண்டிருந்தன.

நான்கு அமெரிக்க விமானங்களை அல்கொய்தா பயங்கரவாத அமைப்பைச் சார்ந்த 19 பேர் கடத்தினார்கள். இரண்டு விமானங்கள் நியூ யோர்க் நகரத்தில் உலக வர்த்தக மையம் அமைந்திருந்த இரட்டைக் கோபுரங்களின் மீதும், ஒரு விமானம் வோஷிங்டனில் உள்ள அமெரிக்க ராணுவத் தலைமையிடமான பென்டகன் மீதும் மோதின. நான்காவது விமானம் கட்டுப்பாட்டை இழந்து பென்சில்வேனியாவில் உள்ள வெட்டவெளியில் தரையில் மோதி வெடித்துச் சிதறியது.

இந்தத் தாக்குதல்களில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 3,000 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பயங்கரவாதிகள் அனைவருமே பலியாகினர்.

# காலநிலை மாற்றம் குறித்து கவனம் செலுத்திய ஒரே ஒரு தலைவர் ரணில் விக்ரமசிங்க

காலநிலை மாற்றத்தினை பற்றி பார்ப்பதற்கு முன்பு காலநிலை என்பதற்கான வரைவிலக்கணத்தை தெரிந்து வைத்திருத்தல் என்பது அவசியமாகும். காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நீண்ட காலத்திற்கு இருக்கும் வானிலை நிலைமைகளே காலநிலை என அழைக்கப்படுகின்றது. அப்படியென்றால் காலநிலை மாற்றம் எனப்படுவது பத்தாண்டுகள் முதல் பல மில்லியன் வருடங்கள் வரை உண்டான காலகட்டங்களில் ஏற்படுகின்ற வானிலை மாற்றம் ஆகும். இது வரையில் எந்த ஒரு ஜனாதிபதியும் பெரிதும் இந்த காலநிலை மாற்றம் குறித்து கவனம் செலுத்தவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க, ஆட்சிக்கு வந்த பிறகு தான் இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக ருவன் விஜேவர்தனவினை நியமித்துள்ளார். அதன்பொருட்டு அவர் கூறியுள்ளதாவது, வலுசக்தித் துறையில் பசுமை முதலீடுகளை அணி திரட்ட இலங்கை தயார் என்று கூறியுள்ளார். இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பில் போதிய அளவிலான ஒரு அறிவு இல்லை என்றும் அதன் காரணமாக இலங்கையிலும் வெளிநாடுகளை போன்று மாணவர்கள் கல்வி கற்பதற்காக காலநிலை தொடர்பான ஒரு பல்கலைக்கழகத்தினை அமைப்பதற்கு வரலாற்றிலேயே இலங்கையில் முதல் தடவையாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக குறிப்பிடுவோமாக இருந்தால் இலங்கையில் 2004ஆம் ஆண்டு சுனாமி எனும் இயற்கை பேரனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் மட்டக்களப்பில் கல்லடி பாலத்தில் பாம்புகள் எல்லாம் குவியலாக இருந்ததாம். அது மட்டுமின்றி கரையோரத்தில் மீன்கள் எல்லாம் கரையொதுங்கினவாம். ஆனால் மக்களுக்கு இது தொடர்பில் போதிய அளவு அறிவின்மை மற்றும் முன்கூட்டியே அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் எந்த விதமான முன் எச்சரிக்கையும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் இப்போது காலநிலை மாற்றம் குறித்து பெரிதும் கவனம் செலுத்தப்படுகின்றமையால் இனி வரும் காலங்களில் அனர்த்தத்திற்கு முன் எச்சரிக்கை கொடுக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. அடுத்ததாக நாம் காலநிலையால் உருவாகியுள்ள தாக்கம் பற்றி பார்ப்போமானால் தற்போதைய காலகட்டத்தில் இலங்கையில் காலநிலையினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களாக எப்போதும் இல்லாத அளவுக்கு வரட்சியானது நிலவி வருகிறது. அதுமட்டுமின்றி இலங்கையில் எப்போதும் குளிராக இருக்கும் மலையக மண்ணிலும் தற்போதைய காலகட்டத்தில் வரட்சி மற்றும் சூடு அதிகமாகவே காணப்படுகிறது. மொனராகலை, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய வலயங்கள் எச்சரிக்கை வலயங்களாக காட்டப்பட்டுள்ளன. இந்த வரட்சி நிலவும் காலப்பகுதிகளில் அதிகமாக நீர் அருந்துதல் அவசியம் ஆகும்.

**லி.சிவகஜன்...**

# வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த உற்சவம்



திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி வருடாந்த உற்சவம் கடந்த 04.09.2024 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இறுதிநாளான 18.09.2024 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவுபெறவிருக்கின்றது.

வெருகலம்பதி கொடியேறியதும் பக்தர்கள் பாதயாத்திரை செய்வது வழமையாகும். மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த பல சமய அமைப்புக்களும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

பக்தர்கள் சின்னக்கதிர்காமம் என்றழைக்கப்படும் தில்லை மண்டூர் ஸ்ரீ முருகன் பதியிலிருந்து பாதயாத்திரையாகப் புறப்பட்டு குறித்த சில ஆலயங்களில் தங்கி தரிசித்து, இறுதியாக வெருகலம்பதியை அடைகின்ற நிகழ்வு இக்காலப்பகுதியில் இடம்பெறுகின்றது.

நாராயணபிள்ளை நாகேந்திரன்
ஓய்வுநிலை அதிபர் - களுவாஞ்சிகுடி

# மனித வளர்ச்சிப் பயணத்தின் அடிப்படையாக விளங்கும் கல்வியும் சமூகமயமாக்கலும்

மனிதவளர்ச்சிப் பயணத்தில் கல்வியும் சமூகமயமாக்கலும் இரட்டைத் தூண்களாகக் காணப்படுகின்றன. அவை நம் வாழ்க்கையையும் சமூகக் கட்டமைப்பையும் வடிவமைப்பதுடன், நவீன உலகின் சிக்கல்களை வழிநடத்த தனிநபர்களைத் தயார்படுத்தி சமூகஒற்றுமை மற்றும் தனிநபர்களின் வளர்ச்சியைத் தூண்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தஅடிப்படையில்,கல்வியானதுஅறிவுசார் மற்றும் தொழில்முறை வெற்றிக்குத் தேவையான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் அணுகுமுறைகளை வழங்குகின்றது. கட்டமைக்கப்பட்டதொரு வாழ்க்கைமுறையையும் அளிக்கின்றது.

சமூகமயமாக்கல் என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றதொரு செயன்முறையாகும். இதனூடாக எமது சமூகச் சூழலில் திறம்பட தொடர்பு கொள்வதற்கு அவசியமான விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளை கற்றுக் கொள்கின்றோம்.

ஓர் அடிப்படைச் சமூகத் தொடர்பாக தாய்_சேய் தொடர்பைக் குறிப்பிடலாம். இதற்கடுத்து ஒரு குழந்தை தன்னைச் சுற்றிக் காணப்படும் குழுக்களுடன் தொடர்பு கொள்ளத் தொடங்குகிறது. தற்காலக் கல்வி தனிக்குழந்தையை மையமாகக் கொண்டதன்று. சமூகத்திலிருந்து வளரும் குழந்தையையே மையமாககொண்டதாகும் என்னும் கருத்தைக் கல்விச் சமூகவியல் வலியுறுத்துகிறது.

ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு விதத்தில் சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்படுகின்றான். அவற்றில் சாதகமான காரணிகளும் செல்வாக்குச் செலுத்தும், பாதகமான காரணிகளும் செல்வாக்குச் செலுத்தும். சமூகமயமாக்கலின் போது எமக்கு பல்வேறு விதமான



நன்மைகள் ஏற்படுகின்றன. அதாவது தனிநபரை சமூகத்திற்கேற்ற விதத்தில் மாற்றியமைத்தல், எமது சமூகச் சூழலை உணர்ந்து அதன்படி செயற்பட முடியுமானதாக இருத்தல், நல்ல நபர்களோடு சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்த உதவுதல், ஒவ்வொரு தனிநபரும் தங்களது ஆற்றல்களை வளர்த்து தங்களை அடையாளம் காண உதவக்கூடியதாக அமைதல் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

சமூகமயமாக்கலில் குடும்பங்களும் பாடசாலைகளும் மிகப்பெரிய பங்கை வகிக்கின்றன. அவற்றில் குடும்பங்களானது, ஒவ்வொரு தனிநபரின் நடத்தைப் பாங்குகள், மனவெழுச்சிகள், கருத்துப் பரிமாற்றங்கள், தொடர்பாடல்கள், சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கப் பழகுதல் போன்றவைகளும், பாடசாலைகளானது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்திசெய்தல், தலைமைத்துவப் பயிற்சியை விருத்தி செய்தல், பல்கலாசார மக்களை, அவர்களது கலாசாரங்களை இணங்கண்டு மதித்தல், விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, குழுவாக இயங்கச் செய்தல் போன்றவைகளாகும்.

சமூகமயமாக்கலின் ஊடாக சமூகத்தை இணங்காணல், ஒன்றுபட்டு வாழ்தல், சமூகத் தேவைகளைக் கண்டறிந்து உதவிபுரிதல், சமூக சூழ்நிலைகளுக்கேற்ப தங்களை மாற்றியமைத்து செயற்படல், சமநிலைத்தன்மை வளர்ச்சியடைதல் போன்றவற்றை சமூகமயமாக்கலின் முக்கியத்துவங்களாகக் குறிப்பிடலாம்.

சமூகமயமாக்கலின் செயற்பாட்டில் கல்வியானது மிகமுக்கிய பங்கு வகிக்கின்றது. பாடசாலைக் கல்வியைவிட அனுபவக் கல்வி என்பது பலஅறிவுரைகளை எமக்குக் கற்றுத் தருவதுடன், எமது நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களுடனான தினசரி தொடர்புகள் மூலம் சமூகநெறிமுறைகள், ஒத்துழைப்புக்கள் மற்றும் மோதல் தீர்வுகள் என்பவற்றைக் கற்றுக் கொள்ள முடிகின்றது. இது எமது உள்ளார்ந்த திறன்கள், அறிவுசார் மற்றும் சமூகம்சார் செயற்பாடுகளை ஊக்குவிப்பதை எம்மால் அவதானிக்க முடியும்.

கல்வி நடவடிக்கைகள் சமூகமயமாக்கல் என்கின்ற விடயத்துடன் தொடர்புபட்ட வண்ணமே உள்ளன. அந்த வகையில், கல்வி சார் சமூகமயமாக்கலின் போது பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதில் செயற்கை நுண்ணறிவின் பங்குஅளப்பரியது. இதுதனிப்பட்ட கற்றல் அனுபவங்கள் முதல் நிர்வாகப் பணிகள் வரை கல்வியில் அதிக பங்கு வகிப்பதைக் காண முடிகின்றது. செயற்கை நுண்ணறிவால் வடிவமைக்கப்பட்ட கல்வியானது ஆதரவு மற்றும் செயற்றிறனை வழங்க முடியுமானதாக இருந்தாலும்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான உறவுகள் மற்றும் சமூகத் தொடர்புகள் போன்ற கல்விசார்பான மனித அம்சங்களோடு தொடர்பான செயற்பாடுகளில் அது தாக்கம் செலுத்தக் கூடியதாகவே உள்ளது.

சமுதாயத் தேவைகள், பிரச்சினைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாடசாலை மற்றும் கல்வி நிலையங்கள் செயற்பட வேண்டும். சமுதாய வாழ்க்கையில் சுருங்கிய பதிப்பாக அதன் கல்விச் செயற்பாடு காணப்பட வேண்டும். அதன் செயல்முறைகள் சமுதாயத்தில் காணப்படும் செயல்களுக்கு ஒப்ப அமைய வேண்டும். மற்றும் சமுதாய வாழ்க்கையில் காணப்படும் எல்லா சிறப்புப் பண்புகளையும் கூறுகளையும் பிரதிபலிப்பதாக அவை அமைய வேண்டும்.

எனவேதான் பயனுள்ள கல்விச் செயற்பாடுகளை வளர்ப்பதற்கும், நேர்மறையான சமூகவிளைவுகளை ஊக்குவிப்பதற்கும் கல்வி மற்றும் சமூகமயமாக்கல் அம்சங்களைப் புரிந்து கொள்வது அவசியம்.

நஸ்ஹத் நௌஸாத்
இரண்டாம் வருட சிறப்புக்கற்கை மாணவி
கல்விமற்றும் பிள்ளைநலத்துறை
கிழக்கு பல்கலைக்கழகம்

# நற்பிட்டிமுனை சமூகசேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிய அலுவலகம்



நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் அலுவலகம் நற்பிட்டிமுனை – 05, 216 ஜும்ஆ பள்ளிவாசல் வீதியில் Natpiddimunai NASSDO அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.

NASSDO அமைப்பின் தலைவர் ஐ.எல்.ஏ. குத்துஸ் தலைமையில் விழா நடைபெற்றது. அமைப்பின் செயலாளர் வீ.ரீ.கனூன் தலைமையுரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக நற்பிட்டிமுனை கமு/லாபிர் வித்தியாலய அதிபர் சீ. முகம்மட் நஜீப், கல்முனை போக்குவரத்து சபை முகாமையாளர் வீ. ஜஹுபர், தென்கிழக்கு பல்லைக் கழக ஓய்வுநிலை உத்தியோகத்தர் எஸ்.ஜமால்தீன், நற்பிட்டிமுனை – 05 கிராம உத்தியோகத்தர் மௌலவி. ஏ.எல். கியாஸ், நற்பிட்டிமுனை ஜனாஸா நலன்புரி அமைப்பின் அங்கத்தவர்கள், Natpiddimunai NASSDO அமைப்பின் உயர் பீட உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.

எம்.எப். நவாஸ்
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹாயாகம் நாளை

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹா யாகம் நாளை வியாழக்கிழமை அதிகாலை 6 மணி முதல் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகும். தென்மராட்சி இந்து அந்தண குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன் விசேட குருமார்கள் இந்த மஹா யாகத்தில் பங்கேற்கவுள்ளனர். இந்த மஹாயாகத்தில் விசேட 108 திரவிய ஹோமமும் விசேட 108 திரவிய அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

## கிணற்றில் குளிக்க சென்றவர் சடலமாக மீட்பு

(யாழ். விசேட நிருபர்)

கிணற்றில் குளிக்க சென்ற குடும்பஸ்தர், கிணற்றடியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியை சேர்ந்த செல்வராசா கார்த்தீபன் (வயது 35) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது தோட்டத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை வேலை செய்த பின்னர், காலை வீட்டுக்கு வந்து குளிக்க செல்வதாக கூறி கிணற்றடிக்கு சென்றுள்ளார்.

குளிக்க சென்றவரை நீண்ட நேரமாகியும் காணாத காரணத்தால் அவரை தேடி அவரது மனைவி சென்ற போது, கிணற்றடியில் மூச்சுப் பேச்சின்றி கிடந்துள்ளார். உடனடியாக அவரை மீட்டு தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# வடக்கு ஆளுநருடன் EU தேர்தல் கண்காணிப்பு குழுவினர் சந்திப்பு

கரவெட்டி தினகரன் நிருபர்



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று முன்தினம் (09) சந்தித்து கலந்துரையாடினர். வடக்கு ஆளுநரின் யாழ். உத்தியோகபூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான வடமாகாணத்தின் கள நிலவரங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பென ஆளுநர் இதன் போது தெரிவித்தார். அமைதியான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த ஆளுநர், மக்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினரிடம் தெளிவுப்படுத்தினார்.

# வடக்கின் உதயம்

## தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ திருமஞ்ச திருவிழா



(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ திருமஞ்ச திருவிழா நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

மாலை இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, வசந்தமண்டப பூஜை இடம்பெற்று உள் வீதியுலா வந்த துர்க்கை அம்மன் மஞ்சத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

மகோற்சவ திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது.

# ஜனாதிபதியின் பொருளாதார திட்டங்களை முன்னோக்கி கொண்டு செல்ல சந்தர்ப்பம் வழங்கவேண்டும்

(யாழ். விசேட நிருபர்)



நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் பொறுப்பேற்க முன்வராதவர்கள் தற்போது நாட்டை தம்மிடம் தருமாறு கோரி வாக்கு கேட்டு வருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் கிறிஸ்தவ விவகார யாழ். மாவட்ட அமைப்பாளர் விக்டர் ஸ்டான்லி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நான் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். அமைப்பாளராக கடந்த காலங்களில் செயற்பட்டேன். நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்ட போது பிரதமராக சஜித் பிரேமதசாவை பதவியேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அவர் அப்போது அதனை ஏற்கவில்லை. பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று, நாட்டை முன்னோக்கி கொண்டு சென்றார்.

அன்று தொடக்கம் நான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வருகிறேன். தலைவர் என்பவர் நாட்டை எந்த சூழலிலும் பொறுப்பேற்று முன்னோக்கி செல்ல வேண்டும்.

சஜித் பிரேமதாசவுக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்த போது அவர் அதனை ஏற்கவில்லை. தற்போது நாட்டை தன்னிடம் தருமாறு கோருகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி எடுத்து செல்லும் தனது திட்டங்களுக்கு இன்னமும் 05 வருடங்கள் தேவை என கோரியுள்ளார். எனவே அவருக்கு சந்தர்ப்பம் நாங்கள் கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## தனிமையில் வசித்து வந்த சட்டத்தரணி சடலமாக மீட்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் தனிமையில் வசித்து வந்த மூத்த சட்டத்தரணியொருவர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியை சேர்ந்த கனக சபாபதி நமநாதன் (வயது 86) எனும் சட்டத்தரணியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மனைவி கடந்த சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து இவர் வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வீட்டில் இவரது நடமாட்டத்தை காணாத அயல்வீட்டுக்காரர்கள் சென்று பார்த்த போது அவர் நிலத்தில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதனையடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் நெடுங்கேணியிலுள்ள வர்த்தக நிலையங்கள், பொது சந்தைப்பகுதிகளுக்கு நேரடியாக சென்று தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதன் போது துண்டுப்பிரசுரங்கள் வழங்கியதோடு அவருக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்.

# மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது; பொலிஸார் தீவிர விசாரணை

(ஓமந்தை விசேட நிருபர்)

புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் மரக்குற்றிகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் (09.09.2024) கைது செய்யப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியிலுள்ள வீடொன்றில் மரக்குற்றிகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மரக்குற்றிகளை மீட்டதுடன், மரக்குற்றிகளை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளும், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரும் நேற்றையதினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 40 வயது மதிக்கத்தக்க சிவநகர் பகுதியில் வசிப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கொட்டாஞ்சேனை ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் இன்று ராதாஸ்டமி விழா



கொட்டாஞ்சேனை ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் இன்று செப்டம்பர் 11ஆம் திகதி புதன்கிழமை ராதாஸ்டமி விழா பக்திபூர்வமாகக் கொண்டாடப்படுகிறது.

ராதாதேவி பிறந்த நன்னாள் ராதா அஸ்டமி, ராதாஷ்டமி, மற்றும் ராதா ஜயந்தி என்று பக்தர்களால் கொண்டாடப்படுகிறது.

பக்தர்கள் இன்று காலைமுதல் விரதமிருந்து நண்பகல் விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். இதன்போது விஷேட பூஜை, அபிஷேகம், கீர்த்தனை என்பன இடம்பெறும். அதன்பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

# ஸ்ரீ ரேணுக்கா பரமேஸ்வரி இராக்குரிஷி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

உடப்பு குறூப் நிருபர்



உடப்பு ஆண்டிமுனை இறால் பண்ணை அருகில் அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ ரேணுக்கா பரமேஸ்வரி இராக்குரிஷி அம்மன் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்ட பந்தன ஏக குண்ட பக்க்ஷ கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா எதிர் வரும் (12)திகதி வியாழக்கிழமை காலை 10.45 க்கு ஆரம்பமாகவுள்ளது. புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 5மணி வரை பக்தர்களினால் அம்மனுக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது. பக்தர்கள் வந்து இராக்குரிஷி அம்மனின் அருளைப் பெற்றுக் கொள்ளும்படி ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகின்றனர்.

# இன்றைய பலன்கள்

(11.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**



உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைக்கும் முயற்சி கைகூடும். கலைஞர்களுக்கு செல்வாக்கு மேலோங்கும்.

**ரிஷபம் :**



பொருளாதார நிலை உயரும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்கால நலன் பற்றிய பயம் அகலும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மிதுனம்:**



பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு அதை விரிவுபடுத்தவும் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யவும் எடுத்த முயற்சி கைகூடும்.

**கடகம்:**



பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேல் இடத்திலிருந்து நல்ல தகவல் வரலாம். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் படிப்படியாக குறையும்.

**சிம்மம்:**



பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு நண்பர்களால் நல்ல காரியம் நடைபெறும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த லாபம் எளிதில் கிடைக்கும்.

**கன்னி:**



வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு லாபம் குவியும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவி கிடைக்கும். கலைஞர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும்.

**துலாம்:**



பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்காலம் பற்றிய பயம் அதிகரிக்கும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:**



பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவுறும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு வருமான உயர்வுக்கு வழி பிறக்கும்.

**தனுசு:**



வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு அதை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலிடத்தில் இருந்து ஆதரவு திருப்தி தரும்.

**மகரம்:**



உத்தியோகத்தில் பணி நிமிர்த்தம் பற்றிய தகவல் மகிழ்ச்சி தரும். பொதுவாக இக்காலத்தில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும்.

**கும்பம்:**



பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேல் இடத்தில் ஆதரவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை கரங்களில் புரளும்.

**மீனம்:**



வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும் .உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் உண்டு.

## இராஜாங்க அமைச்சர்கள் ஐவர்...

அமைச்சர் தேனுக விதானகமகே, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ. சானக ஆகியோரே இவ்வாறு உடனடியாக அமுலுக்குவரும் வகையில் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 47(3) (அ) பிரிவின் கீழ், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## மட்டு. மாவட்டத்திலிருந்தும்...

மட்டக்களப்பு நகரில், நேற்று (10) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்த அவர், மட்டக்களப்பில் இருந்தும் தலைவர்கள் உருவாகபட வேண்டும் எனவும் அதற்கு தான் உதவி செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய நாமல் ராஜபக் ஷ,

கிழக்கு மாகாணம் எனது தந்தையின் காலத்திலேயே அதிகமான அபிவிருத்திகளை கண்டது. தெற்கில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகளைப்போன்று கிழக்கிலும் மேற்கொள்ளப்படவேண்டும். எமது அரசாங்கத்தில் அதிவேக வீதிகள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் கொண்டுவரப்படுமென உறுதியளிக்கின்றேன். அத்துடன், விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் போன்றனவும் ஏற்றுமதியூடாக உலக சந்தையில் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படும். இந்த நாட்டை அபிவிருத்தியடைந்த நாட்டாக மாற்றுவதே எமது தேவை. நாட்டின் இளைஞர்களுக்கு பலமான எதிர்காலத்தை உருவாக்குவதே எமது நோக்கம். இளைஞர்களுக்கான நல்லதொரு எதிர்காலத்தை என்னால் வழங்க முடியும் என உறுதியளிக்கின்றேன். இலங்கையிலுள்ள கலாசாரங்களை, பௌத்த கலாசாரத்துக்கு நிகராக கிழக்கு மாகாண கலாசாரங்களையும் என்னால் பாதுகாக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

## தேர்தல் விஞ்ஞாபனங்கள்...

ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர இதனைக் குறிப்பிட்டார். மேலும், நாட்டுக்கு ஏற்ற முறையான வேலைத்திட்டம் கொண்ட ஒரேயொரு விஞ்ஞாபனம் தனது சர்வஜன அதிகாரத்தின் விஞ்ஞாபனம் மட்டுமே என அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டு. நகரில் 06 வயது சிறுமி...

நடத்தியிருந்தது. இதில் சாதனைப் படைத்த சிறுமியான காவ்யஸ்ரீ, மட்டக்களப்பு பொறியாளர் சுப்பிரமணியம் மற்றும் வைத்தியர் ஹிசாந்தினியின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## உங்கள் பிள்ளைகளின் ...

குறிப்பிட்டார். மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், அண்மைய பொருளாதார வீழ்ச்சியையடுத்து மக்கள் படும் துன்பத்தைப் போக்க சஜித்தோ அல்லது அநுரவோ முன்வரவில்லை.

உலகெங்கிலுமுள்ள அரச தலைவர்களை சந்தித்து உரம், எரிபொருள் கேட்டபோது சஜித்தும் அநுரவும் தேர்தல் நடத்துமாறு கோரினர். மக்களின் வலிக்கு மத்தியில் தேர்தல் நடத்துமாறு கோரியும் வேலைநிறுத்தம் நடத்தியும் நாட்டை சீர்குலைக்க முயன்ற தலைவர்களை நம்ப முடியாது.

எனவே, சிரமப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தி அபிவிருத்தியடைந்த நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் கைகோர்க்க வேண்டும்.

## ADB வங்கியிடமிருந்து கடன்பெற...

கொள்கை அடிப்படையிலான கடனை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு 25.09.2023 திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அமைச்சர், மேலும் தெரிவிக்கையில், 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் முதல் உப திட்டத்துக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உபவேலைத்திட்டத்தின் கீழ், 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக முற்கூட்டிய 12 கொள்கைச் செயற்பாடுகளை பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. தற்போது அச்செயற்பாடுகளில் அதிகமானவை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

இதற்கமைவாக, நிதியத்தின் இரண்டாவது உப திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெறுவதற்கு நிதி, பொருளாதார ஸ்தீரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் கூறினார்.

## இறுதி முடிவு இன்று அல்லது நாளை...

கருத்த தெரிவித்த அவர், கட்சி எடுத்த தீர்மானத்துக்கமைய, எவ்வாறான திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்யவேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடியதாக குறிப்பிட்டார். மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி தேர்தலில் எமது மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், என்ன அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் எங்களுடைய கட்சி ரீதியான கொள்கை, இனப்பிரச்சினைக்கான தீர்வு, சமஷ்டி, சுயநிர்ணய அடிப்படையிலான தீர்மானங்கள், அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளராகவுள்ள சஜித் பிரேமதாசாவின் கருத்துக்கள் மற்றும் தேர்தல் அறிக்கை விடயங்களை கருத்திற்கொண்டு, அதில் எமக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இணக்கம் ஏற்படக்கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி, எதிர் வரும் 14 அல்லது 15ஆம் திகதிக்கு முன்னதாக பொதுமக்களுக்கு அறிக்கையொன்றை வெளியிடவுள்ளோம்.

அந்த அறிக்கையில், கொள்கை மற்றும் இனத்தின் விடுதலை அடிப்படையாகவும் சஜித் பிரேமதாசாவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் சார்பாகவும் எமது கருத்துக்கள் என்ன என்பதை வெளியிடவுள்ளோம். ஆகவே, ஐவர் அடங்கிய குழு மீண்டும் கூடி இந்த அறிக்கையை வெளியிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மேலதிக வகுப்பு, கருத்தரங்குகள்...

புலமைப்பரிசில் பரீட்சை யை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்டுவரும் நிலையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சைக்கான ஊகத்தின் அடிப்படையிலான வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரங்களை அச்சிடுவதற்கும் வெளியிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பரீட்சை வினாப்பத்திரத்திலுள்ள வினாக்களை அல்லது அதற்குச் சமமான வினாக்களை வழங்கப்படுமென சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள் மூலம் வெளியிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதற்கும் பகிர்வதற்கும் முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மாலைத்தீவில் அந்நியச் செலாவணி...

கடுமையான நிதி நெருக்கடி காரணமாக, உலக முஸ்லிம் நாடுகளின் நிதி நடைமுறைமைகளுக்கமைய வெளியிடப்பட்ட கடன் (Rf;F Sukuk (bonds) Islamic Bonds) பத்திரங்கள் கடனை செலுத்துவதில் தவறிழைக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 2026 ஆம் ஆண்டில், மாலைத்தீவு 500 மில்லியன் டொலர் சுக்குக் கடனை செலுத்த வேண்டியுள்ளது. மாலைத்தீவில் ஜுன் மாதத்தில், மொத்த இருப்புகளில் 395 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால் பயன்படுத்தக்கூடிய இருப்பு சுமார் 45 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

தற்போது, மாலைத்தீவு நிதி ஆணைக்குழு இந்தியாவுடன் 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## G.C.E O/L பெறுபேறுகள் ...

கொழும்பில் நேற்று(10) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை இதனைக் குறிப்பிட்டார். கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை ஆராயும் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார்.

## மில்கோ பால் மா...

விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 400 கிராம் பால் மா பக்கற்றொறின் விலை 75 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 1,050 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக மில்கோ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## 'மஹபொல' கொடுப்பனவு...

தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

2015 ஆம் ஆண்டு முதல் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல மற்றும் கல்வி உதவித் தொகைகள் அதிகரிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோரால் கூட்டாக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் இந்த கொடுப்பனவுகளை மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை அமைச்சரவை கவனத்திற்கொண்டதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் புலமைப்பரிசில் கொடுப்பணவு தொகை அதிகரிக்கப்பட்ட வில்லை. ஆனால், இக்காலத்தில் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும், 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன், இதுதொடர்பாக பல கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர், மஹாபொல புலமைப்பரிசில் தவணைக் கொடுப்பனவு 5,000 ரூபாவாகவும், உதவித் தொகை 4,000 ரூபாவாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச ஊழியர்...

எனவே, இவ்வாறான உணர்வுபூர்வமான தகவல்களை பரப்பி, பொது மக்களை தவறாக வழிநடத்தும் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடாமல் அனைவரும் உண்மைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை பரப்ப வேண்டாமென அமைச்சர் கேட்டுக்கொண்டார். 2024 மே மாதம் 27 ஆம் திகதியிட்ட எண் 24/பல்வகை (020) என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், அரச சேவையில்பல்வேறு சேவைக் குழுக்களுக்கு இடையேவுள்ள சம்பள முரண்பாடுகளை ஆய்வு செய்து, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் உள்ளடக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய வகையில், அரச சேவையின் அனைத்து பிரிவுகளினதும் சம்பளம், ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து, மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை வழங்க ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்த நிபுணர் குழுவானது அரச துறையின் 81 பிரதான தொழிற் சங்கங்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி, உரிய தகவல்களை ஆய்வுசெய்து இடைக்கால அறிக்கையை தயாரித்துள்ளது.

இது தொடர்பாக குழுவின் தலைவர் உதய ஆர். செனவிரத்ன தெளிவுபடுத்தும்போது, இந்த அறிக்கை தயாரிப்பில், மேலும் பல தொழிற்சங்கங்கள், பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் சுமார் 391 தனிநபர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளும் ஆய்வு செய்யப்பட்டு தகவல்கள் பெறப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள அரச நிதி வாய்ப்புகள் மற்றும் அரச துறை ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கருத்திற்கொண்டு,அரசசெலவை முகாமைத்துவம் செய்வதற்கான முன்மொழிவுகளுடன், ஏற்கனவே உள்ள ஊதிய கட்டமைப்புகளை திருத்துவதற்கான அளவுகோள்கள் மற்றும் தரநிலைகள் அத்துடன் அரச செலவுகளை குறைத்தல் மற்றும் வருமானம் ஈட்டும் மூலோபாயங்களை உள்ளடக்கிய கொள்கை ரீதியிலான கட்டமைப்பை இந்த இடைக்கால அறிக்கை பரிந்துரைக்கின்றது. அதன்படி, அமைச்சரவைப் பத்திரம் எண் 24/1609/601/097, ஆன "அரச சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகளைக் கையாள்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை" நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் 12.08.2024 ஆம் திகதியன்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த இடைக்கால அறிக்கையை, அமைச்சரவை பரிசீலித்து கலந்துரையாடிய பின்னர், அந்த இடைக்கால அறிக்கையின் பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள (3.1) முதல் (3.18) வரையிலான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான அங்கீகாரம் அளித்தல் மற்றும் மேற்படி இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் உட்படுத்தி நடைமுறைப்படுத்தும் வகையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி அனைத்து அரச ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை திருத்தத்திற்கு உட்படும் வகையில்) ரூ.25,000/ மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை வழங்கல்,
- அரச சேவையில் குறைந்தபட்ச ஆரம்ப மாதாந்தச் சம்பளம் 24% முதல் 50% 60% வரையில் அதிகரிப்பதோடு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்த சம்பளம் ரூ. 55,000 ஆக மாற்றி அதற்கேற்ப ஏனைய அனைத்து பதவிகளுக்குமான அடிப்படை சம்பளத்தை மாற்றியமைத்தல், வர்த்தக அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தவிர அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இந்த புதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு முறையை நடைமுறைப்படுத்துதல்,
- 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளுக்கு அவர்களுக்கு உரிய சம்பள அதிகரிப்புகளை வழங்கி அவர்களின் ஓய்வூதியங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான முரண்பாடுகளைத் தீர்த்தல்,
- ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, கடமையில் உள்ள அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் 50%க்கு சம்மாகும் வகையில் ஜனவரி 2025 முதல் வழங்குதல்,
- தற்போதுள்ள வரிக் கொள்கைகளுக்குள் இந்தச் செலவுகளை நிர்வகிப்பதற்கு உட்பட்டு, இந்த சம்பள முறை மற்றும் முன்மொழியப்பட்ட சம்பள முறை 2025 ஜனவரி 01 முதல் நிதி வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு படிநிலையாக செயல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இதன்படி, மேற்படி நிபுணர் குழு தமது இறுதி அறிக்கையை 03.09.2024 அன்று ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதுடன், குறித்த அறிக்கையின் 01 முதல் 08 வரையான பரிந்துரைகளால் முன்வைக்கப்பட்டுள்ள அரச சேவைகளின் வகைப்பாடு, அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள், ஓய்வூதிய வேறுபாடுகளை நீக்குதல், விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் மற்றும் அக்ரஹார செலுத்தல்கள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் திருத்தங்கள் 01.01.2025 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கை ரீதியிலான அங்கீகாரத்தை வழங்குதல், அந்த பரிந்துரைகள் 2025 வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்வாறான உணர்வுபூர்வமான விடயங்களை வெளியிடும் போது மக்களை தவறாக வழிநடத்தும் பொய்யான செய்திகளை வெளியிடாமல் உண்மைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை மக்கள் மயப்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்வதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சட்டத்தின் முன் ...

02ஆம் பக்கத்தொடர்

நாடு ஒரு முக்கிய காலகட்டத்தில் உள்ளது என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முறை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகவோ அல்லது பொதுஜன பெரமுன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளராகவோ போட்டியிடவில்லை.

அவர் நாட்டு மக்களின் நன்மை கருதி சுயேட்சை வேட்பாளராக இம்முறை போட்டியிடுகின்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்போதுமே வெற்றியின் பக்கம் அதுவும் சரியான பக்கமே இருந்துவந்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காலத்தின் முஸ்லிங்களுக்கு பாரிய துரோகம் இழைக்கப்பட்டது. எமது அமைச்சினால் அது தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து வெளியிட்டோம். முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கோரினோம். நடந்தது தவறு என்ற உறுதி மொழியை அவர்களுக்கு வழங்கமுடிந்துள்ளது.

இவ்வாறு முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைத்த அனைவரையும் சட்டத்தின் முன்நிறுத்தி தண்டிப்பது எமது பொறுப்பாகும். மலையக மக்களுக்கான வீட்டுப் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றோம். இரண்டு வருடத்துக்கு முன்னர் ஒரு வீட்டுக்கான செலவு 9,50,000 ரூபாவாகயிருந்து. தற்போது அந்த செலவு 32 இலட்சம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

இந்த வீட்டுத் திட்டம் நடக்காதென அனைவரும் நினைத்தனர். அதனை நாங்கள் நிறைவேற்றுவோம். இம்முறை தேர்தலில் மக்கள் எமது பக்கம் நிற்கவேண்டும். ஏனெனில் மக்கள் பக்கமே நாம் நிற்கின்றோமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவ்வாறு கூறியது மட்டுமின்றி செயலில் காட்டியுள்ளார். ஒரு காலகட்டத்தில் நாமும் அவருக்கெதிராக செயற்பட்டிருக்கின்றோம். எனினும், தற்போது அவருக்கு ஆதரவு வழங்கி வருகின்றோம். இம்முறை தேர்தலில் மக்கள் சிந்தித்து முடிவெடுக்கவெண்டும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி மக்கள்அனைவரும் இணைந்து ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வோம். கட்சிக்கான ஜனாதிபதியன்றி நாட்டு மக்களுக்கான ஜனாதிபதியை நாம் தெரிவு செய்யவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊடகத்துறை பற்றிய....

02ஆம் பக்கத்தொடர்

அத்துடன், ஊடகத்துறையில் மேற்கொள்ளப்படவேண்டியசீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகள் போன்றவை உள்ளடக்கப்பட்ட இந்த அறிக்கை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை, நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமும் கையளிக்களவுள்ளதாக தர்மசிறி லங்காபேலி இதன்போது தெரிவித்தார்.

## பெருந்தோட்டத் ...

02ஆம் பக்கத்தொடர்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான அடிப்படை நாட் சம்பளமான 1,350 ரூபாய் முதற்கட்டமாக நேற்று (10) வழங்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 350 ரூபாவையும் பெற்றுக் கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுமெனவும் செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 1,350 ரூபாவை அடிப்படை சம்பளமாக வழங்க பெருந்தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் தினத்தன்று...

02ஆம் பக்கத்தொடர்

எனவே, பொதுமக்களின் சுகாதார உரிமைக்கும் சுகாதார ஊழியர்களின் வாக்களிக்கும் உரிமைக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படக்கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பாக, சுகாதார அமைச்சுக்கும், பொது நிர்வாக அமைச்சுக்கும் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும், இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என ரவி குமுதேஷ் மேலும் தெரிவித்திள்ளார்.

## யாழ். மாணவியை...

02ஆம் பக்கத்தொடர்

இதேவேளை, கின்னஸ் சாதனை படைத்த மாதங்கியை, அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக அழைத்து சாதனைச் சான்றிதழைப் பார்வையிட்டு மாணவியை பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை முடிவுகள்




***01. இலங்கையின் நிதித்துறை உறுதிப்பாடு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளல்***

இலங்கையின் நிதித்துறை உறுதிப்பாடு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 02 உபவேலைத்திட்டங்களின் கீழ் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கடன் தொகையை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக 2023.09.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஆசிய அபிவிருத்தி வங்கியிடம்இலங்கையின் நிதி துறையின் உறுதிப்பாடு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் இரண்டாம் உபவேலைத்திட்டத்தின் கீழ் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***02. மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளல்***

2015ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பல படிமுறை நிதியிடல் வசதியின் கீழ் மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முக்கிய 03 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குறித்த கடன் ஒப்பந்தத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொது மூலதன வளங்களிலிருந்து 93 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***03. நீர்வழங்கல் மற்றும் சுகாதார நல மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகையை பெற்றுக்கொள்ளல்***

இலங்கை அரசு நீர்வழங்கல் மற்றும் சுகாதாரநல மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் வசதிகள் 02 இனை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமையநிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***04. இலங்கையிலிருந்து சீனாவுக்கு கோதுமைத் தவிடுத் துகள்கள் (Wheat Bran Pellets) ஏற்றுமதி செய்தல் தொடர்பான நடவடிக்கை முறைக் குறிப்புக்கான (Protocol) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல்***

கோதுமைத் தயாரிப்பின் போது எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் கோதுமை விதைகளில் 20% வீதமானவை தவிடாக அகற்றப்படுகின்றது. இவ்வாறு நீக்கப்படும் தவிடு, தவிட்டுத் துகள்களாக சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகளவான வெளிநாட்டு செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு இயலுமை கிடைக்கின்றது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விவசாயம் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் சீனாவின் சுங்கப் பொது நிர்வாகத்திற்கும் இடையில் கையொப்பமிடுவதற்காக விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***05. கலாசார வெளியீடுகளின் பன்மைத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான யுனெஸ்கோ (2005) சமவாயத்தை இலங்கை ஏற்று அங்கீகரித்தல்***

யுனெஸ்கோ நிறுவனம் அதன் உறுப்பு நாடுகளால் தயாரிக்கப்படுகின்ற கலாசார வெளியீடுகளின் பன்மைத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான யுனெஸ்கோ சமவாயம் 2005 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கலாச்சார வெளியீடுகளின் பன்மைத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான யுனெஸ்கோ (2005) சமவாயத்தை ஏற்று அங்கீகரிப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***06. வலுசக்தி துறைக்குப் புதிய ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை அறிமுகப்படுத்தல்***

இலங்கையில் பெற்றோலியம், திரவப் பெற்றோலிய வாயு (LPG) திரவ இயற்கை வாயு (LNG) மற்றும் உராய்வு எண்ணெய் போன்ற துறைகளை ஒழுங்குபடுத்துலதற்கான பொறிமுறையொன்றை நிறுவுதல் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்காக 2024.04.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நியமிக்கப்பட்டுள்ள குழுவானது, வலுசக்தி துறையில் புதிய ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக விதந்துரைகளை முன்வைத்துள்ளது. குறித்த குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், பெற்றோலியத் தொழிற்றுறை ஒழுங்குபடுத்தலுக்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***07. இலங்கையின் மின்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் மூலம் முகாமை செய்யப்படும் மீன்பிடித் துறைமுகங்களின் படுகைகளில் (Basin) காணப்படும் மணலை அகற்றுவதற்காக கருத்திட்ட முன்மொழிவு***

இலங்கையின் மின்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் 22 மீன்பிடித் துறைமுகங்களில் மணலை அகற்றுவதற்கான விருப்பு மனுக்கோரல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2024.02.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய கிரிந்த, சிலாபம் மற்றும் வாழைச்சேனை போன்ற மீன்பிடித் துறைமுகங்களில் கட்டண அறவீடுகளின்றி அகழ்வுகளை மேற்கொள்கின்ற ஒப்பந்தத்தை வரையறுக்கப்பட்ட சுப்ரீம் குளோபல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***08. நடமாடும் இயந்திரோபகரணங்கள் தொடர்பிலான சர்வதேச நலன்கள் பற்றிய கேப்டவுண் சமவாயத்தின் (Convention on International interest in Mobile Equipment) சட்டமூலம்***

நடமாடும் இயந்திரோபகரணங்கள் தொடர்பிலான சர்வதேச நலன்கள் பற்றிய கேப்டவுண் சமவாயம் மற்றும் விமான உபகரணங்களுக்கான விசேட விடயங்களுடன் தொடர்புடைய நடமாடும் இயந்திரோபகரணங்களுக்கான சர்வதேச நலன்கள் பற்றிய கேப்டவுண் சமவாயத்தின் நெறிமுறையை அணுகுவதற்குத் தேவையான சட்டபூர்வமான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்காக 2023.01.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***09. நிதிசார் உறுதிப்பாட்டு நிதியத்தை (financial Stability Fund) தாபித்தல்***

இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதி நிறுவனங்களின் இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகத்தின் கீழ் வங்கியின் தீர்மானிப்பு வழிமுறைச் சட்டகத்தைப் பலப்படுத்தல், அவசர முன்னுரிமைகளாக மேற்கொள்ள வேண்டிய பணியாக இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படும் நிதித்துறையின் உறுதிப்பாடு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் கிழ் 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இவ்வாண்டில் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் 1,000 மில்லியன் ரூபாய்கள் பெயர் குறித்துரைத்து வழங்கப்பட்டுள்ள நிதியில் நிதிசார் உறுதிப்பாட்டு நிதியத்தை தாபிப்பதற்கும், தற்போது நிலவுகின்ற நிதிசார் மட்டுப்பாடுகளுக்கமைய வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதியொதுக்கீடு வழங்கப்பட்டு படிப்படியாக நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***10. பண்டங்கள் இறக்குமதியின் போது அறவிடப்படும் இறக்குமதி வரியைத் திருத்தம் செய்தல்***

எமது நாட்டுக்கு பண்டங்கள் இறக்குமதி செய்யும் போது அறவிடப்படும் வரி வகைகளாவன, சுங்க இறக்குமதி வரி, செஸ் வரி, விசேட பண்டங்களுக்கான வரி மற்றும் துறைமுகங்கள் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி தொடர்பிலான கொள்கை ரீதியாக அமுல்படுத்த வேண்டியதும், மற்றும் சமகாலத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்நாட்டு கைத்தொழில் மற்றும் வணிகத் துறையிலுள்ள தரப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

**11. 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் (கொழும்புத் துறைமுக நகரத்திற்கான திறந்த கணக்குக் கொடுப்பனவு முறையைப் பயன்படுத்தல்);**

1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் 2024.08.21 ஆம் திகதிய 2398/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. பல்கலைக்கழக மாணவர்களின் மஹபொல மற்றும் மாணவர் உதவுதொகைகளை அதிகரித்தல்**

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹபொல மற்றும் மாணவர் உதவுதொகை தவணைக் கட்டணங்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அதிகரிக்கப்படவில்லை.

குறித்த தவணைக்கட்டணத்தை திருத்தம் செய்வதற்கான தேவையை கல்வி அமைச்சர் மற்றும் வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை கவனத்தில் எடுத்திருந்தது. குறித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, மஹபொல புலமைப்பரிசில் தவணைக்கட்டணத்தை 7,500/ரூபா வரைக்கும், மாணவர் உதவுதொகை தவணைக்கட்டணத்தை 6,500/ரூபா வரைக்கும் 2025 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# வீறுணர்வில் வேரூன்றி நிற்கிறார் கவிஞர் வேதாந்தி ஷேகு இஸ்ஸதீன்



விருந்தும் முடிய விளக்கும் அணைய வீழும் நீழல் உனதே
கவிதா இந்த இரவும் உனதே'

என்று கம்பன் பாற்கடலில் அமுது கடைந்த மாதிரி அழகின் தூதுவனாய் தன் கவிதையை ஆரம்பித்து கவிதாவில் முடிக்கிறார் கவிஞர் வேதாந்தி ஷேகு இஸ்ஸதீன். அவர் கவிதை எழுதுவதற்கு அவரது உள்ளத்து உணர்ச்சிதான் முதற்காரணம். அந்த உணர்ச்சி வேறெந்தச் சந்தர்ப்பத்தையும் விட காதலின்போதுதான் கட்டவிழ்ந்து வருகிறது. அவரது உணர்ச்சி வெள்ளமாய் பிரவாகிக்கும்போது கவிதை அதன்மேல் மிதந்துகொண்டு வருகிறது.

'படைப்புகள் வெளிப்படும்முன் இறைவனிடம் முதலில் உதித்த உணர்வு காதல். அந்தக் காதல்தான் பிரபஞ்சத்தின் படைப்புக்கும் காரணமானது. இறைவன், தான் காதலிக்கப்படவேண்டும் என்று விரும்பியதால்தான் பூமியில் மனிதனைப் படைத்தான். அவ்வழிவந்த காதல்தான் வேதாந்தியின் இதயத்திலும் கவிதையாய்க் கனிந்திருக்கிறது.

'மார்கழி மேகம் வந்ததும்
மண்ணுக்கு வேர்வை தந்ததும்
காலத்தில் வந்ததல்லவா
காதலின் பந்தமல்லவா?'(சங்கமம்)

இந்த அற்புதமான பாடல்கூட ஒரு கவிதையாகிக் காதலுக்குக் கட்டியம் கூறுகின்றது.

கவிதை என்பது 'கவிதா' என்ற சொல்லிலிருந்தே வந்தது. அதனால்தான் கவிஞர் வேதாந்தி கவிக்குயில் கவிதாவைக் காதலித்தார். 'கி.மு, கி.பி' என்று இருப்பது போல், காதலுக்கு முன் (கா.மு) காதலுக்குப் பின் (கா.பி) என்று அவரது வாழ்க்கைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு.

பாலஸ்தீன மக்களுக்கு மண் விடுதலை எப்படி பிறப்புரிமையோ அப்படி இலங்கை சிறுபான்மைக்கு அரசியலுரிமை ஒரு பிறப்புரிமை என்கிறார். வேதாந்தியின் இந்த எழுந்தமான இன உணர்ச்சி ஆக்ரோசமான வெளிப்பாட்டையும் அனுபவத்தையும் வெளிப்படுத்துகின்றன.

'இன்று முஸ்லிம் சமூகம் இலங்கையில் முகம்கொடுத்து வரும் இன, மத துவேசங்களை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் இந்நாட்டில் அவர்கள் பஞ்சைகளாய், பராரிகளாய், நாடோடிகளாய், சொந்த வீட்டுக்குள்ளேயே அகதிகளாய் அந்தரிக்கவேண்டிய நிலை ஏற்படுவது வெகுதூரத்தில் இல்லை என்று ஆண்டு 2003இல் என்னுடைய 'முள்மலர்கள்' கவிதை நூலில் விதந்துரைத்த வேதாந்தி ஓர் ஆரோக்கியமான முஸ்லிம் ஜனநாயக சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய ஒரு தார்மீக கவிஞனின் கடமையாக அதைக் கனாக் கண்டிருக்கிறார்.

நான் அவரைப் பலமுறை சந்தித்திருக்கிறேன். பிரியத்தோடு பேசியிருக்கிறேன், இலக்கியம் உரையாடியிருக்கிறேன். வெளிநாட்டிலிருந்தும் தொடர்புகொண்டிருக்கிறேன். அவரது அன்பை எண்ணிப் பார்த்தேன். அவரது கவிதைகள் அவர்பால் எனக்கு மயக்கத்தை ஏற்படுத்தின. அவர் தமிழை மதிப்பதைப் போல நான் அவர் மீது மரியாதை வைத்திருக்கிறேன்.

அவர் அன்போடு வரவேற்பார். ஆசாபாசம் பேசுவார். அதீத இலக்கியம் பேசுவார்.'எழுதிய கவிதைகளை வாசியுங்கள்' என்பார். கம்பீரத்தில் ஒரு கனிவோடு, முதுமையில் ஒரு அடக்கத்தோடு, பாராட்டுவதில் ஒரு பாங்கோடு, நன்றி சொல்வதில் ஒரு நாகரிகத்தோடு எல்லாரையும் மதிக்கிற மாண்போடு அவர் நடந்துகொள்வார். அவர் இப்போது தாளாத மனசோடு ஓய்வு பெற்றுக்கொண்டிருந்தாலும் தாய்மொழி பேசும்போது புத்துணர்ச்சியோடுதான் பேசுகிறார்.

கவிஞர் வேதாந்தி ஷேகு இஸ்ஸதீன் சின்னகமது லெப்பை உடையார் முஹம்மது ஹஸன் தந்தைக்கும் செய்யது அப்துல் ரகுமான் மௌலானா சுபைதா உம்மா தாய்க்கும் 1944. 05. 12 வெள்ளி அன்று அக்கரைப்பற்றில் ஒரு செல்வாக்குடைய குடும்பத்தில் பிறந்தார்.

'தாயின் கர்ப்பத்திலேயே
தர்ம யுத்தத்திற்காய்
உயிர்த்தியாகம் செய்வேன்
என்று உயில் எழுதிக் கொடுத்து விட்டு
உலகை மிதித்தவன் நான்'

என்று பாடும் வேதாந்தியை, தனது இனத்துக்காக மட்டுமல்ல தவறிழைக்கப்பட்ட எல்லா இனங்களுக்குமாய் எழுத்துக்களால் ஒரு மானுட நேயனாய், மக்கள் பிரதிநிதியாய் அக்கரைப்பற்று மண் இனங்காட்டியிருக்கின்றது.

கவிஞரின் 80ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சமீபத்தில் 'வரலாறாகும் வேதாந்தி' என்னும் பெயரில் அக்கரைப்பற்று கடற்கரை 'மென்கோ கார்டன்' மன்றத்தில் நிகழ்ந்த பாராட்டு விழாவில் அவரது நிழற்படம் பொறித்த இருபத்தைந்து ரூபாய் இலங்கை முத்திரை வெளியிட்டு, ஊர்மக்கள் அவரைக் கொண்டாடியிருக்கிறார்கள்.

'சமூக அரசியல் பரிமாணங்கள் உள்ள இலக்கிய ஆளுமைகளில் உணர்வுத் தெளிவும், கவித்துவக் கூடுகையும் கொண்ட உண்மையான கவிஞர் வேதாந்தி' என்று பாராட்டிய முன்னாள் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மதிப்புரை (26.08.1997) ஒளியின் மொழியாய் மிளிர்கிறது.

'கவிஞர் வேதாந்தி ஒரு தலைசிறந்த கவிஞன்' என்று பிரபல்யமான ஆங்கில இந்திய டைம்ஸ் பத்திரிகையும் கூட எழுதியிருப்பதை உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குச் சென்றபோது வாசித்த மு.கா. கட்சித்தலைவர் றவூப் ஹக்கீம், அதை அவரது உரையில் பதிவிட்டிருக்கிறார்.

தென்கிழக்கின் தேமதுரக் கவிதை தந்த வேதாந்தி, ஆங்கில ஆசிரியராகவே தன் அரசாங்க உத்தியோகத்தை ஆரம்பித்தார். பின் இலக்கிய ஆர்வலராகவும், படைப்பாளராகவும், சட்டத்தரணியாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உப தலைவராகவும், கட்சிப் பேச்சாளராகவும், தமிழ் உணர்வாளராகவும் உன்னதம் கண்டுள்ளார்.

இலங்கை இனவாத அரசியல் அராஜகத்திற்குள் அடங்கிக் கிடக்கும் மக்களை மீட்பதற்கு தனது கவிதையை போராயுதமாகவும், பேச்சு மேடைகளை போராட்டக் களமாகவும் மாற்றிக் கொண்டவர்.

தூய்மையற்ற, நேர்மையற்ற, விலைபோகும் சுயநல அரசியல் கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் செயல்முறை மாறிய போது, வெஞ்சினம் கொண்டெழுந்த வேதாந்தி அதை விட்டே வெளியேறினார். குற்றமும், குந்தகமும், குளறுபடியும் அதில் நிலைத்தபோதும் அவர் கட்சிக்கு ஒரு சவாலாகவே விளங்கினார். பணம், பதவி என்று சிங்கள இனவாதக் கட்சிகளோடு சேர்ந்து பேரம்பேசி மக்களுக்குப் பாரபட்சம் காட்டியபோதெல்லாம் முஸ்லிம் காங்கிரஸ் சிதறிப்போனது கண்டு வருந்தினார்.

அகம், புறம் பேசும் ஆன்ம கவிதை 'நாம் எனும் வேடதாரிகள்'. இக்கவிதை மானுட வேடமிட்ட மிருகங்களின் முகமூடிகளைக் களைகின்றன. சமூகப் பிரக்ஞை கண்டு அந்த சூத்திரதாரிகளின் சாயத்தையும் கலைத்திருக்கின்றது.

'நீங்களும் நானும்
ஆளுக்காள் ஆடிய
நாடகத்தின் வேடங்களை
தரம் பிரித்து உடை கலைத்து
வெளியில் சொல்லி விடுவேன்
சரியைப் போல் பிழைக்கும்
நன்மையைப் போல் தீமைக்கும்
நம்பிக்கையைப் போல் அறிவுக்கும்
கருணையைப்போல் கொடுமைக்கும் உண்மையைப்போல் பொய்மைக்கும் ஆதியுமில்லை அந்தமுமில்லை அதனால் மூலமும் வேசமும் ஒன்றாகுமா? '

உண்மையின் முகத்தை வெளிக்காட்டுவதற்கு வேதாந்தியால் மட்டுமே முடியும். இந்தத் துணிச்சல் அவருக்கு மட்டுமே உரியது.

2000– 2004 ஆண்டு காலச் சூழலில் வேதாந்தியின் அறிவு, ஆற்றல், ஆளுமை, ஆதரவு என்பவற்றை பயன்படுத்திக்கொள்ள, அன்றைய அரசாங்கம் அவரை பாராளுமன்ற உறுப்பினராக உள்வாங்கியபோது, அவர் தகவல் ஊடகத்துறை பிரதியமைச்சரானார்.'லேக் ஹவுஸ் பத்திரிகைத்துறை, 'ரூபவாகினி' தொலைக்காட்சி, அரச ஊடக நிறுவனங்கள் அவரது அனுசரணையின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டபோது அவை ஆரோக்கியமாய் இயங்கின.

1990 போராட்ட காலத்தில் 75000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஆயுத முனையில் சொந்த ஊரை விட்டு விரட்டியடிக்கப்பட்டதையும், 2500க்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் பள்ளிவாசல்களிலும் கிராமங்களிலும் மிலேச்சத்தனமாகக் கொலை செய்யப்பட்டதையும், ஒரே மொழியில் பேசி, ஒரே மொழியில் பழகி, ஒரே உணவை உண்டு மகிழ்ந்து ஒரே சமுதாயமாய் ஒன்றுபட்டு வாழ்ந்த மனித குலத்திற்கெதிரான பாதகச் செயலை காலம் கடந்தும் வலிக்கிற சோகத்தை வேதாந்தி, கண்ணீரிலும் இரத்தத்திலும் குழைத்துக் குழைத்து எழுதியிருக்கிறார்.

பிளவுபடுத்திய பிரிவனைவாதிகளைப் பார்த்து மானுட நேயத்தின், மனித ஒருமைப்பாட்டின் தொனியில் தாய்மொழி தமிழில் பாடுகிறார். இது தமிழ் வளர்ச்சிக்கு அவர் எவ்வளவு சேவைகளைச் செய்திருக்கிறார் என்பதை உள்ளூர உணர்ந்து கொள்ள முடிகிறது.

வேதாந்தியின் கவிதைத் தொகுதியில் காணப்படும் க(விதை)களில் முளையாய் விழித்திருக்கும் படிம அழகு பிரமிக்க வைக்கிறது.

பள்ளிக் காலத்தில் நானறிந்தவரை வேதாந்தி என்பவர் கவிஞர். அதனால் அவரது படைப்பை ரசித்தேன். எனக்கு மூத்தவராயினும் அவர் மலர்ந்து நின்ற காலத்தில் ஏனைய இலக்கிய இலக்கணம் படித்த பேராசிரியக் கவிஞர்களுக்கு இருந்த பின்னணிகள் எதுவும் அவருக்கு இல்லை. அவருக்குள்ளே விதையாய்ப் பதிந்து முளைவிட்ட கவித்துவம் என்பது அவருக்கு இயல்பாய் கிடைத்த ஒரே ஒரு மூலாதாரம்.மரபுமீறல், மக்கள் சார்பு, இயற்கையில் இணைவது, படைப்புச் சுதந்திரம் என்னும் அடிநிலைப் பண்புகள் யாவும் வேதாந்தியின் கவிதைகளில் வீறுணர்வு அழுத்தமாய்ப் பதிவாகி இருக்கின்றன. அதனால் அவருடைய நெஞ்சிலிருக்கிற தெம்பும், அறிலிருக்கிற திறமும், கண்ணிலிருக்கிற காதலும் படைப்பிலிருக்கிற சூஃபித்துவமும் உடம்பிலிருக்கிற ஆரோக்கியமும் காலமெல்லாம் நிலைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம்



கனடாவிலிருந்து இனியவன் இசாறுதீன் ...✍






# சம்பள உயர்வுக்கு ஒத்துழைப்பு நல்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகள்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

சம்பள உயர்வு தொடர்பில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது. இந்த சம்பள உயர்வு சமரில் வெற்றிபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

அடிப்படை நாள் சம்பளம் 35 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டு ஆயிரத்து 350 ரூபா கிடைக்கப்பெறும் நிலையில், எஞ்சிய 350 ரூபா கொடுப்பனவையும் கூடியவிரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் எமது தொழிலாளர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வு கிடைக்கப்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பள விடயம் தொடர்பில் 10.09.2024 அன்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



"நல்லாட்சி காலத்தில் எமது தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா கொடுப்பனவைகூட பெற்றுக்கொடுக்க முடியாமல் இருந்த அரசியல் தலைவர்கள், இன்று போலி வாக்குறுதிகளை அள்ளி வழங்குகின்றனர். தேர்தலில் தோல்வி உறுதி என்பதால்தான் பொய் வாக்குறுதிகளை வழங்கியாவது வெற்றி பெறலாம் என முயற்சிக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியையும் நாம் நிறைவேற்றினோம். தற்போது அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 350 ரூபாவையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். மேலதிக கொடுப்பனவான 350 ரூபாவையும் விரைவில் பெற்றுக்கொடுத்து நாளொன்றுக்கு 1,700 ரூபா கிடைப்பதற்கு வழிவகுக்கப்படும்.

எமது மக்களுக்கு காணி உரிமை வேண்டுமென எமது அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதியிடம் கேட்டார், அதனை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தோட்டங்களை கிராமங்களாக்கி தொழிலாளர்களுக்கு உள்ள தடைகளை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம்கூட முன்வைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்ற பிறகு எமது அமைச்சர் தலைமையில் எமது தொழிலாளர்களை சிறுதோட்ட பங்குதாரர்களாக மாற்றும் திட்டமும் உள்ளது. அது உரிய வகையில் செயற்படுத்தப்படும். ஏனையோர்போல் பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்படமாட்டாது.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலானது நாட்டில் எதிர்காலத்தை மட்டுமல்ல மலையக எதிர்காலத்தையும் நிர்ணயிக்கப்போகும் தேர்தலாகும். எனவே, ஜனாதிபதிக்கு வாக்களித்து நாட்டையும் முன்னேற்றி, நாமும் முன்னேறுவோம்." என தெரிவித்துள்ளார்.

# மாற்றத்தை; உங்களுக்காக எங்களுக்காகவல்ல இந்நாட்டின் எதிர்காலச் சந்ததியினர்களுக்காக கொண்டு வருவோம்

## தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட செயற்குழு உறுப்பினர்



தேசிய மக்கள் சக்தி மாற்றத்தை மட்டுமே வேண்டி நிற்கின்றது. எனவே இந்த மாற்றத்தில் மலையகப் பெண்களும் ஆர்வத்துடன் பங்கு கொண்டு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கண்டி மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி. பி. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

கண்டியில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்க அவர்களை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய கண்டி மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி. பி. சிவப்பிரகாசம் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்

நாங்கள் இந்த மாற்றத்தை உங்களுக்காக எங்களுக்காக அல்ல இந்நாட்டின் எதிர்காலச் சந்ததியினர்களுக்காக இந்த மாற்றத்தைக் கொண்டு வருவோம். நமது பிள்ளைகள் இந்த நாட்டில் 100 வருடங்கள் வாழ வேண்டும். குறிப்பாக இந்த மாற்றத்தை பெண்கள் கவனத்தில் எடுத்து இந்த மாற்றத்தை கொண்டு வர வேண்டும். அதிலும் அந்த மாற்றத்தை ஏற்படுத்துவது என்றால் தேசிய மக்கள் சக்தியினால் மட்டும் தான் முடியும். புத்திஜீவிகள், வைத்தியர்கள். பொறியியலாளர்கள், சாதாரண விவசாயிகள், பெண்கள் எனப் பல தரப்பட்டவர்கள் இணைந்துள்ளார்கள்.

இலட்சக்கணக்கான பெண்கள் தேசிய மக்கள் சக்தியில் இணைந்து கூட்டங்களுக்குச் செல்கின்றார்கள். வீட்டிலுள்ள பொருளாதார நெருக்கடி, கஷ்டம் பெண்களுக்குத் தான் நன்கு தெரியும். வீடு எப்படி பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கிறது. குழந்தைகளுக்கு எப்படி பால் கொடுப்பது? எப்படி சாப்பாடு கொடுப்பது? நாளைய பிரச்சினையை எப்படி தீர்ப்பது? நாளைக்கு கடனை எப்படிக் கொடுப்பது? வீடு எப்படிக் கட்டுவது? எப்படிக் கோயிலுக்கு சாமி கும்பிடப் போவது? பிள்ளைளுக்கு எப்படி உடுப்பு வாங்கிக் கொடுப்பது? எப்படி புத்தகம் வாங்கிக் கொடுப்பது? போன்ற இந்தப் பிரச்சினை பெண்களுக்கு அதிகம் தெரியும். பெண்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த மாற்றத்திற்காக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை புதிய அரசாங்கத்தைக் கொண்டு வரவில்லை. புதிய ஜனாதிபதியைக் கொண்டு வரவில்லை. புதிய அமைச்சரவையைக் கொண்டு வரவில்லை மாற்றத்தை மட்டும் தான் கொண்டு வருகின்றோம். ஆகவே இந்த மாற்றத்திற்காக இணைந்து செயல்படுமாறு நாங்கள் வேண்டிக் கொள்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**(இக்பால் அலி)**

# தனமல்வில பாடசாலையில் இன்னுமொரு மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்

**ஊவா சுழற்சி நிருபர்**

தனமல்வில பாடசாலையில் எட்டாம் ஆண்டு கல்வி கற்கும் இன்னுமொரு மாணவி, மாணவனால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இப் பாடசாலையில் எட்டாம் ஆண்டு கல்வி கற்கும் மாணவி ஒருவர் அதே பாடசாலையில் 11 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவனால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டதாக தனமல்வில பொலிஸ் தலைமையகத்திற்கு அனாமதேய தொலைபேசி அழைப்பினூடாக வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த பாடசாலை மாணவியை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையின்போது கடந்த மாதம் தான் அம்மம்மாவின் வீட்டுக்குச் சென்ற சமயம் எமது பாடசாலையில் 11ஆம் ஆண்டு கல்வி பயிலும் மாணவரால் தான் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக மாணவி பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து, உடன் செயற்பட்ட குற்றவியல் மற்றும் சிறுவர் குற்றத்தடுப்பு பொலிஸ் குழுவினர் குறித்த பாடசாலை மாணவனை நேற்று முன்தினம் (09) கைது செய்து வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே இப் பாடசாலையில் மாணவியொருவர் 22 மாணவர்களால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, பாடசாலை அதிபர், உப அதிபர் உட்பட்ட இருபது பாடசாலை மாணவர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த வல்லுறவு தொடர்பாக மொனராகலை பொலிஸ் அத்தியட்சகர் புத்திக உடுகமவின் பணிப்புரைக்கமைய தனமல்வில பொலிஸ் குற்றவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சமூக விடுதலைக்காக வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதத்தை பயன்படுத்துவோம்

## பாரத் அருள்சாமி தெரிவிப்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

மலையக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் எமது மக்களின் ஒரே தெரிவு சுயாதீன ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவாகவே இருக்க வேண்டும். எனவே, எமது சமூக விடுதலைக்காக வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதத்தை பயன்படுத்துவோம் என்று இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டி கண்டி மாவட்டத்தில் நியூபிகொக் தோட்டம், சப்ளி தோட்டம், கலுகல்ல தோட்டம், மெல்போர்ட் தோட்டம், டெல்டா தோட்டம், ஸ்டெலன்ட்பேர்க் தோட்டம் மற்றும் புப்புரஸ்ஸ தோட்ட ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் இ.தொ.காவின் சார்பில் பாரத் அருள்சாமி பங்கேற்றிருந்தார்.



பெருந்திரளான மக்கள் இக்கூட்டங்களில் பங்கேற்று தமது ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதிப்படுத்தினர். இதன்போது உரையாற்றிய பாரத் அருள்சாமி,

"பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை மற்றும் வீட்டுரிமை பெற்றுக்கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அஸ்வெசும திட்டத்தில் பெருந்தோட்டப் பகுதிகளும் உள்வாங்கப்பட்டன. அதன்மூலம் பலர் தற்போது நன்மை பெறுகின்றனர். தமக்கு சேவை செய்யக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி என்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர். ஏனெனில் நெருக்கடியின்போது ஏனையோர்போல் ஓடி ஒளியாது, அவரே முன்வந்து நாட்டை பொறுப்பேற்று வழிநடத்தினார்.

எனவே, எதிரணிகள் தனிப்படை அமைத்து எவ்வாறுதான் போலி பிரசாரம் முன்னெடுத்தாலும் அவற்றை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியாகியுள்ளது. நாட்டில் மலையக மக்கள் வாழும் பகுதிகளிலெல்லாம் இதொகாவின் பேராதரவுடன் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதி வெற்றிபெறுவார். கண்டி மாவட்டத்திலும் வெற்றி கொடி பறக்கும்." என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்ற பின்னர் மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் எனவும், தோட்டத் தொழிலாளர்கள் சிறுதோட்ட பங்குதாரர்களாக்கப்படுவார்கள் எனவும் பாரத் அருள்சாமி மேலும் கூறினார்.

இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, இ.தொ.காவின் பிரதி பொதுச்செயலாளர் செல்லமுத்து, மாவட்ட தலைவர்கள் மற்றும் கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்களும் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

# இலங்கையில் பெண் வாக்காளர் தொகை ஆண்களை விட அதிகம் அரசியலை பொறுத்தவரை அவர்களது பங்குபற்றல் விகிதம் குறைவு

## மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரி திருமதி லோகேஸ்வரி

**மாவத்தகம நிருபர்**

இலங்கையில் பெண் வாக்காளர் தொகை ஆண்களை விட அதிகமாக காணப்படுகின்ற போதிலும் அரசியலை பொறுத்தவரை அவர்களது பங்குபற்றல் விகிதம் குறைவாகவே காணப்படுகின்றது. அதே சமயத்தில் மலையக பிரதேசங்களில் தேர்தல் பெறுபேறுகளை அவதானிக்கும் போது நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அதிகமாகவுள்ள இடங்களாக மலையக பகுதிகள் காணப்படுகின்றன. எனவே மலையக மக்கள் தங்களுடைய வாக்குகள் எப்படி செல்லுபடியான வாக்குகளாக இட வேண்டும் என்று மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரி திருமதி லோகேஸ்வரி தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



ஆகவே மனித அபிவிருத்தி தாபனம் இன்னோர் அமைப்புடன் இணைந்து மலையகத்தில் சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்தும் திட்டமொன்று நுவரெலியா மற்றும் மொனராகலை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சிறுபான்மைப் பெண்கள் வாக்காளர்களாகவும் அல்லது அரசியல் பதவிக்கான வேட்பாளர்களாகவும் அரசியல் ரீதியாகச் செயல்படுவது எப்படி என்பது பற்றிய அறிவை மேம்படுத்துவதும் அரசியலில் நம்பிக்கை மற்றும் ஈடுபாடு ஆகியவற்றை வளர்ப்பதற்கு, கிராமப்புற சமூகங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களை அணுகக் கூடியதாக மாற்றுவதற்கும், கவுன்சில் அலுவலகங்களை அணுகும் போது பாதிக்கக்கூடிய பெண்களுக்கு வள ஒதுக்கீட்டை மேம்படுத்துவதற்கும் இத் திட்டமானது முயற்சிக்கின்றது. அரசியற் கட்சிகளுக்கான பிரசாரத்திலும் ஆதரவு திரட்டலிலும் பெண்கள் முக்கிய வகிபாகத்தை வகித்தாலும் கூட அவர்கள் கட்சிகளினுள் காணப்படும் தீர்மானம் மேற்கொள்ளும் கட்டமைப்புகளில் இருந்து ஓரங்கட்டப்படுகின்றனர் என்பதுடன் பெரும்பாலும் தேர்தல்களின் போது சாத்தியமான வேட்பாளர்களாக வருவதிலிருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். அரசியற் கட்சிகளில் தலைமைத்துவம் மற்றும் தீர்மானமெடுக்கும் பதவிகளுக்கு பெண்கள் வருவதற்கு அவர்களது திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்டி சித்திலெப்பையில் 200 வறிய குடும்பங்களின் போசாக்கை மேம்படுத்த ஜெர்மனிய முஸ்லிம் ஹெல்பரின் நிவாரண உதவிகள்






**மாவத்தகம நிருபர்**

ஹசன் மௌலவி நற்பணி மன்றத்தின் அசிசியா பவுண்டேசன் ஏற்பாட்டில் முஸ்லிம் ஜெர்மனி ஹெல்ப்பரின் நிதி உதவியுடன் கண்டி நகரப் பிரதேசத்தில் உள்ள 200 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு கண்டி சித்திலெப்பை பாடசாலையில் அதிபர் ஹலீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அசிசியா பவுண்டேசன் பணிப்பாளர் சாதிக் ஹசன் கலந்து கொண்டு, 10 கிலோ அரிசி மற்றும் 10 கிலோ கோதுமை மா உள்ளிட்ட நிவாரண பொதியை வழங்கி வைத்தார்.

அசிசியா பவுண்டேசன் ஊடாக முஸ்லிம் ஜெர்மனி ஹெல்ப்பர் நிறுவனம் பல்வேறு நிவாரண உதவிகளை நாடளாவிய ரீதியில் வழங்கி வருகின்றன.அனர்த்த நிலைமையின் போதும் பல்வேறு இடங்களில் தங்களின் நிவாரணப் பணிகளில் கைகோர்த்துள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தற்போதைய சூழ்நிலையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 200 குடும்பங்கள் கண்டி பகுதியில் பயன்பெறும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

# முச்சக்கரவண்டியில் சிசுவின் சடலம் மீட்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**

தலவாக்கலை லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தின் கிளனிகல்ஸ் பிரிவிலுள்ள வீடொன்றிற்கு அருகாமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) இரவு முச்சக்கரவண்டியின் பின் ஆசனத்திலிருந்து சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்துசில நாட்களே இருக்கலாமென சந்தேகிக்கப்படும் மேற்படி சிசுவின் சடலம் துணியால் மூடப்பட்டு முச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இரவு முச்சக்கரவண்டி நிறுத்தப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளர் இதனைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

# இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தினால் கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

**லுணுகல, நமுனுகுல நிருபர்கள்**





இந்திய உதவி உயர்ஸ்தானிகராலய கண்டி கிளையின் அனுசரணையுடன் பசறை கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலுகின்ற 306 மாணவர்களுக்கான புத்தகப்பைகள் மற்றும் அப்பியாசப் பயிற்சிப்புத்தகங்கள் உள்ளிட்ட கற்றல் வளங்கள் பகிந்தளிக்கப்பட்ட நிகழ்வு நேற்று முன்தினம் (09) பாடசாலை அதிபர் திருமதி.சக்திமலர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது. அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தால் உதவிக்கரம் நீட்டப்பட்ட இந்நிகழ்வில் கண்டி, இந்திய உதவி உயர்ஸ்தானிகராலய உதவி செயலாளர் பி.சோமராஜ், இந்திய உதவி உயர்ஸ்தானிகராலய இணைப்பாளர் தினேஸ், பாடசாலை அதிபர், பிரதி அதிபர் சதாசிவம் தனேஸ், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் ரஜனிகாந்தன், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது மாணவர்களுக்கான கற்றல் வளங்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய உதவி உயர்ஸ்தானிக தூதரகத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்தனர்.

# இரத்தினபுரி – நிவித்திகலை காபட் வீதி இடிந்து வீழ்ந்ததால் போக்குவரத்து தடை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி நிவித்திகலை காபட் வீதியில் தொலஸ்வல பிரதேசத்தில் வீதி இடிந்து விழுந்ததால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இரத்தினக்கல் கனியம் தோண்டுவதற்காக சிலர் வீதிக்கு வெளியே குழிகளை தோண்டி அக்குழியின் வழியாக வீதியின் நடுப்பகுதி வரை நிலக்கீழாக சுரங்கம் அமைத்துள்ளதால் இவ்வீதியின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளதாக நிவித்திகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியின் நடுவே இடிந்து விழுந்துள்ள நிலக்கீழ் பகுதி ஒரு குகை போன்று தென்படுவதாகவும் நிலத்துக்கும் வீதிக்குமிடையில் மரத்தூண்களை நிறுத்தி வைக்கப்பட்டு அவ்விடத்தில் உள்ள கனியங்கள் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல கோடி ரூபாய் செலவிட்டு காபட் வீதி அமைத்து பொதுமக்கள் நலனுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வோர் மனிதாபிமானம் இன்றி வீதிக்கு குறுக்கே சுரங்கம் அமைத்துள்ளமை குறித்து பிரதேச மக்கள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

# Gen Z தலைமுறையினரை சமூகத்தில் ஒருங்கிணைத்து நாட்டைக் கட்டியெழுப்பும் குழுவாக உருவாக்குவோம்!

## #AskRanil இளைஞர் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு



Gen Z தலைமுறையினரை சமூகத்திற்குள் கொண்டு வந்து நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்கக்கூடிய ஒரு குழுவாக அவர்களை உருவாக்குவதே தனது நோக்கமாகும் என்றும், அப்போது இலங்கை இளைஞர்கள் தாங்கள் விரும்பும் சமூகத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்று நாட்டின் எதிர்காலத்தை உருவாக்க இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான வழியை தாம் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

உலகில் வளர்ந்த நாடுகளை விட முன்னணியில் இருந்த எமது நாடு பொய்யான கோசங்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட சம்பிரதாய அரசியலால் பின்தங்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (09) மாலை நடைபெற்ற #AskRanil இளைஞர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, 2025ஆம் ஆண்டு அமுல்படுத்தப்படவுள்ள சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை என வெளியாகியுள்ள செய்திகள் பொய்யானவை எனவும் அதற்கான அனுமதி ஏற்கனவே கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இளையோருக்கு ஜனாதிபதியிடம் நேரடியாகவும் சூம் தொழில் நுட்பத்தின் ஊடாகவும் கேள்வி எழுப்ப சந்தர்ப்பம் வழங்கப்பட்டதோடு, தமிழிலும் அவரிடம் கேள்வி எழுப்ப சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியிடம் எழுப்பப்பட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும் பின்வருமாறு:

**கேள்வி: உங்கள் தேர்தல் விஞ்ஞாபனம் தேரவாதப் பொருளாதாரத்தைக் குறிப்பிடுகிறது. தேரவாத பொருளாதாரம் என்றால் என்ன?**

**பதில்:** இது தேர்தல் விஞ்ஞாபனமல்ல. இது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படக் கூடிய ஒரு திட்டமாகும். வணிகப் பொருளாதாரத்தைத்தான் தேரவாதப் பொருளாதாரம் என அழைக்கிறோம். புத்தபெருமானின் கோட்பாடு ஒரு வெளிப்படையான கோட்பாடு. இது வர்த்தகம் தொடர்பானது. முன்னர் வர்த்தக நிறுவனங்களுக்கு எந்தக் கோட்பாடும் இருக்கவில்லை. அவர்கள் பழைய சாதி முறைப்படி வணிகம் செய்தனர். புத்தபெருமானின் உபதேசத்தால் உலகம் முழுவதும் வர்த்தகம் வளர்ந்தது. வர்த்தகத்துடன் தொடர்புடைய இரண்டு மதங்கள் உள்ளன. அதில் ஒன்று பௌத்தம். மற்றொன்று இஸ்லாம்.

தாய்லாந்து திறந்த பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்டது. நம்மை விட முன்னேறியது. இலங்கை பின்னடைந்தது. இப்போது நாம் முன்னேற வேண்டும். உங்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் கிடைக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டில், நமது மொத்த உள்நாட்டு உற்பத்தி 89 பில்லியன் டொலர்கள். 2050க்குள் அதை 350 முதல் 400 பில்லியன் டொலர்களாக மாற்ற முயற்சிக்கிறேன்.

**கேள்வி: மலையக பகுதிகளில் சுற்றுலா, விவசாயம் உள்ளிட்ட துறைகளின் மேம்பாட்டுத் திட்டத்துக்குள் இளையோரை எவ்வாறு உள்ளீர்க்கலாம் என்று நினைக்கிறீர்கள்?**



**பதில்:** GENZ தலைமைமுறையினர் சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும். சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் அவரோடு ஒன்றிணைந்து நாங்கள் பணியாற்றினோம். இளையோருக்கு எவ்வாறான சமூகம் உங்களுக்கு வேண்டும் என்பதை இளையோரே தீர்மானிக்க வேண்டும். இன்றைய சமூகத்தில் எவ்வாறு மக்கள் வாழ முடியும் என்பதை பற்றிய விடயங்களை நாம் திட்டமிடலாம். இலங்கை எந்நாளும் வறிய நாடாக இருக்க முடியாது. நாம் அரசியல் செய்யும்போது உண்மைகளை சொல்ல வேண்டும். எல்லாவற்றுக்கும் கடன் வாங்கி கடன்களையும் செலுத்த முடியாமல் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறோம். புதிய சமூகத்தை நாம் உருவாக்கிய பின்னர் அதனை கொண்டு செல்வது உங்கள் பொறுப்பாகும்.

**கேள்வி:அரச அதிகாரிகளின் சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்படவில்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்பொன்று கூறியிருக்கிறது.அதில் உண்மை இருக்கிறதா?**

**பதில்:** சம்பள உயர்வை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. சம்பள அதிகரிப்பு கோரி கடந்த காலங்களில் வேலை நிறுத்தங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன்படியே சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கையின் பிரகாரமே சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

**கேள்வி: ஹம்பாந்தோட்டையில் நான்காயிரம் ஏக்கர் பரப்பில் முதலீட்டு வலயமொன்று அவசியமா?**

**பதில்:** இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். அவற்றைக் கொண்டு வருவதற்கு முதலீட்டு வலயங்கள் பாரிய அளவில் அமைக்கப்பட வேண்டும். நாடளாவிய ரீதியில் அவற்றை அமைப்போம். விருப்பமான இடத்தில் முதலீடு செய்யலாம். ஹம்பாந்தோட்டையில் துறைமுகமும் விமான நிலையமும் இருப்பதால் அங்கு முதலீட்டு வலயத்தை அமைக்கத் தீர்மானித்தோம்.

**கேள்வி: GEN Z தலைமுறைக்கு எதற்காக உங்கள் தலைமைத்துவம் அவசியம் என்று நினைக்கிறீர்கள்?**

**பதில்:** நான் நாட்டை ஏற்றுக்கொண்ட பின்பு பொருளாதார நிலைத்தன்மை உருவாகியுள்ளது. அடுத்த ஐந்து வருடங்களில் நிலைத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தவும், அதற்காக வெளிநாட்டு வருமானத்தை ஈட்டவும் வேண்டியுள்ளது.

மற்றைய கட்சிகள் போன்று வரியைக் குறைப்போம் என்று சொல்வதையே நானும் விரும்புகிறேன். ஆனால் அதற்கு போதுமானதாக எமது வருமானம் எமக்கு இல்லை. மொத்த தேசிய உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு அதிகமாக கடன் பெறமாட்டோம் என்ற இணக்கப்பாட்டையும் ஐ.எம்.எப் உடன் எட்டியிருக்கிறோம். பணத்தை அச்சிடவும் முடியாது. நாம் செலவுகளை அதிகப்படுத்தினால். 2025 வரவு செலவு திட்டத்திற்காக எமக்கு விதிக்கப்பட்டுள்ள வரம்புகளுக்கு இணங்கவே நாம் செயற்படுகிறோம். இதனை கருத்தில் கொண்டு வரவு செலவு திட்ட இடைவெளியையும் குறைத்திருக்கிறோம்.

ஜே.வி.பியின் யோசனையை பார்த்தால் செலவுகள் பெருமளவில் அதிகமாக காணப்படுகிறது. ஆனால் அதனை நிவர்த்திக்க போதுமான வருமான வழிகளை அவர்கள் கூறவில்லை. எனவே போலி வாக்குறுதிகள் வழங்கி மீண்டும் சரிவை ஏற்படுத்தக் கூடாது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளுடன் செல்லத் தவறினால் நிதி கிடைக்காமல் எமது பொருளாதாரம் சரியும். எனவே இவ்வாறான மோசமான அரசியலுக்காக இளையோரின் எதிர்காலத்தைக் காட்டிக்கொடுக்க முடியுமா?

**கேள்வி: அனுரகுமார திசாநாயக்க உங்களுடன் கலந்துரையாடலுக்கு தயார் என்கிறார். அதற்கு நீங்கள் தயாரா?**

**பதில்:** நல்லது. நான் இரண்டு கேள்விகளை முன்வைத்துள்ளேன். அதற்கு அவர் மேடையிலேயே பதிலளிக்கலாம். அவர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்குவது பற்றி பேசுகிறார். சுனில் ஹந்துநெத்தி போன்றவர்கள் அதற்கு முரணாகச் செயற்படுகிறார்கள். அது குறித்து அவர் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

**கேள்வி: அனுர, தேவதைக் கதை சொல்பவர் , சஜித் வேடிக்கை பேசுபவர்.நீங்கள் சூட்சுமக்காரர் என்று சொல்கின்றனர். அதைப் பற்றிய உங்களுடைய நிலைப்பாடு யாது?**

**பதில்:** நான் சூட்சுமக்காரனா இல்லையா என்று தெரியாது. ஜே.ஆர்.ஜயவர்தனவிடம் கற்றுக் கொண்டேன். என்னைப் பார்த்து இளையோர் கற்பார்கள். வாழ்க்கை என்பதே ஒரு பாடமாகும். அதைக் கற்க வேண்டும். மனிதனை உருவாக்குவதும் அழிப்பதும் அறிவுதான். அதனைப் பயன்படுத்தி கஷ்டத்திலிருந்து எப்படி தப்பலாம் என்று சிந்திக்க வேண்டும்.

**கேள்வி: இளைஞர் சமுதாயத்திற்கு 100,000 வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்று உங்கள் கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், கலைப்பிரிவு படித்த வேலையற்ற பட்டதாரிகளும் ஏராளமாக உள்ளனர். உங்கள் கொள்கை அறிக்கையில் அந்தக் குழுவிற்கு தீர்வு கொடுத்துள்ளீர்களா?**

**பதில்:** நாம் விவசாய நவீனமயமாக்கல், தொழிற்சாலைகளை உருவாக்கல், சுற்றுலாவை மேம்படுத்தல், போன்ற விடயங்களை வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காகவே ஆரம்பிக்கிறோம். எனவே, அரச வேலைவாய்ப்புகள், தனியார் துறை தொழில்கள் மற்றும் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கவும் எதிர்பார்க்கின்றோம். சுயதொழில் செய்வதற்கு இலகுவான முறையில் கடனுதவி வழங்கப்படுவதோடு ஓராண்டு கால கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டும். தற்போது, கலைப் பிரிவின் கீழ் பல்கலைக் கழகங்களில் சே ரும் மாணவர்களுக்கு ஆ ங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாடங்கள் உட்படதொழிலுக்குச் செல்வதற்குத் தேவையான தகுதிகளை வழங்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். அப்போது வேலையில்லா கலைப் பட்டதாரிகளின் எண்ணிக்கை குறையும்.

எனவே, வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்க இந்த 100,000 வேலைவாய்ப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**உலகில் வளர்ந்த நாடுகளை விட முன்னணியில் இருந்த எமது நாடு, பொய்யான கோஷங்களை முழங்கும் அரசியலால் பின்தங்கியது**



# அனுரவுக்கு வாக்களித்து நாட்டை கொளுத்துகின்ற கலாசாரத்தை ஆதரிக்க வேண்டாம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



அனுரவுக்கு வாக்களித்து நாட்டைக் கொளுத்துகின்ற கலாசாரத்தை ஆதரிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 40 ஆவது பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் வெலிமடையில் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

"விவசாயிகளும் நுகர்வோரும் பாதுகாப்படைகின்ற வகையில் புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குளிரூட்டி வசதிகள் ஆரம்பிக்கப்படுவதோடு பால் உற்பத்தியாளர்களையும் மிளகு உற்பத்தியாளர்களையும் பாதுகாப்போம். பச்சை வீட்டு நிர்மாணத்திற்காக சலுகை அடிப்படையில் கடன் வழங்குவோம்.

அரசாங்கத்தின் சிறந்த கையாளாக ஜே.வி.பியின் அனுரகுமார திசாநாயக்க காணப்படுகின்றார். நாட்டை வங்குரோத்தடையச் செய்த ராஜபக்ஷக்களுக்காக சஜித் பிரேமதாச ஒருபோதும் கூலிக்கு கோஷம் போட்டதில்லை. பதாகைகளை ஒட்டவில்லை. தலதா மாளிகையில் ராஜபக்ஷகளுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. ஆனால் அநுர குமார திசாநாயக்க அதனை செய்திருக்கின்றார். அவர்கள் விவசாய, நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சுகள் உள்ளிட்ட இராஜாங்க, பிரதி அமைச்சு பதவிகளையும் பெற்று இருக்கிறார்கள்.

நாட்டை கட்டியெழுப்பக் கூடிய சிறந்த குழு எம்மோடு இருக்கின்றது. ஜனாதிபதிகள் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். நான் ஜனாதிபதியானவுடன் சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் பெறாத ஜனாதிபதியாக அர்ப்பணிப்புடன் செயல்படுவேன். ஊதியம் பெறாத தன்னார்வ சேவையாக எனது சேவையை நாட்டுக்கு பெற்றுக் கொடுப்பேன்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.



# சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டுக்கு உயிர் கொடுப்போம்!

## ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க



"அனைவரும் சட்டத்தின்முன் சமமானவர்களே எனும் கோட்பாட்டுக்கு உயிர்கொடுக்க வேண்டியது அவசியமாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தக் கோட்பாட்டுக்கு புத்துயிரளிக்கும் என்பதற்கான உத்தரவாதத்தை நாங்கள் கொடுக்கிறோம். 'சட்டத்தின் ஆட்சியின் முன் அனைவரும் சமமானவர்களே' எனும் கோட்பாட்டினை நாங்கள் கட்டாயமாக அமுலாக்குவோம்" என்று ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் மாநாட்டின் போதே அநுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "சட்டத்தை அமுலாக்குகின்ற நிறுவனங்களுக்கு நாங்கள் சுயாதீனத்தன்மையை வழங்குவோம். ஒருபோதும் மேற்படி நிறுவன முறைமையை நாங்கள் எங்களுடைய தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்த மாட்டோம்.

இந்த நாட்டில் கீர்த்திமிக்கவர்களாக இருந்த நீதிபதிகள், சட்டத்தரணிகள் இன்று இந்த இடத்தில் குழுமியிருப்பது மிக்க மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும். நாட்டின் ஏதேனும் அரசியல் நகர்வு இடம்பெறப் போகின்றபோது முதன்முதலில் அது சட்டத்தரணிகளாலேயே உணரப்படுகிறது.

பெரும்பாலானவர்கள் வாக்குச்சாவடிக்கு செல்வது சாதகமான ஒரு நாட்டை உருவாக்கிக் கொள்ளும் எதிர்பார்ப்புடனேயேயாகும். மக்களின் அந்த எதிர்பார்ப்புக்களை அந்த ஆளும் குழுக்கள் சிதைத்து விட்டன. மக்களின் நோக்கங்களும் ஆட்சியாளரின் நோக்கங்களும் இணையாக பயணிக்கின்ற அரசாங்கமொன்றே இப்போது எங்களுக்குத் தேவை.

எமது நாட்டில் மக்களின் எதிர்பார்ப்பும் ஆட்சியாளரின் எதிர்பார்ப்பும் ஒன்றுக்கொன்று முரணாக அமைகின்ற அரசாங்கங்களே சதாகாலமும் உருவாகின. இந்த இடத்தில்தான் சிக்கல் நிலவுகின்றது. சட்டத்தின் ஆட்சியை ஆட்சியாளர்களே பொருட்படுத்தாமல் விடுவது எமது நாட்டின் பொருளாதாரமும் சமூக கட்டமைப்பும் சீரழிவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மோசடி, ஊழலை நிறுத்திவிடாமல் நாட்டை சீராக்குவது பற்றி நினைத்து பார்க்கக்கூட முடியாது. தற்போது இந்த மோசடி, ஊழல்கள் காரணமாகவே எமது பெரும்பாலான துறைகள் சீர்குலைந்துள்ளன.

நான் உங்களுக்கு ஒரு விடயத்தை கூறி வைக்க வேண்டும். உங்களின் தேவையும் எங்களின் தேவையும் ஒன்றேயன்றி இரண்டல்ல. நாட்டை மீளக்கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றாக உழைப்போம். அதற்காக அனைவரையும் ஒன்றுசேருமாறு அழைப்பு விடுக்கிறேன்" என்று அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

# ஹாபிழாக்கள், துறைசார் பட்டதாரிகளை உருவாக்கும் பதுளை/ பாத்திமா வழிகாட்டல் மையம் – ஒரு பார்வை





இலங்கையின் பெண்கள் கல்வி வரலாற்றில் முன்னோடி கல்வி செயற்திட்டமான "பெண் பிள்ளைகளை அல் குர்ஆனை அகத்தில் சுமந்த ஹாபிழாக்களான துறைசார் பட்டதாரிகளாக உருவாக்குவோம்"! எனும் செயற்திட்டம் பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அடுத்ததாக அமைந்துள்ள காணியில் கடந்த 2024/03/21 ஆம் திகதி நோன்பு மாதம் (10ஆம் நோன்புடன்) பதுளை பாத்திமா வழிகாட்டல் மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்புரட்சிகர செயற்திட்டம் மலையக முஸ்லிம் கவுன்சில் (UCMC) மற்றும் பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து உருவாக்கப்பட்ட பாத்திமா வழிகாட்டல் மையத்தினூடாக மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

சிறந்த நிர்வாக அனுபவத் தேர்ச்சியும் கற்பித்தல் அனுபவமும் விடயத் தெளிவுமுள்ளதோர் குழுமத்தின் ஒன்றிணைந்த ஆலோசனைகள் அடங்களாக மிக்க நுணுக்கமாக திட்டமிடப்பட்டுள்ள இச்செயற்திட்டமானது பெண் பிள்ளைகளை ஹாபிழாக்களாகவும் அதேவேளை வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் துறை சார்ந்த ஆளுமைகளாகவும் உருவாக்கிட ஆர்வமுள்ளவர்களுக்கோர்




வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**இச்செயற்றித்திட்டத்தின் நோக்கக் கூற்று**

"பெண்பிள்ளைகளை அல் குர்ஆனை அகத்தில் சுமந்த துறைசார் பட்டதாரிகளாக உருவாக்குவோம்"

**பணிக்கூற்று :**

புனித அல் குர்ஆனை அகத்தில் சுமந்த துறைசார் பெண் ஆளுமைகளை உருவாக்கும் நோக்கில் புனித அல் குர்ஆனின் போதனைகள் வழிகாட்டல்களையும், இலங்கை அரசின் கல்விக் கொள்கையின் அனுகூலங்களையும் உள்ளடக்கிய இம்முன்னோடி செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல். எனும் செயல் நெறியுடன் இப்பாடநெறி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பதுளை பர்தா போராட்டத்தின் வெற்றிக் கேடயமாக அமைந்த பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியானது கடந்த சுமார் ஆறு வருடங்களாக தொடர்ந்தேர்ச்சையாக க பொ த (சா/த) மற்றும் (உ/த) பரீட்சைகளில் தொடர்ந்தும் நூறுவீத பெறுபேறுகளை வழங்கி மாகாண மட்டத்தில் தொடர்ந்தும் முதல் நிலை பாடசாலையாகவும் இன்னும் பல சாதனைகளையும் படைத்துவரும் அதன் இமாலய சாதனைகளே இந்த முன்னோடி செயல்திட்டத்திற்கான அஸ்திவாரமாக அமைந்துள்ளது.

அத்துடன் இதன் முன்னோடிகளாக செயற்படுபவர்களின் சிந்தனா ரீதியிலான செயல் திட்டமும் அதன் காலத்தின் தேவையையும் உணர்ந்த தனது பெயரை பகிரங்கப் படுத்த விரும்பாத தனவந்தர் ஒருவரின் மூலம் குறித்த காணி கொள்வனவு செய்யப் பட்டு இத்தூய பணிக்காக வக்பு செய்யப்பட்டுள்ளது... அல்ஹம்துலில்லாஹ் இச்செயல் திட்டமானது பதுளை ப/ பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி அமையப் பெற்றுள்ள காணிக்கு அடுத்ததாக அமைந்துள்ள (எல்லைக் காணியாக அமைந்துள்ள) காணியை விலைக்கு வாங்கப்பட்டு அதில் அமைந்திருந்த வீட்டை மாணவிகள் தங்கி கற்கக்கூடிய விடுதியாக வடிவமைத்து அதனை "பாத்திமா வழிகாட்டல் மையம்" என பெயரிடப் பட்டு குறித்த இந்த பாடநெறி முன்னெடுக்கப் படுகின்றது.



மேற்குறித்த காணியை கொள்வனவு செய்வதற்காக சுமார் ஒரு கோடியே பத்துலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஓய்வு நிலை அதிபரும் மலையக முஸ்லிம் கவுன்சிலின் தலைவருமான ஏ.எம்.எம் முஸம்மில் (BA Hons), இதன் பணிப்பாளராக செயலாற்றுகின்றார். அத்துடன் பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் எம்.ஏ ஹைருன் நிஸா (BA Hons) அவர்களின் நேரடி நிர்வாக கண்காணிப்பின் கீழ் நடைபெறும் இப்பாடநெறிக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழக பட்டதாரியான அல் ஆலிமா சாஜிதா பாரூக் (சித்தீகி) (BA), (Higher Dip in islamic studies) அவர்களின் ஹிப்ழ் பிரிவு நெறிப்படுத்தலிலும் மற்றும் க பொ த (உ/ த ) விஞ்ஞான பிரிவில் பல மாணவர்களை வைத்தியத் துறை மற்றும் பொறியியல் துறை உட்பட இதர உயர் கல்வி துறைகளுக்கும் பல மாணவர்களை தேர்ச்சி பெறச் செய்த, அத்துடன் கற்பித்தல் துறையில் பல வருடகால அனுபவமுள்ள பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், துறைசார் வல்லுனர்கள் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பாடநெறி கடந்த சுமார் ஆறுமாத காலமாக நேர்த்தியாக நடைபெற்று வருகின்றது.

எமது இந்த சித்தனையின் வளர்ச்சிப்போக்கு இன் ஷாஅல்லாஹ் இன்னும் நான்கைந்து வருடங்களில் அல் குர் ஆனை அகத்தில் சுமந்த வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் இதர துறை சார்ந்தவர்களாகவும் எம் சமூகத் தூண்களாக எம்மத்தியில் மிளிர்ந்திட உங்களின் மேலான துஆக்களில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

## நாளைய எமது சமூகத்தின் அகல் விளக்காய் மிளிரப் போகும் வழி காட்டல் மையம்

### உயர் நீதிமன்ற சட்டத்தரணி இம்தியாஸ் அப்துல் வஹாப்



ஓய்வின்றி வீசிக் கொண்டிருக்கும் தொடர் அலையாக UCMC யின் இன்னுமொரு உன்னத செயல்திட்டம் 'பாத்திமா வழி காட்டல் மையம்' கடந்த சுமார் முப்பது வருடங்களுக்கு முன் பதுளை உமேடா அமைப்பினராக சமூகத் தொண்டாற்றிக் கொண்டிருந்த இந்த UCMC யின் முக்கிய உறுப்பினர்கள் அன்று நம் பிள்ளைகளின் உயர் கல்வியை நாடி கல்முனை, மருதமுனை, மாவனல்லை போன்ற வெளிப் பிரதேசங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். மாகாண மட்டத்தில் க பொ த (சா/த) சிறந்த பெறுபேறுகளை பெற்றவர்களை தெரிவு செய்து அவர்களுக்கான புலமை பரிசில்களை வழங்கி அவர்களின் உயர் கல்விக்காக உதவிகளை செய்தார்கள் . காலப் போக்கில் வெலிமடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உயர் தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பித்து எம் பிரதேச மாணவிகளின் உயர்கல்வியை ஊக்குவித்தார்கள். இன்று அந்த விஞ்ஞானப் பிரிவினூடாக பல வைத்தியர்களும் பொறியியலாளர்களும், பல துறை சார்ந்த வல்லுனர்களும் உருவாக்கப் பட்டுள்ளார்கள் என்று என்னும் பொது உலப் பூரிப்படைகின்றேன்.

அந்த வரிசையில் இன்று UCMC யாக (மலையக முஸ்லிம் கவுன்சிலாக) இந்த பாத்திமா வழிகாட்டல் மையத்தை ஆரம்பித்து எமது பிரதேச பெண்பிள்ளைகளின் உயர் கல்விக்காக தனியானதொரு நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

UCMC உறுப்பினர்களுக்கும் பாத்திமா வழிகாட்டல் மையத்தின் நிர்வாகத்தினருக்கும் எமது சமூகம் எப்பொழுதும் துவா செய்யக் கடமைப்பட்டுள்ளது.

## சமூகத்தின் முதுகெலும்பாக பரிணமிக்கும் பாத்திமா வழிகாட்டல் மையம்

### அஷ்ஷேஹ் ஹிதாயத்துல்லாஹ் ( பஹ்மி)
### (தலைவர், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா– பதுளை மாவட்டம்)



கடந்த சுமார் பதினைந்து வருடங்களாக மலையக முஸ்லிம் கவுன்சிலின் (ucmc) ஆலோசகராக பணிபுரியும் நான் கடந்த காலங்களில் இவர்களால் முன்னெடுக்கப் பட்ட பல இன்னோரன்ன சமூகப் பணிகளில் பங்கேற்று தேவையான போது ஆலோசனைகளை வழங்கியும் வருகின்றேன்.

பதுளை பாத்திமா மகளிர் கல்லூரி உருவாக்கத்தில் இவர்களின் பங்களிப்பு, ஊவா மாகாணத்தில் தொடர்ந்து ஆறு வருடங்களாக முதல் நிலை பாடசாலையாக அக் கல்லூரியை நிலைநிறுத்துவதில் UCMC யின் ஆலோசனைகளும் செயற்பாடுகளும் மலையக ஆசிரிய நியமனங்களில் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைக்கப்படும் போது அதற்கு எதிராக இவர்கள் களத்தில் நின்று போராடி சமூகத்திற்கு பெற்றுத் தந்த வெற்றிகள், அதே போல் ஹசலக பிரதேசத்தில் வாழும் சகோதரி மசாஹிமா தர்ம சக்கரை சின்னத்தை அணிந்து சென்றதாக கூறி பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப் பட்ட போது அவருக்காக களமிறங்கி போராடி அவருக்கு விடுதலையை பெற்றுத்தர முன்னோடிகளாக செயற்பட்டமை, ஹசலக பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களுக்காக ஒரு பள்ளிவாசலை நிறுவி இன்று சுதந்திரமாக மார்க்க கடமைகளை பின்பற்ற அந்த முஸ்லிம்களுக்கு வழிசமைத்து கொடுத்தமை, ஹீல் ஓயா உமா ஓயா திட்டத்தில் பாதிக்கப் பட்டு எந்த வித அரச உதவிகளுமின்றி கைவிடப் பட்ட நிலையிலிருந்த 18 முஸ்லிம் குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுத் தர UCMC முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் போன்ற UCMC யின் இடைவிடாத வேலைத்திட்டங்களை நான் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன்.









# கிழக்கின் குரல்



## கல்முனையில் பண்ணை தொழிலை மேம்படுத்த நடவடிக்கை

### மிருக வைத்திய அதிகாரி டொக்டர் எம்.மயூரனி பாமினி

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனையில் அரச கால்நடை வைத்தியர் காரியாலயத்தால் பண்ணையாளர்கள் தொழிலை மேம்படுத்த பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக மிருக வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி. எம்.மயூரனி பாமினி தெரிவித்தார்.

மாகாண அபிவிருத்தி செயற்றிட்டம், மத்திய அரசாங்க செயற்றிட்டம் என இருவகை செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சுகாதார வைத்திய அதிகாரியின் சிபாரிசின் பேரில் தொழில் முயற்சியாளர்களுக்கு பன்னிரெண்டாயிரம் ரூபா வீதம் பணம் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கிராமிய ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளரால் சிபாரிசு செய்யப்பட்டோருக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்துடன் இலவச கோழிக் குஞ்சுகள் தடுப்பு மருந்தேற்றல் விழிப்புணர்வு, நடமாடும் சேவை போன்ற செயற்றிட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஐந்து ஆண்டுகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக பதவி வகிக்க வேண்டும்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் , சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்கள்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக இருக்கவேண்டுமென தேசிய காங்கிரஸூம் மக்களும் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று மாவடிச்சந்தியில் 'இயலும் ஸ்ரீ லங்கா முயலும் நம் கட்சி' பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாட்டையும் மக்களையும் பொருளாதார ரீதியாக பாதுகாத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. நாங்கள் இதற்கு முன்னர் இவருடைய அரசியலோடு ஒத்து போகாதவர்களாக இருந்தோம். ஆனால் தற்போதைய நாட்டின் நிலைமைக்கேற்ப அவருடைய ஆட்சி தான் தேவை என்பதை உணர்ந்துள்ளோம். எமக்கு முன்னர் வாழ்ந்த முன்னோர்கள் பல கஷ்டங்களோடு அனுபவங்களை கண்டுள்ளனர். அதன் பின்னர் சுனாமி என்கின்ற அனுபவத்தை கண்டோம். பல உயிர், சொத்து அழிவுகளை கண்டோம். ஆனால் பொருளாதாரத்தில் மக்கள் கண்ட கசப்பான அனுபவங்களை கடந்தகாலங்களில் பார்த்தோம்.

இத்தகையதொரு கடினமான சூழ்நிலையில் தான் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தானாக முன்வந்து நட்டாற்றில் இருந்த நாட்டையும், மக்களையும் கரம்பிடித்து நிதியமைச்சு மற்றும் பிரதம அமைச்சு பதவிகளை பொறுப்பேற்று அதன்பின்னர் ஜனாதிபதி பதவியும் அவருக்கு கிடைத்தது என தெரிவித்தார்.

## நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலையின் 78 ஆவது ஆண்டு நிறைவு



**நிந்தவூர், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்**

நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலையின் 78 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகள் பாடசாலையின் காசிமியா மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.ஏ.கபூர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினரும் எல்.ஓ.எல்.சி.நிறுவனத்தின் கிழக்கு பிராந்திய உதவி முகாமையாளருமான ஏ.எல்.எம். பாயிஸ், பழைய மாணவர் சங்க உப தலைவரும், இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய பிரதம பொறியியலாளருமான ஏ.எம்.ஹைகல் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது 78 ஆவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட ஸ்டிக்கர், பேனை என்பன அதிதிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

## சம்பந்தன் ஐயாவின் ஆசையை நிறைவேற்ற சஜித் பிரேமதாசவை ஆதரிக்க வேண்டும்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மறைந்த சம்பந்தன் ஐயாவின் ஆசையை நிறைவேற்ற சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டு.அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடியில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மறைந்த சம்பந்தன் ஐயா உயிரோடு இருக்கும்போது சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக்க வேண்டும் என பாடுபட்டவர். அது நடைபெறாமல் போய் விட்டது.



மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அந்த மாற்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெளிப்படுத்தப்படும். உண்மையான சிவில் நிர்வாகம் நடைபெறுவதற்காக மட்டக்களப்பு மக்களும் அந்த மாற்றத்திற்காக ஒன்றிணைய வேண்டும். கடந்த அரசாங்கத்தில் சரியான நிர்வாகம் நடைபெறவில்லை. ஜனாதிபதி வேட்பாளர் இன மத வேறுபாடுகள் இன்றி சகலரையும் மதித்து நடந்து கொள்ளக்கூடிய ஒருவராக இருக்கின்றார். சஜித் பிரேமதாச தமிழ் மக்களை அதிகம் நேசிக்கின்றார். இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என ஏற்றுக்கொண்ட கட்சி. அந்த கட்சியே சஜித் பிரேமதாசவை ஆதரித்துள்ளது.

தமிழ் மக்களைக் குழப்புவதற்காக பல அரசியல் கட்சிகள் பிரிக்க நினைக்கின்றார்கள். அவ்வாறான பொய்யான தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. அதனை மக்கள் பொருட்படுத்தாமல் மக்களுக்கு ஏற்ற கட்சியில் போட்டியிடும் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

## மாபெரும் டெங்கு கட்டுப்பாடு வேலைத்திட்டம்



**தோப்பூர் குறூப் நிருபர்**

திருகோணமலை *Advanced Technology Institute* இன் நிறுவனத்தில் கல்வி கற்கும் HNDIT மாணவர்களின் பங்களிப்புடன் நேற்றுமுன்தினம் மூதூர் நகர் பகுதிகளில் நுளம்பு கட்டுப்பாடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கள பரிசோதனை மூதூர் சுகாதார வைத்தியதிகாரி முகைதீன் பாவா ஹில்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பொருளாதார வீழ்ச்சியிலிருந்து தனிமனிதனாக நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி ரணில்

### ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம்.முஸ்தபா

பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் தனி ஆளாக பாராளுமன்றத்துக்குள் நுழைந்து மிகக் குறுகிய காலத்தில் நாட்டை சிறந்ததொரு நிலைக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம். முஸ்தபா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து "இயலும் ஸ்ரீ லங்கா" பிரசாரத்தில் இளைஞர்கள் மத்தியில் அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

13 ஆவது சீர்திருத்தத்தில் உள்ளதை போல காணி, பொலிஸ் அதிகாரத்தை தருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாக்குறுதி வழங்கியிருக்கிறார்.



இலங்கை போன்ற ஒரு சிறு நாட்டில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குகின்றபோது அதை எவ்வாறு சிறந்த முடிவாக பார்க்க முடியும் என தெரியவில்லை. ஏன் என்றால், யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவர் கொழும்புக்கு வருவதாக இருந்தால் 400 கிலோமீற்றர்களை தாண்டி கிட்டத்தட்ட நான்கு மாகாண பொலிஸ் படையினரை கடந்து வர வேண்டும்.

இலங்கையின் கொரோனா காலத்தை பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு செல்வதற்கு பல சோதனை சாவடிகளை கடந்து செல்ல வேண்டியிருந்தது. 13ஆவது திருத்தம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டால் அப்படியான நிலை தான் வரும். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சி உட்பட முக்கிய அரசியல் கட்சிகள் ஆதரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

**(அம்பாறை மத்திய செய்தியாளர்)**

## மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது

### கிண்ணியாவில் ஜனாதிபதி வேட்பாளர் நாமல்

**கிண்ணியா மத்திய நிருபர்**

வடக்கையும் கிழக்கையும் மீண்டும் இணைக்க மாட்டோம். அத்தோடு, மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட மாட்டாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபை நூலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு, உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூதூர் தொகுதி இணைப்பாளர் இப்ராஹிம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்நாட்டில் இப்போது எல்லா சமூகங்களும், இனங்களும் இணைந்து வாழ்வதற்கான சூழலொன்றை உருவாக்கி கொடுத்திருக்கிறோம். எனவே இந்த நாட்டை பிரித்து, இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தோற்றுவிக்க முடியாது. இதன் காரணமாக நாங்கள் வட மாகாணத்தோடு, கிழக்கு மாகாணத்தை மீண்டும் இணைக்கமாட்டோம்.



நான் ஒரு பௌத்தன். இதன் காரணமாக ஏனைய மதங்களை நான் மதிக்கின்றேன்.

இஸ்லாமியர்களும் இந்துக்களும் தங்களுடைய மார்க்க வழிபாடுகளை இந்த நாட்டில் சுதந்திரமாக மேற்கொள்வதற்கும் அவர்களுடைய வாழ்வியல் உரிமைகளுக்குமான தேவையான பாதுகாப்பை புதிய அரசியலமைப்பின் ஊடாக ஏற்படுத்துவேன் என உறுதியளித்தார். மதங்களையும் இனங்களையும் பிரிப்பதற்கு அரசியலை நான் ஒருபோதும் பயன்படுத்தமாட்டேன். நீங்கள் என்னை நம்புங்கள். சிலர், உங்களிடம் இருந்து எங்களை பிரிப்பதற்கு முயற்சி செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

### சித்திரப் போட்டியில்

## துறைநீலாவணை மகாவித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவு

**அம்பாறை மத்திய நிருபர்**

அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டியில் துறைநீலாவணை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 8 மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம்மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் கு.திருச்செல்வம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.




இந்நிகழ்வில் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தை எஸ்.மிதுஷனும், மூன்றாமிடத்தை உ.யருக்ஸனும் பெற்றுக்கொண்டதோடு, கணினி ஓவியம், பொருட்கூட்டம், புத்தக அட்டை, மரபு ரீதியான இரு பரிமாண கலாசார அலங்கார நிர்மாணிப்பு மற்றும் சுவரொட்டி சித்திரம் போன்ற தலைப்புகளின் கீழ் சி.வித்தகன், தூ.லிலக்ஸாந், பே.கிரிஷாளன், த.கிதுசன், எஸ்.ஹேமநாத், கி.தட்ஷாயினி ஆகிய மாணவர்கள் சிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். துறைநீலாவணை மகா வித்தியாலயத்திலிருந்து முதன்முறையாக அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டியில் தேசிய மட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு முறையான பயிற்சி மற்றும் வழிகாட்டல்களை தேசிய கலைஞரும், ஓவிய ஆசிரியருமான கலைஞர். ஏ.ஓ.அனல் (ஜீவராசா) வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்த அழகியல் நிறுவகத்தின் 16 ஆவது புகைப்படக் கண்காட்சி

**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கு பல்கலைக்கழக மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் 16 ஆவது புகைப்படக் கண்காட்சி அண்மையில் நிறுவக வளாகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி BATTIMEDIA இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சிவகுமாரினால் பிடிக்கப்பட்ட புகைப்படங்களே இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் போராசிரியர் பாரதி கெனடி புளோரன்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.



BATTIMEDIA அனுசரணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள குறித்த புகைப்படக் கண்காட்சியில் விசேட அதிதியாக மட்டக்களப்பு கல்லடி 243 வது இராணுவ படைப்பிரிவின் பிறிக்கேட் கொமாண்டர் சந்திமகுமார சிங்க கலந்து சிறப்பித்தார். இப்புகைப்பட கண்காட்சியானது எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் அனைத்தும் BATTIMEDIA இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சிவகுமாரினால் புகைப்படமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வைத்திய அத்தியட்சகராக டொக்டர் பிரதீபா பார்த்தீபன் கடமையேற்பு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக டொக்டர் திருமதி பிரதீபா பார்த்தீபன் தனது கடமையை (09) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றி வந்த சிரேஷ்ட தரம் 1 இல் உள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நேர்முகத்தேர்வு அண்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவினால் நடாத்தப்பட்டது.



அத்தேர்வில் டொக்டர் திருமதி பிரதீபா பார்த்தீபன் சித்தியடைந்து கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக நியமனம் பெற்று அவர் தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தற்காலிக ஆள் அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக ஆள் அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

தேசிய அடயாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் மதகுருமார்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அடையாள அட்டை போன்ற எந்தவித அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாதவர்களுக்கே இவ்வாறு அடையாள அட்டை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.




# பொருளாதார சவால்களுக்கு மத்தியில் நிலையான வளர்ச்சிக்காக UKஇன் DCTS எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பலம் சேர்க்கும் ஆடைத் தொழில்துறையானது, இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையூட்டும் வகையில், தற்போது மற்றுமொரு நெருக்கடியான கட்டத்தை எட்டியுள்ளது.

COVID19 தொற்றுநோயைத் தொடர்ந்து வளர்ந்து வரும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள UKஇன் வளரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் (DCTS) பலப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒரு நாட்டின் வளர்ச்சியில் முன்னணி காரணியாக இருக்கும் நாட்டின் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் (SMEs) இத்திட்டத்தின் தாக்கம் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

DCTS ஆனது முந்தைய பொதுமைப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வுகளை (GSP) மாற்றியமைக்கிறது. இது இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் 99% க்கும் அதிகமான சுங்க வரிகளுக்கு தகுதியுடையதுடன் UK சந்தையில் இலங்கைக்கு மேம்பட்ட வாய்ப்புக்களை வழங்குகிறது. இலங்கையின் ஆடைகளுக்கான இரண்டாவது பெரிய சந்தையாக UK இருப்பதால், இந்தத் திட்டமானது ஏற்றுமதி வருவாயை கணிசமாக உயர்த்துவதுடன், தொழில்துறைக்கு மிகவும் தேவையான ஸ்திரத்தன்மையையும் வழங்க முடியும். பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் வர்த்தகப் பணிப்பாளர் Mara Waters, இலங்கைக்கான DCTS இன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர் மேலும் கூறுகையில், "இந்த திட்டம் வர்த்தகத்தை அதிகரிப்பது மட்டுமல்ல; இது பங்காளித்துவ நாடுகளில் நிலையான வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும். இலங்கையைப் பொறுத்தவரை, இது பொருளாதார மீட்சியை கட்டியெழுப்புவது, வேலைகளை உருவாக்குவது மற்றும் வர்த்தகத்தின் அனுகூலங்கள் SME துறையில் உள்ளவர்கள் உட்பட முழு சமூகத்தையும் சென்றடைவதை உறுதி செய்வதாகும்." என தெரிவித்தார்.

இச்சலுகை ஆரம்பிக்கப்பட்ட முதல் 11 மாதங்களில், அதாவது



ஜூலை 2023 முதல் மே 2023 வரை, இலங்கையில் இருந்து இங்கிலாந்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு சுமார் 571 மில்லியன் பவுண்டுகள். இந்த பொருட்களில், 304 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள பொருட்கள் நேரடி DCTS நிவாரணத்தைப் பெற்றவை ஆகும்.

# அமானா வங்கியின் சுய–வங்கிச் சேவைகள் காத்தான்குடி கடற்கரை வீதிக்கு விஸ்தரிப்பு




அமானா வங்கி தனது புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை காத்தான்குடி கடற்கரை வீதிக்கு விஸ்தரித்திருந்தது. அதனூடாக அப்பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு எந்நேரத்திலும் பணத்தை மீளப் பெறுவது, பண வைப்புகளை மேற்கொள்வது மற்றும் காசோலை வைப்புகளை மேற்கொள்வது போன்ற வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சுய வங்கி நிலையத்தின் அங்குரார்ப்பணத்துடன், அமானா வங்கியின் நாடு முழுவதிலும் காணப்படும் அணுகும் பகுதிகள் 64 ஆக அதிகரித்துள்ளன. இதில் 33 முழு வசதிகளையும் கொண்ட கிளைகளாகவும், 31 சுய சேவை நிலையங்களாகவும் அமைந்துள்ளன. அல்அக்ஸா மசூதி தொகுதி, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி 03 எனும் பகுதியில் அமைந்துள்ள இந்த சுய வங்கி சேவை நிலையத்தினூடாக, வங்கி வசதிகள் காணப்படாத அல்லது வங்கி வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் வங்கியை அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அமானா வங்கியின் அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை வங்கியின் பிரதம இடர் அதிகாரி எம். எம். எஸ். குவைலித் அங்குரார்ப்பணம் செய்ததுடன், வங்கியின் உப தலைவர் – நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப் படுத்தல் சித்தீக் அக்பர், உள்ளூர் வியாபார பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள், பிரதேசவாசிகள் மற்றும் பிராந்தியத்தின் இதர பங்காளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விரிவாக்கம் தொடர்பில் வங்கியின் பிரதம இடர் அதிகாரி எம். எம். எஸ். குவைலித் கருத்துத் தெரிவிக்கையில், "காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு, மற்றுமொரு பகுதியில் எமது பிரசன்னத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பல வருட காலமாக இப்பகுதியில் எமது உறுதியான பிரசன்னத்தை பேணி வருகின்றோம். எம்மீது காத்தான்குடி பிரதேசவாசிகள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நாம் நன்றி தெரிவிப்பதுடன், இந்த புதிய நிலையத்தினூடாக, வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்த எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது.

ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு பல்கலைக்கழக கொடுப்பனவுகளில் விசேட சலுகைகளை அறிவித்துள்ள கொமர்ஷல் வங்கி

COMMERCIAL BANK

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்காக அப்பல்கலைக்கழகங்களுக்கு பணம் செலுத்தும் மாணவர்களுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்கு கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்கவுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

இதற்கிணங்க 2024 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் புதிய மாணவர் கோப்புகளைத் திறக்கும் இலங்கையர்களுக்கான ஆரம்ப தந்தி பரிமாற்ற (TT) கட்டணங்களை பாதியாகக் குறைப்பதாகவும், அக்காலப்பகுதியில் பெறப்படும் கல்விக் கடன்களுக்கான வட்டி வீதத்தை 0.5% குறைப்பதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக வெளிநாட்டுக் கல்விக் கொடுப்பனவுகளுக்கு கொமர்ஷல் வங்கியைத் தங்கள் பங்குதாரராக தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு, அவர்களின் வெளிநாட்டு பகுதிகளுக்கு சிரமமில்லாமல் பணம் செலுத்துவதற்கு, UnionPay சர்வதேச டெபிட் அட்டை இலவசமாக வழங்கப்படும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது. மேலதிகமாக, இத்தகைய மாணவர்கள் எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் துரிதப்படுத்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் வங்கியின் சர்வதேச ரீதியிலான வலுவான வலையமைப்பின் மூலமும் பயனடைவார்கள். வங்கியானது எளிமையான, எல்லையற்ற நிதி பரிமாற்றங்களை வழங்குவதற்கு மிகச்சரியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் வெளிநாட்டுக் கல்வியை எளிதாக்குவதற்கு சிறந்த பங்காளித்துவத்தை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வியைத் தொடர்ந்து கொண்டு தொழில் புரியும் மற்றும் தொழில் இல்லாத மாணவர்களுக்கு தளர்வான விதிமுறைகளுடன் கல்விக் கடன் வசதிகளை வழங்குகிறது.

இந்தக் கடன்கள் மீளச்செலுத்துவதற்கான நீண்ட காலத்தையும் மற்றும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களையும் கொண்டவையாக திகழ்கின்றன.

# BestWeb.lk 2024 விருது விழாவில் ECO SPINDLES மற்றும் BEIRA BRUSH இணையத்தளங்களுக்கு உயர் விருது





தூரிகைப் பொருட்கள் மற்றும் Monofilaments உற்பத்தித் துறையில் முன்னணி நிறுவனமான BPPL Holdings இன் துணை நிறுவனங்களான Eco Spindles மற்றும் Beira Brush ஆகியவற்றின் இணையத்தளங்கள் அண்மையில் நடைபெற்ற BestWeb.lk 2024 விருது விழாவில் உற்பத்தி மற்றும் தொழில்துறை பிரிவில் 2 முக்கிய விருதுகளை சுவீகரித்துக் கொண்டது.இதன்படி, Eco Spindles இணையத்தளத்துக்கு தங்க விருதும், Beira Brush இணையத்தளத்துக்கு வெள்ளி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இலங்கையில் உள்ள நிறுவனங்களின் இணையத்தளங்களை ஊக்குவிக்கவும், பிரபலப்படுத்தும் நோக்கில் 2009 ஆம் ஆண்டு முதல் LK Domain Registry இனால் வருடாந்தம் BestWeb.lk விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. உள்ளூர் திறமையாளர்களை இணங்கண்டு கொண்டாடுவது மற்றும் பங்கேற்பாளர்கள் தங்கள் ஆக்கப்பூர்வமான மற்றும் தொழில்நுட்ப திறன்களை இணையத்தளத்தில் விளம்பரப்படுத்துவதற்கும் முன்னிலைப்படுத்துவதற்கும் தளத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த விருது விழா நடைபெற்று வருகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

அந்தவகையில் 14ஆவது தடவையாக இம்முறை நடைபெற்ற BestWeb.lk 2024 விருது விழாவில் 500க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் பல்வேறு பிரிவுகளில் போட்டியிட்டனர். இணையத்தள மற்றும் தொழில்துறை நிபுணர்களைக் கொண்ட நடுவர் குழு, படைப்பாற்றல், வடிவமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இணையத்தளங்களை மதிப்பீடு செய்து விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்படி, மிகவும் போட்டித்தன்மை நிறைந்த உற்பத்தி மற்றும் தொழில்துறை பிரிவில் Eco Spindles மற்றும் Beira Brush ஆகிய இணையத்தளங்கள் பெற்றுக்கொண்ட தங்கம் மற்றும் வெள்ளி விருதுகளானது, அனைத்து தளங்களிலும் BPPL Holdings நிறுவனத்தின் புத்தாக்கம் மற்றும் சிறப்புக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதுடன், டிஜிட்டல் முன்னேற்றத்தையும், தொழில்துறையில் அதன் முன்னணி நிலையையும் உறுதிப்படுத்துகின்றன.

# பெண்கள் வணிக மேம்பாட்டு பயிற்சியாளர்களை மேம்படுத்துவதற்காக இணைந்த இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் MDF

இலங்கை வர்த்தக சம்மேளனம், MDF Training & Consultancy நிறுவனத்துடன் இணைந்து, இலங்கையில் பெண்கள் வணிக மேம்பாட்டுப் பயிற்சியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட, பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் (ToT) திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. "இலங்கையில் பெண்கள் வணிக மேம்பாட்டுப் பயிற்சியாளர்களின் திறனைக் கட்டியெழுப்புதல்" எனும் தலைப்பில் இந்த நிகழ்ச்சித் திட்டம் இரண்டு முக்கிய அமர்வுகளாக நடத்தப்பட்டது.



இதில் தெரிவு செய்யப்பட்ட 30 பயிற்சியாளர்கள் பங்குபற்றினர். இது தொடர்பில் MDF Training & Consultancy திட்ட முகாமையாளர் Zoe Lawson தெரிவிக்கையில், "இலங்கையில் பெண்களுக்குச் சொந்தமான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான (SME) 17 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி இடைவெளி மற்றும் இலங்கையில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் பாலின சமத்துவமின்மை ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. வங்கிக் கடன் திட்டங்கள், பிரத்தியேகமான பயிற்சி மற்றும் வணிகத் திட்டமிடல் ஆகியன, தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவு வழிமுறைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவும்" இந்த திட்டமானது,

பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவளித்து வழிகாட்டக்கூடிய பெண் பயிற்சியாளர்களின் ஆற்றல் மிக்க வலையமைப்பை வளர்ப்பதற்கான பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். பெண்களின் தொழில்முனைவு, இணைய வர்த்தகம், சூழலுக்கு உகந்த வணிகங்கள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வணிக பயிற்சித் திறன்கள் போன்ற தலைப்புகளில் இங்கு விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

# இலங்கையில் டிஜிட்டல் வங்கிச்சேவையில் தலைமைத்துவத்தை திடப்படுத்தியுள்ள மக்கள் வங்கி

இலங்கையில் வங்கிச்சேவை மற்றும் நிதியியல் துறையில் முன்னிலைச் சக்தியாகத் திகழ்ந்து வருகின்ற மக்கள் வங்கி, தனது டிஜிட்டல் தளங்களில் 3 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் பதிவுகளைக் கடந்து, டிஜிட்டல் மகத்துவத்தில் தான் கொண்டுள்ள அர்ப்பணிப்பை மீண்டும் வெளிக்காண்பித்துள்ளது. அதன் புத்தாக்கமான இணைய வங்கிச்சேவைகள், மொபைல் வங்கிச் சேவை செயலிகள் மற்றும் வோலட் தீர்வுகள் ஆகியவற்றினூடாக, சௌகரியம், பாதுகாப்பு மற்றும் அணுகக் கூடிய வங்கிச்சேவை ஆகியவற்றின் தராதரங்களை மக்கள் வங்கி தொடர்ந்தும் மேம்படுத்தி வருகின்றது.




"எமது இணைய வங்கிச்சேவை தளங்கள் மற்றும் மொபைல் செயலிகள் ஆகியன வாடிக்கையாளர் சௌகரியம், பாதுகாப்பு மற்றும் அணுகக்கூடிய தன்மை ஆகியவற்றை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பரவலாக பிரபலமடைந்துள்ளமைக்கு அவை பங்களித்துள்ளன," என்று மக்கள் வங்கியின் தலைவர் திரு. சுஜீவ ராஜபக்ச அவர்கள் குறிப்பிட்டார்.

"வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு தீர்வாக, இலகுவான திறன் மிக்க மற்றும் நிகழ்நேர தீர்வுகளை வழங்கி, இலங்கையில் வங்கித் துறையின் பரிமாண வளர்ச்சியை முன்னின்று வழிநடாத்திச் செல்வதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார். மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா அவர்கள் இச்சாதனை இலக்கின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்துகையில், "3 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவுகளுடன், எமது வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள வலுவான வரவேற்பு, எமது டிஜிட்டல் வங்கிச் சேவை மூலோபாயத்தின் திறனுக்கு சான்றாக உள்ளது.

# வெள்ளவத்தையில் தனது 57ஆவது கிளையை திறந்த அசட்லைன் பைனான்ஸ் லிமிடட்

டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முழுமையான உரிமையைக் கொண்ட உப நிறுவனமான அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம் தனது 57ஆவது கிளையை வெள்ளவத்தையில் திறந்துவைத்து மற்றுமொரு மைல்கல்லை எட்டியுள்ளது. அவிசாவளை, பத்தரமுல்லை, பொரள்ளை, மாளிகாவத்தை, பிலியந்தலை மற்றும் நுகேகொட ஆகிய பகுதிகளில் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ள அலுவலகங்களுடன் இல 250, காலி வீதி, கொழும்பு 06 என்ற முகவரியில் அமைந்துள்ள இந்தப் புதிய கிளை கொழும்பு மாவட்டத்தில் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதற்கான ஏழாவது கிளையாகப் பணியாற்றும்.

இந்தப் புதிய கிளை சுப நேரத்தில் அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தலைவரும், குழுமத் தலைவரும், குழும முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹண திசாநாயக்க, அசட்லைன் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷான் நிசங்க, அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர் ரொமனி பராக்ரம ஆகியோரால் சுப நேரத்தில் திறந்துவைக்கப்பட்டது. வாகனங்களுக்கான லீசிங், வாகனக் கடன்கள், செயற்பாட்டு மூலதன நிதியளிப்புக்கள், நிலையான வைப்புக்கள், கூரைகள் மீதான சூரியப்படலத் தீர்வுகளுக்கான விசேட நிதியளிப்புக்கள் உள்ளிட்ட மேலும் பல பரந்துபட்ட நிதிச் சேவைகள் இந்தக் கிளையின் ஊடாக வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். சௌகரியமான மற்றும் உடனடியான நிதித் தீர்வுகளை உடனயாக வழங்குவதே இந்த விரிவாக்கத்தின் நோக்கமாகும்."இலங்கையிலுள்ள அனைவருக்கும் அவர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற வகையிலான உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்த தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகலை வழங்குவதை அசட்லைன் பைனான்ஸ் நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே எமது கிளை வலையமைப்பு வெள்ளவத்தையிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது" என அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷான் நிசங்க தெரிவித்தார்.







நியூ சன் செராமிக்ஸ் அதன் நாவல கிளையை அண்மையில் ஆரம்பித்தது.

# நகர்வலம்



## நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல ஜனாதிபதி ரணிலை வெற்றி பெறச் செய்வோம்!

### களுத்துறை தேர்தல் தொகுதி ஐ.தே.க அமைப்பாளர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி நாட்டை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று களுத்துறை தேர்தல் தொகுதி ஐ.தே.கவின் அமைப்பாளராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள களுத்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் ஆமிர் நஸீர் தெரிவித்தார்

களுத்துறை தேர்தல் தொகுதி புதிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆமிர் நஸீர், தனது களுத்துறை இல்லத்தில் நேற்று (10) நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், அதலபாதாளத்தில் விழுந்த நாட்டை பொறுப்பெடுக்க முன்வராத தலைவர்கள்தான் இன்று நாட்டின் தலைவராக வரவேண்டும் என்று தேர்தலில் போட்டியிடுகிறார்கள். அன்று மிகவும் துணிச்சலோடு நாட்டை பொறுப்பெடுத்து அனைத்து துறைகளையும் இயல்பு நிலைக்கு கொண்டு வந்து மக்களின் கஷ்டத்துக்கு முடிவு கண்ட ஒரு ஆளுமைமிக்க தலைவராக எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குகிறார். நாட்டில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு அவர் இத்தேர்தலில் போட்டியிடுகிறார்.



இத்தேர்தலில் அனுபவமுள்ள தலைவரை நாம் தெரிவு செய்வதா? அல்லது எந்த அனுபவமும் இல்லாத ஒருவரை தெரிவு செய்வதா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். நிச்சயம் அனுபவம் இல்லாத ஒருவரை நாம் தெரிவு செய்வதால் கஷ்டப்படப்போவது நாமே என்பதை மறந்துவிடலாகாது.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் முன்னணி தலைவர் அனுரகுமார திசாநாயக்க, ஏனைய வேட்பாளர்களுடன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஒப்பிட்டு பார்த்தால் அவர்களின் அரசியல் அனுபவத்தை எம்மால் தீர்மானிக்க முடியும். அதேபோல், ஜனாதிபதி ரணிலைத்தவிர இவர்களுக்கு வெளிநாடுகளுடன் இராஜதந்திர தொடர்புகள் இருப்பதாக இல்லை.

நாட்டை காப்பாற்றி மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்து அனைத்துத் துறையிலும் முன்னேற்றம் கண்ட சிறந்த நாட்டை உருவாக்க அனைவரும் அவருக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் மேற்படி சந்திப்பில் தெரிவித்தார்.



பழம்பெரும் எழுத்தாளர் ஜனாபா ரஹுமா சாஹுல் ஹமீட் எழுதிய சிறுகதை தொகுதியான "விடியத் துடிக்கும் இரவுகள்" எனும் நூல் வெளியீடு (8) மாலை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது. நூலின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும் அருகில் நூலாசிரியையும் படத்தில் காணலாம்.

## ஐ.தே.க, ஐ.ம.ச, பெரமுன உறுப்பினர்கள் அனைவரும் தாக்கப்படுவரென மிரட்டல்!

### ஜே.வி பி உறுப்பினருக்கு எதிராக பிரேமநாத் தொலவத்த எம்.பி சி.ஐ.டியிடம் முறைப்பாடு!



ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தாக்கப்படுவார்கள் என ஜே.வி பி உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தெரிவித்து, பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்தவினால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனதா விமுக்தி பெரமுனவின், ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் படையின் இலச்சினை பதிக்கப்பட்டுள்ள சட்டையை அணிந்திருக்கும் இந்த நபர், "நாங்கள் தேசிய மக்கள் படையின் உறுப்பினர்கள். நாம் ஆட்சிக்கு வந்ததும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் உட்பட ஏனைய கட்சிகளைச் சேர்ந்த அனைவரையும் தாக்குவோம்" என பொதுவெளியில் சூளுரைத்துள்ள காணொளியொன்று தற்போது சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள நிலையிலேயே, இவ்வாறு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டை இரத்தக் களரியாக மாற்றும் அபாயத்தை ஏற்படுத்துபவர்கள் தொடர்பாக உடனடி விசாரணைகளை நடத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த குற்றப் புலனாய்வுத்துறையினரை கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேருவளையில் ஐ.ம.சவின் விசேட கூட்டம்; முக்கியஸ்தர்கள் பங்கேற்பு

(பேருவளை விசேட நிருபர்)



ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதி செய்யும் வகையிலான விஷேட கூட்டமொன்று பேருவளை ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் (07) நடைபெற்றது.

அமைப்பாளர் இப்திகார் ஜமீல் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் களுத்துறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்களின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள், ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள் பங்கு பற்றினர்.

முன்னாள் எம்.பி அஸ்லம் ஹாஜியார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எம்.எம அம்ஜாத், முன்னாள் உப நகராதிபதி ஹஸன் பாஸி, முன்னாள் பிரதேச சபை தலைவர் பதி ஹாஜியார், பாணந்துறை பிரதேச சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் தாஹிர் பாஸி, ஐக்கிய மக்கள் சக்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டாக்டர் ரூமி ஹாஷிம் உட்பட பலரும் இங்கு உரையாற்றினர்.

சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள் அணி திரண்டுள்ளதாகவும் மாவட்டத்தின் 8 தொகுதிகளையும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி கொள்வதற்காகவும் 90% வீதமான முஸ்லிம்கள் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக வாக்களிக்கவுள்ளதாவும் இப்திகார் ஜமீல் இங்கு பேசும் போது கூறினார்.



தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்கான மக்கள் பேரணி (09) மாலை தம்புத்தேகமவில் நடைபெற்ற போது பிடித்த படம்.

(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## ஜே.வி.பி அரசாங்கம் பதவிக்கு வந்தால் வங்கி பணம் கையகப்படுத்தப்படும்



ஜே.வி.பி அரசாங்கம் பதவிக்கு வந்தால் வங்கிகளில் உள்ள பணம் அனைத்தும் கையகப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, எஹலியகொடயில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர்,

ஜனதா விமுக்தி பெரமுனவைச் சேர்ந்தவர்களை பற்றி நான் பேசவிரும்பவில்லை. ஏனெனில், அவர்கள் சொல்லும் கதைகளிலிருந்து அவர்களைப்பற்றி புரிந்து கொள்ள முடியும். நாம் எவ்வாறான பொருளாதார நெருக்கடியை இன்று எதிர்கொள்கிறோம்? நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு ஜேவிபியின் தீர்வு என்ன? நாட்டின் பொருளாதாரத்தை தீர்க்க இரண்டு வழிகள் இருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை துறைமுகத்துக்கு 2000 கப்பல்கள் கொண்டுவரப்படும் என்கிறார். எரிபொருள் கிடங்குகளை சுத்தம் செய்து எரிபொருளை நிரப்பி டொலர்களுக்கு விற்கப்படும் என்கிறார் என திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

## போதை மாத்திரைகளுடன் சந்தேகத்தில் ஒருவர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இராஜாங்கனை பொலிஸ் பகுதிக்குட்பட்ட அங்கமுவ பிரதேசத்தில் போதை மாத்திரையுடன் சந்தேக நபரொருவரை பொலிஸ் அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

48 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 400 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



புத்தளம் தினகரன் நிருபர்

நுரைச்சோலை தேசிய பாடசாலையில் "ஹசனாத்" ஆரம்ப பிரிவின் 05 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களில், மாகாண முன்னோடி பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (10) காலை அதிபர் எம்.ஐ.எம். இம்ரான்கான் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கற்பிட்டி கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம். ஜவாத் கலந்து கொண்டார். இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அதிபர் எம்.ஐ.எம். இம்ரான்கான் தலைமையில், தரம் 5 வகுப்பாசிரியர்கள், "ஹஸனாத்" ஆரம்பப்பிரிவின் ஆசிரியர்கள், மேலதிக வகுப்புகளுக்கு உதவி வழங்கிய ஆசிரியர்கள், கல்வியதிகாரிகள் போன்றோரின் ஆலோசனை வழிகாட்டலுடன், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்கள் சங்கம், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், நன்கொடையாளர்கள் போன்றோரின் அனுசரனையுடன் நடைபெற்று முடிந்துள்ளன.

## தேசிய ஷூரா சபையின் பதில் தலைவராக அஷ்ஷெய்க் பளீல்



தேசிய ஷூரா சபையின் தலைவர் சட்டத்தரணி அஸூர் தனது தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அஷ்ஷெய்க் பளீல் (நளீமி) சபையின் நிறைவேற்றுக் குழுவின் ஏகமானதான தீர்மானத்தின் படி பதில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தான் ஜனாதிபதி தேர்தலின் போது செயட்பாட்டு அரசியலில் சம்பந்தப்பட இருப்பதனால் தொடர்ந்தும் ஷூரா சபையின் தலைமைப் பதவியில் இருக்க முடியாது என்று அஸூர் தனது இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அஷ்ஷெய்க் பளீல், பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பட்டதாரி, அதன் சிரேஷ்ட விரிவுரையாளர், பீடாதிபதி ஆவார். தேசிய ஷூரா சபையின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவராகவும் அது ஸ்தாபிக்கப்பட்டது முதற்கொண்டு இதுவரை சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவராகவும் அவர் செயற்பட்டு வந்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் விவகாரங்களை கலந்தாலோசனை, துறை சார்நிபுணத்துவ அறிவு, ஆய்வு போன்றவற்றின் அடியாக அணுகி சமூகத்தின் இலக்குகளை வரையறுப்பது, அதிமுக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களை முதன்மைப்படுத்துவது போன்ற பிரதானமான இலக்குகளைக் கொண்டு சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் இச்சபை ஸ்தாபிக்கப்பட்டது.

அதன் பொதுச் சபையில் இலங்கையில் உள்ள முன்னணி முஸ்லிம் சமூகத்தின் முன்னணி சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள், துறை சார் நிபுணர்கள், உலமாக்கள் போன்றோர் அங்கம் வகிக்கிறார்கள்.

## ஜனாதிபதி ரணிலை ஆதரித்து புத்தளத்தில் பொதுக்கூட்டம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து எதிர்வரும் 13ஆம் திகதி புத்தளம் மாவட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் புத்தளம் வருகையை முன்னிட்டு, அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று நேற்று (9) புத்தளம் நகர சபை விளையாட்டு மைதான கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அலிசப்ரி ரஹீம் மற்றும் சிந்தக மாயாதுன்ன ஆகியோரின் இணைத் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் புத்தளம் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பாதுகாப்பு பிரிவினரும், அரச திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டதுடன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹியா, ஜனாதிபதியின் புத்தளம் மாவட்ட இணைப்பாளர் றுசிர மற்றும் புத்தளம் பிரதேச சபை தவிசாளர் அன்ஜன சந்தருவன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் முஸம்மில், வடமேல் மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ரபாத் அமீன் , பாராளுமன்ற உறுப்பினரின் ஊடகச் செயலாளர் நௌபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை நாளுக்கு நாள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து பலர் அவரை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கும், அவரின் கரங்களை பலப்படுத்தவும் எங்களோடு இணைந்து கொள்கிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இதன்போது தெரிவித்தார்.

## Zahira Veterans உதைபந்தாட்ட அணி இன்று தாய்லாந்து பயணம்



ருஸைக் பாரூக்

Zahira Veterans உதைபந்தாட்ட குழு இன்று 11ஆம் திகதி தாய்லாந்து செல்கிறது. தாய்லாந்தின் Youthinburana Alumni அணி மற்றும் Zahira Veterans அணிக்கிடையே "TOTO CUP BKK 2024" வெற்றி கிண்ணத்துக்கான போட்டி நாளை மறுதினம் 13 ஆம் திகதி தாய்லாந்தின் சுகாதார அமைச்சின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அழைப்பிதழ் போட்டியில் விளையாடுவதற்காக பாங்கொக் நகரத்துக்கு முதல் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் தேசிய வீரர், ஸாஹிரா கல்லூரி அணிக்காக விளையாடிய நைனா மொஹமட், அணித்தலைவர் அப்துர் ரஹ்மான், Zahira Veterans தலைவர் ஹுசைன் ஆசாத், செயலாளர் சிராஜ் சாலி மற்றும் உறுப்பினர்களுடன் ஜவ்பர்உஸ் சாதிக் தலைமையில் இந்த அணி கலந்து கொள்ளவுள்ளமை விசேட அம்சமாகும்.

# உண்மையைத் திரித்துக் கூறுவோரிடமிருந்து 'சிஸ்டம் சேஞ்ச்' கிடைக்கப் போவதில்லை!

**நாட்டு இளைஞர்களிடையே அரசியல் ஆர்வத்தின் வடிவம் குறித்து உறுதியாக எதுவும் கூற முடியாது. கடந்த காலங்களில் இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டாலும், இந்நாட்டின் அரசியல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான இளைஞர்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலித்த நிகழ்வாக காலிமுகத்திடல் போராட்டத்தைக் கூறலாம். ஆனால் அதன் முடிவோடு அதற்குத் தலைமை தாங்கி பெரும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர்கள் சற்றே ஏமாற்றம் அடைந்ததைக் காண முடிந்தது. போராட்டம் சிதறியது.**

கோட்டாபயவை விரட்டியடிப்பதற்கு இளைஞர்கள் முன்னின்றது போலவே, கோட்டாபயவை கொண்டு வருவதற்கும் பெருமளவு இளைஞர்கள் முன்னின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டலாம். கோட்டாபயவின் வெற்றியின் பின்னர், நாடு முழுவதும் சுவர்களில் வரையப்பட்ட பல்வேறு ஓவியங்களிலும், தரிசு நிலங்களுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியிலும் அது காட்சிப்படுத்தப்பட்டது.

போராட்டத்தால் எஞ்சியிருப்பது 'சிஸ்டம் சேஞ்ச்' கொண்டு வர வேண்டும் என்ற வலியுறுத்தல் மட்டுமே. அதற்குப் பங்களித்த மக்களின் பெரும் நம்பிக்கை அது என நினைக்கிறேன். எனவேதான் போராட்டத்தின் முடிவில் கலைந்து போன இளைஞர்களின் அபிலாஷைகள் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் அரசியலில் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளன என்பதை ஆராய வேண்டியுள்ளது.

அரச அதிகாரத்தைப் பெறுவதற்காக இரண்டு முறை அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிய அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுகிறது.

இப்போராட்டத்தில் பெரும் பங்கு வகித்து இறுதியில் போராட்டத்தை முன்னின்று நடத்திய முன்னணிக் கட்சியும் போட்டியில் இறங்கியுள்ளது.

அவர்களுள் தொழில் முனைவோர் மூலம் அனைத்தையும் வெற்றிபெற முடியும் என்று கூறும் திலித் ஜயவீர மற்றும் இளைஞர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் அடங்குவர். ரணில் விக்கிரமசிங்க, தாம் போராட்டம் முடிவுக்கு வந்ததன் பின்னர் நாட்டை பொறுப்பேற்று சிஸ்டம் சேஞ்சுக்காக உழைத்ததாகக் கூறுகின்றார்.

போட்டியிடும் மூன்று முக்கியமானவர்கள் உள்ளனர். ரணில், அநுர மற்றும் சஜித். இப்போது ரணிலுக்கும் அநுரவுக்கும் இடையில்தான் போர் என்று பெரும்பாலான தகவல்கள் கூறுகின்றன. இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யக்கூடிய சிஸ்டம் சேஞ்சுக்கு இடமளிப்பவர் யார்?

இந்நாட்களில், 15 இலட்சம் பேர் வெளிநாடுகளில் இருந்து வாக்களிக்க வரும் கதையே அதிகம் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டதாகத் தெரிகிறது. இலங்கைக்கு வருவதற்காக வெளிநாடுகளில் உள்ள விமான நிலையங்களில் வரிசையில் காத்திருப்பவர்களின் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. கைப்பை, கடவுச்சீட்டு கூட இல்லாமல் இலங்கைக்கு வரத் தயாராக இருப்பதாகக் கூறுபவர்களும் புகைப்படங்களில் உள்ளனர். எஞ்சிய சில நாட்களில் இலங்கைக்கு வரவிருப்போர் 15 இலட்சம் அல்ல ஐந்து இலட்சம் அல்லது குறைந்தது 50,000 என்பதுதான் யதார்த்தம். ஆனால் தற்போது வெளியாகியுள்ள புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் மற்றும் அவர்கள் கருத்து தெரிவிக்கும் விதத்தில் அரசியல் பற்றிய பேச்சு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் பெரும்பாலான இளைஞர்கள் சிஸ்டம் சேஞ்ச் தொடர்பாக தேசிய மக்கள் சக்தியை நம்பியிருக்கலாம். ஆனால் 15 இலட்சம் பேரின் வருகை பற்றிய மேற்கூறிய சம்பவம் தொடர்பான சமூக ஊடக நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முழுக்க முழுக்க பொய்யான அந்தச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு பல பதிவுகள் மற்றும் கருத்துகளை உருவாக்குவதில், இளைஞர்களின் அபிலாஷைகளின் சாராம்சம் குறித்து ஏதேனும் அக்கறை உள்ளதாதா?

அதேபோல், அரசியலில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் பொய்யை உண்மையாக மாற்றும் முயற்சி இளைஞர்களின் ஆர்வத்தை ஈர்க்கிறதா என்று கேட்க வேண்டும். இளைஞர்கள் அருகில் உள்ள இடங்களில் கூட்டங்கள் நடத்தி பஸ்களில் ஆட்களை அழைத்து வரும் பொய்களை இளைஞர்கள் மத்தியில் நியாயப்படுத்த முடியுமா? நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள கட்சி அலுவலகங்களைப் பாருங்கள். கொடிகள், வழக்கமான கட்அவுட் உள்ளன. ஆனால் ஆட்கள் இல்லை. அலுவலகத்தின் பெயரைப் பயன்படுத்தி வெறும் பாசாங்கு. இளைஞர்களின் அபிலாஷைகள் மற்றும் பிரச்சினைகளை இவ்வாறு தீர்க்க முடியுமா?




2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், சஜித் பிரேமதாச நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான மக்களை வழிநடத்தும் ஒரு பிரபலமான அரசியல் பிரமுகராக இருந்தார். ஆயினும்கூட, போராட்டத்தின் எதிர்பார்ப்புகளை அடையாளம் காணவோ அல்லது அதில் தங்கள் கொள்கைகளையும் நோக்கங்களையும் தயார் செய்யவோ அவரோ அவரது கட்சியோ தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. உயரம் என்றால் செக்யூரிட்டி, குள்ளமென்றால் தொழிலாளி போன்ற அறிக்கைகளின் முகமதிப்பை விட அவரது உணர்வு அதிகமாக வெளிப்படுகிறது என்பது உறுதி.

போராட்டத்தை களவாடிய முன்னணியினரால் கூட ஜனாதிபதி வேட்புமனுவின் மூலம் போராடும் இளைஞர்களுக்கு ஒரு கவர்ச்சியான வாய்ப்பை முன்வைக்க முடியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சி வெற்றிபெற முடியாது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஒரே போரில் அனைத்தையும் வெல்ல முடியாது. ஆனால் இளைஞர்களுக்கு எதிர்கால வாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய வெற்றிப் பயணத்தின் தொடக்கத்தை வழங்குவதற்கான திறனையோ அல்லது பயனையோ பயன்படுத்திக் கொள்ள கட்சி தயாராக இல்லை.

திலித் மற்றும் நாமல் அந்த மக்களை விளிக்கும் மகத்தான ஆற்றலையும் நோக்கத்தையும் கொண்டிருந்தாலும், இருவரும் அந்த வாய்ப்பை தவறவிட்டதாகவே தெரிகிறது. இளைஞர்களின் போராட்டங்களை அவர்கள் புரிந்து கொள்ளாததால் அல்ல, அவர்கள் அதில் சரியான கவனம் செலுத்தாததால் ஆகும்.

அந்தக் கோணத்தில் பார்க்கும் போது, கடந்த காலங்களில் போராட்ட இளைஞர்களின் இலக்குகளை குறிப்பாக கவனத்தில் கொண்ட முக்கிய அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்க அல்லவா என்ற கேள்வி எழலாம். அவர் வெளிப்படுத்துவது பழமைவாதத்தையல்ல, நவீனமயமாக்கலையே வெளிப்படுத்துகிறார்.

கடந்த காலங்களில், இளைஞர்கள் அரசியலில் பங்கேற்பதை அதிகரிக்கவும், பாராளுமன்ற நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தவும் அவர் உழைத்தார். அவர் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பாக பொருட்கள் மற்றும் சந்தைகளை மட்டுமல்ல, விவசாயத்தையும் நவீனமயமாக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தினார். இளைஞர் சேவை மன்றம், கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் அவரது ஊழல் எதிர்ப்பு போன்றவற்றில் எப்போதும் காட்டப்படுவது நவீனமயமாக்கல் மற்றும் நவீன சமுதாயத்தின் கருத்துகள் அல்லவா?



பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மூலம் அரசியலை கட்டியெழுப்பி, ஏனைய அனைத்து அரசியல் மற்றும் வேறு கொள்கைகளை பல்கலைக்கழகத்தில் முற்றாக தடை செய்தனர். பல்கலைக்கழக புதிய மாணவர்களை தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளுக்காக நிதி சேகரிக்க உண்டியல் குலுக்கச் சொன்ன ஜனதா விமுக்தி பெரமுன மற்றும் முன்னிலை சோஷலிஸ கட்சிகளுக்கு பழமைவாதத்தை கைவிட்டு நவீனமயமாதல் கடினமாக இருக்கும்.

ஆனால் உலகம் கண்ட, உலகறிந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு, நவீனமாக்கல் மூலம் சிஸ்டம் சேஞ்சை வழிநடத்த வழிவகுப்பது மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு என்பதை இளைஞர்கள் ஏற்றுக்கொள்ள இடமுண்டு என புரிந்து கொள்ள வேண்டும்.

சொல்லாட்சி, ஏமாற்றுதல், உண்மையைத் திரித்தல், உருவாக்கப்பட்ட நல்ல நிலைமைகளை ஏற்றுக்கொள்ள இயலாமை, வெறுப்பு, பொறாமை, போலித்தனம் ஆகியவற்றால் முறையான சிஸ்டம் சேஞ்ச் கிடைக்குமென இளைஞர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். அவர்களுக்குத் தேவை அறிவார்ந்த உரையாடல் மற்றும் சரியான நடைமுறை மூலம் 'சிஸ்டம் சேஞ்சை' அனுபவிப்பதாகும். அதை விரும்புகிறார்களே தவிர, ஏமாறவல்ல.

**மக்கள் நேசன்...**


## போதனா வைத்தியசாலை - குளியாப்பிட்டிய

### மத்திய வாயு சமப்படுத்தல் அமைப்பிற்காக மேலதிக Chiller இயந்திரத்தை வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கான கேள்வி கோரல் – 2024

01. குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் மத்திய வாயு சமப்படுத்தல் அமைப்பிற்காக மேலதிக Chiller இயந்திரத்தை வழங்குதல் மற்றும் பொருத்துதல் என்ற வேலை விடயத்திற்காக இவ் வைத்தியசாலையின் பெறுகைக் குழுவினால் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024.10.04 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | இணைப்பு இலக்கம் | ஒப்பந்த விபரம் | ICTAD தரம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை பெறுமதி (ரூ) | மதிப்பீட்டு பெறுமதி (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|
| 01 | THKUL/ ACC/FM09/ Cons/24/2024 | Supply and Installation of Stand by Chiller | EM3 or above (MVAC) | 4,000.00 | 450,000.00 | 22.75 |

02. தகைமையுள்ள ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை, மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகைக்குச் சமமான மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாளரிடம் காசாகச் செலுத்திய பின்பு 2024.09.11 முதல் 2024.10.03 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

03. இவ் வேலைக்காக மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியின் மூலம் பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அக் கேள்விப் பிணை 2025.02.02 வரை செல்லுபடியாவதுடன் செயலாளர், சுகாதார அமைச்சின் பெயரில் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் "மூலப்பிரதி" "நகல்பிரதி" எனக் குறிப்பிட்டு வேறுவேறாக உறைகளில் இட்டு, ஒரு பொறியிடப்பட்ட உறையில் இட்டு கடித உறையின் இடதுமேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2024.10.04 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய பெயருக்கு அனுப்ப வேண்டியதுடன் கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகை உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் கொடுப்பனவுகள் இன்றி பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. இவ் வேலை விடயத்திற்காக 2024.09.24 மு.ப. 10.00 இற்கு பெறுகைக்கு முன்னரான கமிட்டிக் கூட்டம் இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

07. தாமதமாகக் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் எக்காரணத்திற்காகவும் ஏற்கப்படமாட்டாது.

08. கேள்விகள் திறத்தல் 2024.10.04 பி.ப. 2.00 இற்கு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் அலுவலக கட்டிடத்தில் கூட்ட அறையில் நடைபெறுவதுடன் அன்று கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

09. இக்கேள்வி கோரல் பற்றிய மேலதிக விபரங்களை தெளிவு படுத்திக் கொள்வதற்காக 037 - 2281261 நீடிப்பு இல. 295/309 அல்லது 037 - 2284597 என்ற தொ.பே இலக்கத்தை அழைத்து குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் விசாரிக்கலாம்.

**பெறுகைக் குழுத் தலைவர்,**
**போதனா வைத்தியசாலை**
**குளியாப்பிட்டிய**
**2024 செப்டெம்பர் 11**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

### மருத்துவ உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக சுகாதார அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Ultra Sound Scanner High End | 10 | 200 | 35,000.00 |
| 02 | Portable Ultra Sound Scanner | 20 | 120 | 20,000.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.

4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.

5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-09-11ஆம் திகதி முதல் 2024-10-09ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக்குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2025-01-09ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். விலைக்கோரல் பிணைமுறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதமாக 2025-02-06ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் / பெறுகைக் குழு,**
**உயிரியல் பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டீ சேரம் பிளேஸ்,**
**கொழும்பு - 10**

## விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியை நீடித்தல்

### போதனா வைத்தியசாலை குருநாகல்

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவினால் 2024-09-11ஆம் திகதி விலைமனுக்கள் திறக்கப்படுவதாகவிருந்த THK/FS02/2024/21 எனும் குறிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட 02 எண்ணிக்கையான Ultrasound Scan Machine கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிவித்தலின் பிரகாரம் அன்றைய தினம் திறக்க முடியாதுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. இந்த விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி 2024-09-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் இது பழைய பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
2. இந்த கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானத்தை குருநாகல் போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளது.
3. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 037-2222261 நீடிப்பு 2261 எனும் தொலைபேசி இலக்கத்தில் கணக்குப் பிரிவைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (இந்த அறிவித்தல் www.kurunegalahospital.health.gov.lk எனும் வைத்தியசாலையின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய சகல திருத்தங்களும் இந்த இணையதளத்தில் பிரசுரிக்கப்படும்.)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**

---

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## ஏல விற்பனை அறிவித்தல்

### இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு விற்பனை

**ஏல விற்பனைத் திகதி: 2024.09.12**

**எனது இல.: LD/S/CICT/2024/08/PC-04**

கொழும்புத் துறைமுக பண்டாரநாயக்க உட்செல்லும் வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2024.09.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக CICT திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ள **Fresh Potato** ஐ அடக்கியுள்ள தடையகற்றப்படாத இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு அடைக்கப்பட்ட நான்கு கொள்கலன்கள் மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

2024.09.11 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பெசேவ மற்றும் **SSCL** உடனான 1,000 ரூபாவையும் மீளளிக்கப்படும் கட்டணமான 200,000,00 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி 15 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனை ஆவணங்கள் மற்றும் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2024.09.12 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் உரித்தான திறந்த வெளிகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

**www.slpa.lk** என்ற இணையத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
**11.09.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

---

OBSERVER adz | சிலுமின | வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Badulla & Nuwaraeliya District

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

Badulla - 055 22 256 16
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

Passara - 055 22 888 89
8202 - M. K. M. Ismath - Rishana Book Shop, No. 354, Main Street, Passara.

Badulla - 072 7 998 533
8207 - K. G. Prasanna Kumara - No. 9, Nadukara Kanda Road, Badulla.

Diyatalawa - 057 22 290 24
8228 - A. S. De Alwis - Alwis Book Shop, No. 16, Main Street, Diyatalawa.

ADZ HOTLINE - 011 2 429 369

CALL - 011 2 429 342/ 343

---

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

கைத்தொழில் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்தில் ஊக்குவிப்பு செயற்பாட்டுக்காக புதிய நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல்**

**விலைமனு இலக்கம்: NGJA/18/16/2024**

1. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்தில் ஊக்குவிப்பு செயற்பாட்டுக்காக புதிய நிறுவனம் ஒன்றை தேர்வு செய்வதற்கு தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைமனு ஆவணத்தில் சேவை நோக்கம் தொடர்பில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

| விபரம் | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|
| சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்தில் ஊக்குவிப்பு செயற்பாடு | ரூபா 25,000.00 (செல்லுபடிக் காலம் 2024.10.02 - 2025.01.29) |
| விலைமனு ஆவணங்களை பெற முடியுமான இறுதித் திகதி | 2024.10.01 அன்று |
| விலைமனு ஆவணங்களைத் திறப்பது (திகதி/ நேரம்/ இடம்) | 2024.10.02 ஆம் திகதி மு.ப. 10.05 தே.இ.ஆ. அதிகாரசபை. - 7ஆவது மாடி கேட்போர்கூடம் |

3. தேசிய போட்டிரீதியான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படுவதோடு விலைமனு ஆவணத்தில் தகைமைகள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்கின்ற இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (GOSL) பெறுகை வழிகாட்டல்களில் விளக்கப்பட்டிருக்கும் வகையில் விலைமனுதாரர்களுக்கு திறக்கப்பட்டிருக்கும்.
4. ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு 2024.09.11 ஆம் திகதி தொடக்கம் 2024.10.01 ஆம் திகதி வரை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, கொழும்பு 03, அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், இலக்கம் 12, மெக்சன்ஸ் கோபுரத்தின் 4ஆவது மாடியின் வழங்கல் பிரிவின் உதவி பணிப்பாளரிடம் (பெறுகை) இருந்து அலுவலக நேரங்களில் வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். Tele/Fax: 2332197, Email: supply@ngja.gov.lk
5. எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றின் மூலமாக மீளளிக்கப்படாத ரூபா 3,500.00 +SSCL 2.5% + VAT 18% தொகையை (முழு தொகை = ரூபா 4,233.25) பணமாகச் செலுத்திய பின் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை 2024.09.11 ஆம் திகதி தொடக்கம் 2024.10.01 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, கொழும்பு 03, அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், "மெக்சன்ஸ் கோபுரம்", இலக்கம் 12 என்ற முகவரியில் நான்காவது மாடியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.09.19 ஆம் திகதி மு.ப. 10.00க்கு கொழும்பு 03, அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், "மெக்சன்ஸ் கோபுரம்", இலக்கம் 12 இல் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை ஏழாவது மாடியின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.
7. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.10.02 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, இலக்கம் 12, "மெக்சன்ஸ் கோபுரம்", அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 03 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு வகை செய்தல் அல்லது நான்காவது மாடியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். விண்ணப்பங்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சமூக ஊடகம் மற்றும் இணையதளத்தில் ஊக்குவிப்பு செயற்பாடு - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேல் குறிப்பிடப்பட்டவாறு வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட ரூபா 25,000 பெறுமதியுடைய வங்கிப் பிணை/ வங்கி உத்தரவாதம் ஒன்றாக 119 நாட்களுக்கு செல்லுபடியான வகையில் (2024.10.02 ஆம் திகதி தொடக்கம் 2025.01.29 ஆம் திகதி வரை) அல்லது பணமாக அதிகாரசபைக்கு செலுத்தி பற்றுச்சீட்டு ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரம் முடிவுற்ற உடன், மேலுள்ள 5ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு தனிப்பட்ட முறையில் பங்கேற்கும் தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
11. விலைமனுக்களை சமர்ப்பிப்பது தொடர்பில் விலைமனுதாரர்களினால் ஏற்படும் எந்த ஒரு செலவுக்காகவும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை பொறுப்பேற்காது.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை**
**இலக்கம் 12, "மெக்சன்ஸ் கோபுரம்", அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 03**
**தொலைபேசி: 0112-329295, 2325364, 2390645-8 தொலைநகல்: 011-2320758, 011-2332197**
**இணையதளம்: www.ngja.gov.lk**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

## பெறுகை அறிவித்தல் – 2025

### கல்பிட்டி பிரதேச சபை

2025 ஆம் வருடத்தில் கல்பிட்டி பிரதேச சபையின் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக 2024.09.09 ஆம் திகதி முதல் 2024.09.26 ஆம் திகதி பி.ப.12.30 மணி வரை என்னால் கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.கேள்வி விண்ணப்பப் படிவங்கள் மற்றும் குத்தகைக்கு வழங்கப்படும் சபைக்குரித்தான ஆதனங்களின் அட்டவணை என்பன 2024.09.09 ஆம் திகதி முதல் 2024.09.25 ஆம் திகதி வரையில் கல்பிட்டியில் அமைந்துள்ள பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள்**

01. வெற்றிகரமான கேள்விதாரரால் சபையினால் நிர்ணயிக்கப்படும் திகதி அல்லது அதற்கு முன் வருடாந்த கேள்வித் தொகையை ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை ஒன்றை செய்துக் கொள்ளல் வேண்டும்.கேள்வித் தொகையை தவணை முறையில் செலுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
02. கல்பிட்டி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு ஒவ்வொரு ஆதனத்தின் பொருட்டும் 1500.00 ரூபா வீதம் படிவக் கட்டணம் மற்றும் பிணை தொகையைச் செலுத்தியதன் பின் வழங்கப்படும் கேள்விப் படிவங்கள் இரண்டையும் பூர்த்தி செய்து இரண்டு உறைகளில் உள்ளிட்டு அவ்வுறைகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் உள்ளிட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் ஆதனத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2024 புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி பி.ப.12.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் "செயலாளர், பிரதேச சபை, கல்பிட்டி" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
03. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள வருகைத்தரும் போது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்கையில் மற்றும் கேள்விப் பிணையை வைப்புச் செய்கையில் காசோலைகள், காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அவ்வனைத்து கட்டணங்கள் மற்றும் பிணைத் தொகைகளை ஒரே தடவையில் ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும். அவ்வனைத்து கட்டணங்கள் மற்றும் பிணைத் தொகையைச் செலுத்துகையில் இயைபுடைய தொகைக்கான முத்திரைக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
05. அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்ட எந்தவொரு கேள்விதாரருக்கும் அல்லது அவரால் கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ள அனுப்பப்படும் எந்தவொரு பிரதிநிதிக்கும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் ஆகக்குறைந்த கேள்விக்கு குறைவாக விலைகளை சமர்ப்பிக்கும் மற்றும் பெறுகை நிபந்தனைகளை மீறியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவ்வாறானவர்களால் அதுவரையில் செலுத்தப்பட்டுள்ள அனைத்து பணமும் சபையின் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.
06. கேள்விகள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துக் கொள்ளலாம்.
07. கேள்வி கோருவதற்குரித்தான விபரங்களுடன் கூடிய நிபந்தனை அறிவித்தல் அறிக்கையொன்றை கல்பிட்டி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2025 ஆம் வருடத்திற்கு இயைபான சபைக்குரித்தான ஆதனங்களை குத்தகைக்கு பெற்றுக் கொள்கையில் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடந்துக்கொள்வதற்கு விண்ணப்பதாரர் இணங்குதல் வேண்டும். கேள்வி கோரல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் இறுதித் தீர்மானத்தை கல்பிட்டி பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**விசேட விடயம்.**
கல்பிட்டி 02 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை, கல்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை என்பன கல்பிட்டி பஸ் நிலைய இடப்பரப்பில் சபையினால் வழங்கப்படும் நடமாடும் விற்பனை கூடத்தினுள் வியாபாரத்தை நடாத்திச் செல்ல வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அல்லது கல்பிட்டியில் அமைந்துள்ள பிரதான அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களுக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம் 032 2260274, 032 2260275**

**மங்கள ராமநாயக்க, செயலாளர்,**
**பிரதேச சபை, கல்பிட்டி.**
2024.09.06

**1வது அட்டவணை**

**2025 சொத்துக்கள் குத்தகை வழங்கல் - சொத்து விபரம்**

| இல. | வியாபார தன்மையும் அமைந்துள்ள இடமும் | 2025 ம் வருடத்திற்கான ஆகக்குறைந்த கேள்வி | மீளளிக்கப்படும் பிணைப்பணம் |
|---|---|---|---|
| **கல்பிட்டி உப காரியலயம்** | | | |
| **மாட்டிறைச்சிக்கடை** | | | |
| 1 | கல்பிட்டி இல 1 | 900,000.00 | 45,000.00 |
| 2 | கல்பிட்டி இல 2 புதிய வார சந்தை கட்டிடம் | 500,000.00 | 40,000.00 |
| 3 | கல்பிட்டி இல 3 | 700,000.00 | 35,000.00 |
| 4 | குறிஞ்சிப்பிட்டி | 60,000.00 | 6,000.00 |
| 5 | பள்ளிவாசல்துறை | 370,000.00 | 29,600.00 |
| 6 | கண்டக்குழி | 200,000.00 | 16,000.00 |
| 7 | முசல்பிட்டி | 100,000.00 | 10,000.00 |
| 8 | அம்மாதோட்டம் | 200,000.00 | 16,000.00 |
| 9 | கல்பிட்டி புதிய வார சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 4,000.00 |
| **பன்றி இறைச்சிக்கடை** | | | |
| 10 | கண்டக்குழி குடாவ | 6,000.00 | 600.00 |
| 11 | ஆனைவாசல் | 150,000.00 | 12,000.00 |
| 12 | பத்தளங்குண்டு | 3,500.00 | 350.00 |
| **வேறு** | | | |
| 13 | கல்பிட்டி துறையடி படகு சேவை | 715,000.00 | 35,750.00 |
| 14 | கல்பிட்டி வாகன தரிப்பிடம் | 1,250,000.00 | 62,500.00 |
| **மாம்புரி உப காரியாலயம்** | | | |
| **மாட்டிறைச்சிக்கடை** | | | |
| 15 | நுரைச்சோலை | 1,100,000.00 | 55,000.00 |
| 16 | ஆலங்குடா | 1,400,000.00 | 70,000.00 |
| 17 | மாம்புரி | 70,000.00 | 7,000.00 |
| 18 | திகழி | 200,000.00 | 16,000.00 |
| 19 | பாலக்குடா | 50,000.00 | 5,000.00 |
| 20 | ஏத்தாளை | 100,000.00 | 10,000.00 |
| 21 | தலவில் | 60,000.00 | 6,000.00 |
| 22 | கண்டக்குடா | 30,000.00 | 3,000.00 |
| 23 | நரக்கள்ளி | 20,000.00 | 2,000.00 |
| 24 | முதலைப்பாளி | 62,500.00 | 6,250.00 |
| 25 | பூலச்சேனை | 650,000.00 | 32,500.00 |
| **பன்றியிறைச்சிக்கடை** | | | |
| 26 | நரக்கள்ளி அனல் மின்சார நிலையம் | 170,000.00 | 13,600.00 |
| 27 | தலவில் | 300,000.00 | 24,000.00 |
| 28 | பாலக்குடா | 150,000.00 | 12,000.00 |
| 29 | மாம்புரி | 35,000.00 | 3,500.00 |
| 30 | இலந்தையடி | 25,000.00 | 2,500.00 |
| **வேறு** | | | |
| 31 | நுரைச்சோலை வர்த்தக நிலைய, வாகன தரிப்பிடம் | 3,200,000.00 | 128,000.00 |
| **அக்கரைப்பத்து உப காரியாலயம்** | | | |
| **மாட்டிறைச்சிக்கடை** | | | |
| 32 | கந்ததாடுவா | 200,000.00 | 16,000.00 |
| 33 | பூனைபிட்டி | 20,000.00 | 2,000.00 |
| 34 | சேனைக்குடியிருப்பு ட்ரான்ஸ்போமர் சந்தி | 200,000.00 | 16,000.00 |
| 35 | உலுக்காப்பள்ளம் | 450,000.00 | 36,000.00 |
| 36 | புழுதிவயல் | 200,000.00 | 16,000.00 |
| 37 | கனமூலை வடக்கு | 1,000,000.00 | 50,000.00 |
| 38 | கனமூலை தெற்கு | 1,000,000.00 | 50,000.00 |
| 39 | சபா மருவா | 425,000.00 | 34,000.00 |
| 40 | கொத்தான்தீவு | 90,000.00 | 9,000.00 |
| 41 | சின்னப்பாடு | 25,000.00 | 2,500.00 |
| 42 | பெருக்குவட்டான் | 150,000.00 | 12,000.00 |
| 43 | தலுவ | 45,000.00 | 4,500.00 |
| 44 | விருதோடை | 140,000.00 | 11,200.00 |
| 45 | தேத்தாபொல | 100,000.00 | 10,000.00 |
| 46 | நல்லாந்தலுவ | 160,000.00 | 12,800.00 |
| 47 | கடையாமோட்டை | 500,000.00 | 40,000.00 |
| 48 | கட்டக்காடு | 75,000.00 | 7,500.00 |
| 49 | நாவக்காடு | 150,000.00 | 12,000.00 |
| 50 | மெல்லம்பிட்டி | 500,000.00 | 40,000.00 |
| 51 | ரெட்பானா | 50,000.00 | 5,000.00 |
| 52 | பனையடிச்சோலை | 200,000.00 | 16,000.00 |
| 53 | சமீரகம் | 650,000.00 | 32,500.00 |
| 54 | மூக்குத்தொடுவா | 100,000.00 | 10,000.00 |
| **பன்றியிறைச்சிக்கடை** | | | |
| 55 | தலுவ | 300,000.00 | 24,000.00 |
| 56 | மூக்குத்தொடுவா | 60,000.00 | 6,000.00 |
| 57 | நாவக்காடு | 100,000.00 | 10,000.00 |
| 58 | பாலச்சோலை | 30,000.00 | 3,000.00 |
| 59 | கந்ததொடுவா | 20,000.00 | 2,000.00 |
| 60 | சின்னபாடு | 25,000.00 | 2,500.00 |
| 61 | நிர்மலபுர கடற்கரை | 175,000.00 | 14,000.00 |
| 62 | கட்டக்காடு | 10,000.00 | 1,000.00 |
| 63 | தேத்தாபொல | 135,000.00 | 10,800.00 |
| 64 | கரம்ப | 65,000.00 | 6,500.00 |
| 65 | பள்ளிவாசல்பாடு | 20,000.00 | 2,000.00 |

# சுகாதார அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் – (ICB)

**கேள்வி இல: SPMC/02/2024 - 2024 ஒக்டோபர் 22ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

### மருந்தாக்கல் மூலப்பொருட்களுக்கான பெறுகை

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் 2024-10-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மருந்தாக்கல் மூலப்பொருட்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பொருள் இல. | பொருள் | அளவு (KG) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| 1 | Amoxicillin Trihydrate BP 2023 /BP 2024(Compacted) (By Enzymatic Process) | 27,000.00 | **39,000.00** |
| 2 | Atorvastatin Calcium IP 2022 | 1,500.00 | **11,000.00** |
| 3 | Benzhexol Hydrochloride BP 2023/ BP 2024 | 50.00 | **500.00** |
| 4 | Bisoprolol Fumarate BP 2023/BP 2024 | 100.00 | **5,000.00** |
| 5 | Carbamazepine BP 2023 / BP 2024 | 2,500.00 | **9,000.00** |
| 6 | Cetirizine Dihydrochloride BP 2023 / BP 2024 | 150.00 | **500.00** |
| 7 | Ciprofloxacin Hydrochloride USP 46 / USP 47 | 2,000.00 | **4,000.00** |
| 8 | Clarithromycin USP 46/ USP 47 | 5,000.00 | **40,000.00** |
| 9 | Diltiazem Hydrochloride USP 46/ USP 47 | 2,000.00 | **10,000.00** |
| 10 | Domperidone Maleate BP 2023/ BP 2024 | 300.00 | **2,000.00** |
| 11 | Famotidine USP 46 / USP 47 | 1,000.00 | **4,000.00** |
| 12 | Flucloxacillin Sodium BP 2023 / BP 2024 | 18,000.00 | **47,000.00** |
| 13 | Gabapentin USP 46 / USP 47 | 1,500.00 | **4,000.00** |
| 14 | Gliclazide BP 2023 / BP 2024 | 18,000.00 | **36,000.00** |
| 15 | Indomethacin BP 2023/ BP 2024 | 100.00 | **1,000.00** |
| 16 | Loratadine USP 46/ USP 47 | 75.00 | **3,000.00** |
| 17 | Losartan Potassium BP 2023 / BP 2024 | 5,000.00 | **14,000.00** |
| 18 | Mebendazole USP 46 / USP 47 | 800.00 | **3,000.00** |
| 19 | Metronidazole USP 42 | 2,000.00 | **3,000.00** |
| 20 | Phenoxymethylpenicillin PotassiumBP 2023/ BP 2024 (Compacted Powder) | 3,000.00 | **10,000.00** |
| 21 | Prednisolone BP 2023 / BP 2024 | 800.00 | **15,000.00** |
| 22 | Propranolol Hydrochloride BP 2023/ BP 2024 | 500.00 | **1,000.00** |
| 23 | Salbutamol Sulphate BP 2023 / BP 2024 | 300.00 | **3,000.00** |
| 24 | Spironolactone USP 46 / USP 47 | 700.00 | **11,000.00** |
| 25 | Sulfamethoxazole BP 2023 / BP 2024 | 2,000.00 | **3,000.00** |
| 26 | Trifluoperazine Hydrochloride BP 2023 /BP 2024 | 50.00 | **2,000.00** |
| 27 | Trimethoprim BP 2023 / BP 2024 | 400.00 | **1,000.00** |
| 28 | Verapamil Hydrochloride BP 2023 / BP 2024 | 600.00 | **4,000.00** |
| 29 | Ammonio Methacrylate Copolymer (Type B)USP 46 / USP 47 | 3,000.00 | **13,000.00** |
| 30 | Calcium Carbonate BP 2023/ BP 2024 | 25.00 | **500.00** |
| 31 | Colloidal Silicon Dioxide USP 46 / USP 47 Colloidal Anhydrous Silica BP 2023 / BP 2024 | 800.00 | **2,000.00** |
| 32 | Crospovidone BP 2023 / BP 2024/ USNF 41/ USNF 42or Polyvinyl Polypyrrolidone/PVPP BP (KOLLIDON CL-F) | 300.00 | **500.00** |
| 33 | Di-basic Calcium Phosphate (Dihydrate) BP 2023 / BP 2024 USP 46 / USP 47 | 6,000.00 | **1,000.00** |
| 34 | Hydroxypropylcellulose (L-Type)USNF 41/ USNF 42/ USP 46 / USP 47 | 1,500.00 | **6,000.00** |
| 35 | Hypromellose 2910 USP 46 / USP 47 | 1,000.00 | **1,000.00** |
| 36 | Lactose (100 mesh) BP 2023 / BP 2024 (Apen. XVI, B)or Lactose monohydrate USP 46 / USP 47/ USNF 41/ USNF 42 | 2,000.00 | **500.00** |
| 37 | Lactose (200mesh) BP 2023 / BP 2024 (Apen. XVI, B)or Lactose monohydrate USP 46 / USP 47/ USNF 41/ USNF 42 | 40,000.00 | **6,000.00** |
| 38 | Magnesium Stearate BP 2023 / BP 2024 | 1,500.00 | **500.00** |
| 39 | Maize Starch BP 2023 / BP 2024 | 27,000.00 | **2,000.00** |
| 40 | Microcrystalline Cellulose USP 46 / USP 47 BP 2023 / BP 2024 | 10,000.00 | **2,000.00** |
| 41 | Microcrystalline Cellulose LM 200 USP 46 / USP 47/ USNF 41/ USNF 42 | 6,000.00 | **2,000.00** |
| 42 | Polyethylene Glycol USP 46 / USP 47 | 400.00 | **500.00** |
| 43 | Povidone K-30 USP 46 / USP 47 BP 2023 / BP 2024 | 1,500.00 | **1,000.00** |
| 44 | Purified Talc BP 2023 / BP 2024 | 6,000.00 | **500.00** |
| 45 | Sodium Starch Glycolate (Type A) BP 2023 /BP 2024 | 6,000.00 | **2,000.00** |
| 46 | Stearic Acid BP 2023 / BP 2024 | 500.00 | **500.00** |
| 47 | Titanium Dioxide BP 2023/ BP 2024 | 1,000.00 | **500.00** |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

3. கீழ்காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2024-09-11ஆம் திகதி முதல் 2024-10-21ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேலே கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெறலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீளளிக்கப்படாத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்

4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வாகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

5. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

6. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 0094 112623298)

   ''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையதளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)

   வெளிநாட்டு முதன்மையாளர்கள் விலைமனு ஆவணங்களை எமது இணையதளத்திலிருந்த தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (உள்நாட்டு முகவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்கள், அத்தகைய விலைக்கோரல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணத்திற்கான கட்டணங்களை நிகரான ஐ.அமெரிக்க டொலர் **(US$)** பெறுமதி/பெறுமதிகளில் வங்கி வரைவாக விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி இல.: (00) 94-11-2635353/ (00) 94-11-2637574/(00) 94-11-2636966/(00) 94-11-2636967**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**
**இணையதளம்: www.spmc.gov.lk**
**தொலைநகல் இல.: (00) 94-11-2634771, 2626621**





Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

**2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.**

### விலக்களித்தலுக்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) (திருத்தப்பட்ட) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச்செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக் குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஓர் எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால்,குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, ஆணைக்குழு கீழ்வரும் அடையாளம் காணப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு விலக்களிக்க உத்தேசித்து உள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இல | விண்ணப்பதாரர் | வளாகத்துக்கான வணிக பெயர் | வளாகம் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|---|
| E/AE/N/24/05 | இளைஞர்கள் புத்த சங்கம், கொழும்பு | YMBA கோட்டை கட்டிடம் | இல: 126, சேர் பரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01 | வணிகம் |
| E/AE/N/24/06 | அக்சஸ் ரெசிடன்சிஸ் 2 (பிவிடி) லிமிடெட் | அக்வாரியா - அக்சஸ் ரெசிடன்சிஸ் | 160/20 கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 05 | குடியிருப்பு |
| E/AE/N/24/07 | ஈ ஏ மக்ரோ ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் | - | இல: 606, காலி வீதி, கொழும்பு03 | வணிகம் மற்றும் குடியிருப்பு |
| E/AE/N/24/08 | இளைஞர்கள் புத்த சங்கம், கொழும்பு | YMBA வணிக வளாகம் | இல: 70, D.S சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08 | வணிகம் |
| E/AE/N/24/09 | போர்ட் சிட்டி டியூட்டி ஃப்ரீ (பிவிடி) லிமிடெட் | - | 1-01-11, போர்ட் சிட்டி கொழும்பு, சைத்ய வீதி, கொழும்பு 01 | வணிகம் |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர்**
**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**
**06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,**
**இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,**
**கொழும்பு 03**

திகதி: 2024.09.11

**தொலைபேசி:** (011) 2392607/8
**தொலைநகல்:** (011) 2392641
**பெக்ஸ்:** licensing@pucsl.gov.lk
**இணையதளம்:** www.pucsl.gov.lk

# கேள்வி அறிவித்தல்

## நுவரெலியா மாநகர சபை

இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நுவரரெலியா மாநகர சபைக்குரித்தான ஆதனங்களை 2025-01-01ஆம் திகதி முதல் 2025-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக 02 பிரதிகளிலான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2024-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவம் மற்றும் அதற்கு இயைபான நிபந்தனைகளை 2024-09-12ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-10-03ஆம் திகதி வரையிலான அலுவலக நேரத்தினுள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது வெளிநாட்டுக் கடவுச் சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் நுவரெலியா மாநகர சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2024-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும். கேள்விப் படிவங்கள் 2024-10-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் மட்டும் கலந்துகொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை பதிவுத் தபாலில் அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கேள்விக்குரித்தான தலைப்பை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறு உறைகளில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தமது ஆளடையாளத்தை உறுதி செய்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்பு மற்றும் மீளளிக்கப்படாத பிணை வைப்புக் கட்டணங்களைச் செலுத்திய பின்னர் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் விண்ணப்பிக்கும் கேள்வித் தொகைகளுக்கு அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட வரிகளைச் செலுத்துதல் வேண்டும்.

குறைந்தபட்சக் கேள்வியை விடக் குறைவாக விண்ணப்பிக்கும் கேள்விதாரர்கள் மற்றும் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு கேள்வியைச் சமர்ப்பிக்காத கேள்விதாரர்களின் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.

கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை நுவரெலியா மாநகர சபையின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

கேள்விகள் திறக்கப்பட்டதன் பின் தெரிவு செய்யப்பட்ட சித்திகரமான கேள்விதாரரால் வருடத்தின் முடிவில் மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்புத் தொகையை சபையில் வைப்புச் செய்தல் வேண்டும். (கேள்வியைப் பெற்றுக்கொள்ளும் கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வித் தொகையின் 25%) மற்றும் கேள்வியைக் கையளித்தல் மற்றும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் முன் கேள்விதாரரினால் குறித்த கேள்வியின் 25% பெறுமதியான தொகையை சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் நுவரெலியா மாநகர சபையின் கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 052-2222275/052-2223673)

**கே.கே.ஜீ.ஐ.டீ.பீ. விஜேதிலக்க,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நுவரெலியா.**
**2024-09-09.**

**மாநகர சபை - நுவரெலியா**

| தொ. இல. | விபரங்கள் | குறைந்தபட்சக் கேள்வி (அரச வரிகள் சகிதம்) ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் (அரச வரிகள் சகிதம்) ரூபா | மீளளிக்கப் படும் பிணை வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப் படாத பிணை வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01. | புதிய நகர மண்டபத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் | 535,500.00 | 1,000.00+180.00 | 5,500.00 | 5,000.00 |
| 02. | ஞாயிறு சந்தையின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் | 296,625.00 | 1,000.00+180.00 | 3,000.00 | 5,000.00 |
| 03. | விக்டோரியா பூங்காவின் புதிய சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் | 1,963,500.00 | 1,000.00+180.00 | 19,700.00 | 5,000.00 |
| 04. | மாநகர சபை இடப்பரப்பில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் | 128,100.00 | 1,000.00+180.00 | 1,300.00 | 5,000.00 |
| 05. | மத்திய சந்தையின் 19ஆம் இலக்க ஆட்டிறைச்சிக் கடையை நடாத்திச் செல்லல் | 3,360,105.00 | 1,000.00+180.00 | 33,600.00 | 5,000.00 |
| 06. | மத்திய சந்தையின் 21ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையை நடாத்திச் செல்லல் | 12,663,000.00 | 1,000.00+180.00 | 126,700.00 | 5,000.00 |
| 07. | மத்திய சந்தையின் 22ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையை நடாத்திச் செல்லல் | 12,663,000.00 | 1,000.00+180.00 | 126,700.00 | 5,000.00 |
| 08. | மத்திய சந்தையின் 17ஆம் இலக்க கோழியிறைச்சிக் கடையை நடாத்திச் செல்லல் | 1,706,250.00 | 1,000.00+180.00 | 17,000.00 | 5,000.00 |
| 09. | மத்திய சந்தையின் 23ஆம் இலக்க கோழியிறைச்சிக் கடையை நடாத்திச் செல்லல் | 1,706,250.00 | 1,000.00+180.00 | 17,000.00 | 5,000.00 |
| 10. | ஞாயிறு சந்தையின் மீன் தட்டை நடாத்திச் செல்லல் | 669,375.00 | 1,000.00+180.00 | 6,700.00 | 5,000.00 |
| 11. | நுவரெலியா ஹாவாஎலியவிலுள்ள மீள்சுழற்சிப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நிலையத்தை நடாத்திச் செல்லல் | 1,496,250.00 | 1,000.00+180.00 | 15,000.00 | 5,000.00 |
| 12. | மாநகர சபைக்குச் சொந்தமான பொது மலசலகூடத்தை நடாத்திச் செல்லல் | 6,387,450.00 | 1,000.00+180.00 | 63,900.00 | 5,000.00 |


**கே.கே.ஜீ.ஐ.டீ.பீ. விஜேதிலக்க,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நுவரெலியா.**
**2024-09-09.**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்கான அழைப்பு

## தேசிய போட்டி கேள்விகோரல்

| Contract No | Name of the Contract | Engineer's Estimate Exclu. Contengencies (Rs. Mn) | Bid Security (Rs. Mn) | Duration (Months) |
|---|---|---|---|---|
| RDA/PRJT/WP TB/2024/ C-116 | Edge Correction base Construction and Road Surfacing Work | 40 | 400,000.00 | 03 |

தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் மேற்படி வேலைக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன .

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் 11 முதல் 2024 ஒக்டோபர் 01 வரை RDA மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் **www.rda.gov.lk** ஐப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விசேட திட்டப் பிரிவு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

---

**பெயர் மாற்றம்**

இல. 188/2, முதலியார் வீதி, அக்கரைப்பற்று-16 **முகம்மதலியார் அவ்வாக்குட்டி** (NIC No. 747763984V) ஆகிய நான் இன்று (10.09.2024) முதல் எனது பெயரை **முகம்மதலியார் நஸ்லியா** என மாற்றிக் கொண்டேன் என்பதோடு எதிர்காலத்தில் இந்தப் பெயரையே பயன்படுத்துவேன் எனவும், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்

**- முகம்மதலியார் நஸ்லியா**

---

**பெயர் மாற்றம்**

528D, பஸார் 06.ம் வீதி சம்மாந்துறை விலாசத்தில் வதியும் எனது பெயர் முகம்மது யூனூஸ் லெவ்வை முகம்மது ஜெகுக்கூப்பு என பிறப்பு அத்தாட்சியில் பதியப்பட்டுள்ளது. (அ.அ.இல. 692313240V) எனது பெயரை முகம்மது யூனூஸ்லெவ்வை முகம்மது ய.ஃகூப் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**முகம்மது யூனூஸ்லெவ்வை**
**முகம்மது ய.ஃகூப்**

---

## இலங்கை வங்கி

### இலங்கை வங்கி கல்பிட்டி கிளைக்கு மகளிர் விடுதியொன்றை நடாத்திக்கொண்டு செல்வதற்காக பொருத்தமான வீடொன்று நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் தேவையாகவுள்ளது.

**உத்தேச வீடு பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- வீடானது குறித்த பிரதேச சபையின் அனுமதியின் கீழ் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தல் கூடாது.
- தரைப் பரப்பளவு சுமார் 2000 சதுர அடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் நான்கு படுக்கையறைகள், வசிக்கும் அறை, உணவு அறை, சமையலறை மற்றும் பொதுவான குளியலறையைக் கொண்ட தரை வீடானால் மிகவும் உகந்ததாகும் மாடி வீடானால் மேற்கூறிய சதுர அடிகளைக் கொண்ட இரண்டுக்கு மேற்படாத மாடிகளைக் கொண்ட வீடாக இருத்தல் வேண்டும்.
- வீட்டிற்கு தரையோடு பதித்து சுவர்கள் சாந்து பூசி நிறப்பூச்சு பூசப்பட்டு குளியலறை தரைக்கு தரையோடு பதித்து வொஷ் பேசின் சகிதம் குளியலறை துணைப்பாகங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- நீரை சேமித்து வைப்பதற்கான தாங்கியொன்று சகிதம் தொடர்ச்சியான நீர் வழங்கல் இருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் முதற்கட்ட மின்சார இணைப்பு சகிதம் முழு வீட்டிற்கும் மின்குமிழ்கள் மற்றும் மின்சார பிளக்குகள் சகிதம் பாதுகாப்பு மின்சார டிரிப் முறைமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குறித்த வீடானது இலங்கை வங்கி கல்பிட்டி கிளைக்கு 1km தூரத்தில் வீட்டை அடையக்கூடிய இலகுவான வீதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், கட்டிட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி மற்றும் இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை வங்கி கல்பிட்டி கிளையின் மகளிர் விடுதிக்கான பொருத்தமான கட்டடம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர் (வடமேல் மாகாணம்),**
**இலங்கை வங்கி,**
**வடமேல் மாகாண அலுவலகம்,**
**இல. 18, மிஹிந்து மாவத்தை, குருநாகல்.**
**தொலைபேசி: 037-2232217**
**தொலைநகல்: 037-2223619**
**மின்னஞ்சல்: bocnwp@boc.lk**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

அமைச்சரவையின் அங்கத்துவம் பெறாத
அரச பெருந்தோட்டத் தொழில்துறை மறுசீரமைப்பு அமைச்சு
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## ரங்கல தேயிலைத் தொழிற்சாலைக்கு 120 கிலோ வோட் சூரிய சக்தி அமைப்பை, நிறுவி, நடத்திச்செல்லல் மற்றும் பராமரிப்பதற்கான விலைமனுக்கோரல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ரங்கல அரச தோட்டத்திற்கு சொந்தமான தேயிலைத் தொழிற்சாலையின் கூரைமீது 120 கிலோ வோட் சூரிய சக்தி அமைப்பை நிறுவுதல், நடத்திச் செல்லல் மற்றும் பராமரிப்பதற்கு கீழ்க்காணும் தகைமைகள் உள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- செல்லுபடியாகும் வியாபார பதிவுச் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.
- இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் பதிவு செய்த வழங்குநராக இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 05 வருடமாவது அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கடந்த 03 ஆண்டுகளில் இவ்வாறான செயற்றிட்டங்கள் 05ஐ ஆவது மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

நிறுவுதலின் பின்னர் தேவைப்படும் பராமரிப்பு மற்றும் சேவை வழங்கல்களை மேற்கொள்ளல் வேண்டும்.

வழங்குநர்களால் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தள பரிசீலனை ஒன்றை மேற்கொள்ள வேண்டியதுடன் மேலதிக விபரங்களுக்கு ரங்கல தோட்ட அதிகாரியின் தொலைபேசியூடாக (077-4055999) தொடர்பு கொள்ளலாம்.

வாரத்தின் வேலை நாட்களில் 2024.09.11 மு.ப. 9.00 முதல் 2024.09.25 பி.ப. 1.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 2,000/= கட்டணத்தை செலுத்திய பின்னர் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுதாபனத்தின் இல. 257, சிரிதம்ப மாவத்த, கொழும்பு - 10 இல் அமைந்துள்ள எமது தலைமையத்தில் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வழங்குநர்களால் ரூ. 200,000/= கேள்விப் பிணை மூலம் தனது விலைமனுப் பத்திரத்துடன் காசாக இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கி முதலாம் நகரக் கிளையில் கணக்கு இல. 046100240000933 இல் வைப்பு செய்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறாக இரு உறைகளில் இட்டு 2024.09.25 பி.ப. 2.00 இற்கு முன்பு இடதுபக்க மேல் மூலையில், **“ரங்கல தேயிலைத் தொழிற்சாலைக்கு 120 கிலோவோட் சூரிய சக்தி அமைப்பை நிறுவுவதற்கான விலைமனுக்கோரல்”** என்று குறிப்பிட்டு **“தலைவர், பெறுகைக்குழு, இல. 257, சிரிதம்ம மாவத்த, கொழும்பு - 10”** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்கலாம். 2024.09.25 பி.ப. 2.00 இற்கு பின்பு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது அத்துடன், விலைமனுப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் தலைமையகத்தில் பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் திறக்கப்படும். அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம்**
**இல. 257, சிரிதம்ம மாவத்த,**
**கொழும்பு - 10**

**பெறுகைப் பிரிவு - 011 4194879**

---

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**Supply, Delivery, Installation, Testing & Commissioning Of Digital Monochrome Production Printing Press and Digital Colour Production Printing Press**

1. உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பின்வரும் உருப்படிகளை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு இறைவரித் திணைக்கள தி ணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் (பிரதானமானது) அழைக்கின்றார்.

| Contract No. | Description | Quantity | Amount of refundable bid security (Rs) | Amount of non-refundable fee (Rs) |
|---|---|---|---|---|
| FIN/S/S11/10/2024 | Digital Monochrome Production Printing Press | 01 | 213,000.00 | 3,500.00 |
| | Digital Colour Production Printing Press | 01 | | |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை உள்நாட்டு இறைவரித் திணைக்கள கணக்காளரிடமிருந்து (வழங்கல்) பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2024.09.11 ஆம் திகதியிலிருந்து 2024.10.02 ஆம் திகதி வரையும் அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   I. விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவிருத்தல்
   ii. விலைமனுதாரர் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. வர்த்தக உரிமை பெயருடைய அம்சங்களை இலங்கையில் விற்பதில் விலைமனுதாரருக்கு ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
5. **2024.10.02 ஆம் திகதி வரையும்** வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவை (மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை) செலுத்திய பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கிலத்திலுள்ள விலைமனுக் கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரரினால் கணக்காளரிடமிருந்து (வழங்கல்), வழங்கல் பிரிவு, கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படல் வேண்டும்.
6. **கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 13 ஆம் மாடி, வழங்கல் பிரிவில் 2024.09.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.**
7. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் 2024.10.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.10.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்களின் இந்த அழைத்தலின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறுமுள்ள கேள்வி பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யும் அனைத்து விலைமனுதாரர்களும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் பங்கு பற்றுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
8. உள்நாட்டு இறைவரித் திணைக்கள திணைக்கள பெறுகைக் குழுவானது (பிரதானமானது) இந்த பெறுகை தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டாது.

**திணைக்கள பெறுகைக் குழு (பிரதானமானது),**
**வழங்கல் பிரிவு,**
**13 ஆம் மாடி,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

**தொலைபேசி: 011 2135309**
**தொலைநகல்: 011 2338632**
**மின்னஞ்சல்: arachchi.cdl@ird.gov.lk**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### மருந்துகள், சத்திரசிகிச்சை Dressing உருப்படிகள் மற்றும் சத்திரசிகிச்சை பொருட்களை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் மருந்துகள், சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் Dressing உருப்படிகளை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டி ரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறித் தொகை |
|---|---|---|---|---|
| | **DRUGS** | | | |
| Q126(25DR)/24 | **Drugs used in the treatment of Cardiovascular System - 3** (Cardioplegia 20ml infusion, Heparin 25000IU/5ml inj., Protamine Sulphate 50mg/5ml inj.) | Lot | 3500.00 | |
| Q127(25DR)/24 | **Drugs used in the treatment of Cardiovascular System - 6** (Digoxin 0.5mg/2ml inj. ,Enoxaparin 40mg inj., Enoxaparin 60mg inj., Nitroglycerin 50mg/ 10ml inj.) | Lot | 3500.00 | |
| Q128(25DR)/24 | **Drugs used in the treatment of Cardiovascular System - 7** (Tenecteplase 40mg injection) | Lot | 3500.00 | |
| Q129(25DR)/24 | **Drugs used in the treatment of Gastrointestinal System - 1** (Pantoprazole 40mg injection) | Lot | 3500.00 | |
| | **SURGICAL DRESSING ITEMS** | | | |
| Q013(25DE)/24 | **Surgical Gauze Absorbent Roll**(36cm x 100m) **Sanitory Towels ( Pads ) with Loops** **Absorbent Cotton Wool B.P.**(500g) | Lot | 3500.00 | |
| Q014(25DE)/24 | **Anaesthetic Inhalation solution**{(Sevoflorane) 100% - 250ml, (Isoflurane) 100ml} **Soda Lime**{(Carbon dioxide absorbent) 4.5 kg} | Lot | 3500.00 | |
| | **SURGICAL ITEMS** | | | |
| Q005(25SR1)/24 | **Monofilament Polypropylene** (4/0,1/2c ,17mm/ 18mm, RB 90cm DA), (6/0, 10mm, 75cm -90cm 3/8c RB, DA) **Monofilament Polypropylene Blue** (4/0,1/2c 20mm RB 90cm DA) , (5/0/ 1/2c/17mm/ 18mm RB/ 90cm/ DA), (7/0/ Taper Cut/3/8C/8mm 60cm/Corolene 20S 05F)(6/0 RB 13mm 75cm Double Arm W8706- Prolene) | Lot | 3500.00 | |

பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆவலுள்ள தகுதி வாய்ந்த எந்த முகவரும் அல்லது கேள்விதாரரின் சார்பாக பெயரிடப்பட்ட நபரும் கொள்வனவு செய்த முழுமையான கேள்வி ஆவணங்களில் இரு நகல்களில் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுதப்பட்ட எழுத்து மூலமான ஒரு விண்ணப்பம்
(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தல்
(iii) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் ஒரு புகைப்படப்பிரதி

01. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களிலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. வைத்தியசாலை வழங்கல்கள் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. 2024-09-12ஆம் திகதி முதல் 2024-10-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் 2024-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
06. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

மேலதிக தகவல் : தொடர்பிலக்கம்: தொலைபேசி: 0112778610 நீடிப்பு 3143
தொலைநகல் : 011-2778624
மின்னஞ்சல்: somedical@sjghsrilanka.lk

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**



# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–09–11

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் அதன் கீழ் உள்ள தொழில்நுட்ப கல்லூரிகள் 09, கைத்தொழில் கல்லூரிகள் 29 இற்காக தனிப்பட்ட பாதுகாப்புச் சேவை மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், மருதானை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஆனமடுவ தொழில்நுட்பக் கல்லூரிக்கான சுத்திகரிப்புச் சேவையை, நடத்திச் செல்வதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து மாத்திரம் கொழும்பு-10, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் பணிப்பாளர் நாயகத்தினால் 2024.09.26 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கேள்வி இலக்கம் | கேள்வி விபரம் | (கேள்விப் பிணை) (ரூ) | கால எல்லை | பொதுவான வருடாந்த வர்த்தக செலவு (ரூ) | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| DTET/14/07/ 03/2023 | பாதுகாப்புச் சேவையை நடத்திச் செல்லல் 2024 / 2025 | 600,000.00 | 2024.11.15 முதல் ஒரு வருடத்திற்கு | 60 மி. | 12,500.00 |
| DTET/14/07/ 04/2023 | சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்லல் 2024 / 2025 | 200,000.00 | 2024.12.15 முதல் ஒரு வருடத்திற்கு | 15 மி. | 3,500.00 |

1. கேள்விப் பிணையை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து சமர்ப்பித்தல் வேண்டும்.
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை மக்கள் வங்கி நகர மத்திய கிளையின் கணக்கு இலக்கம் 176-1001-3-9026228 எனும் கணக்கிற்கு "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், என்ற பெயரில் செலுத்தி 2024.09.11 முதல் 2024.09.24 வரையான காலத்தின் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 இற்கும் இடையில் எந்த நேரத்திலும் பற்றுச்சீட்டினை தொழில்நுட்ப உதவிச் சேவைப் பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன், திணைக்கள வளாகம் மற்றும் ஏனைய வளாகத்தில் பரீட்சித்துப் பார்த்து ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய தெளிவை பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்தல் திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது இணையதளத்தை பரிசீலித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் 2024.09.24 பி.ப. 2.00 இற்கு முடிவடையும்.
5. கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2024.09.26 மு.ப. 10.30 இற்கு முடிவடையும்.
6. எந்த வேளையிலும் காணப்படும் ஒரு கேள்வி அல்லது பல கேள்விகளை அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

**பணிப்பாளர் நாயகம்,**
**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**
**த.பெ. 557, ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

தொ.பே. இலக்கம் : 011-2327008
பெக்ஸ் இலக்கம் : 011-2424977
இணையதளம் : www.dtet.gov.lk

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) - கி.மா

01. நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழே குறிப்பிட்டுள்ள தரத்திற்கான திருகோணமலை, வரோதய நகர், கண்ணியா வீதி, கிழக்கு மாகாணம், பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) இன் பெறுகைக் குழுத்தலைவர் பதிவைக் கொண்டுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் தனி-கட்ட ஒரு-உறை முறையூடாக நடத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலானது) 50.00 மில்.ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/2016(III) என்ற இலக்கத்தையும் 2021.02.18 ஆம் திகதியையுமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
03. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் அட்டவணையில் குறிப்பிட்டவாறான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கட்டிட நிர்மாணத்துறையில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
04. திருகோணமலை, வரோதயநகர், கண்ணியா வீதி, கிழக்கு மாகாண நிதிக்கான பிரதி பிரதான செயலாளரின் அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியமைக்கான சான்றிற்கான பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிப்பதன் மூலம் 2024.10.02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் அலுவலக நேரங்களில் திருகோணமலை, வரோதயநகர், கண்ணியா வீதி, பிரதி பிரதான செயலாளரின் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) அலுவலுகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம்.
05. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக அவர்களின் CIDA பதிவுப் புத்தகத்தின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரரொருவர் விலைமனுக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் பெற்றுக் கொள்வதற்கான தகுதியை பெற்றுக் கொள்வார். ஆர்வமுள்ள விலைமனுதாரர் கையேற்பதற்கு முன்னர் விரும்பினால் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதுடன் மேலதிக தகவலை திருகோணமலை, வரோதயநகர், கண்ணியா வீதி, கிழக்கு மாகாண பிரதி பிரதான செயலாளரிடமிருந்து (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல.: 026-2222009)
06. 2024.10.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இலங்கை மத்திய வங்கி அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் கீழே குறிப்பிட்டுள்ளதுமான தொகைக்கான கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டு தலைவர், பிரதி பிரதான பெறுகைக் குழு, (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) கிழக்கு மாகாணம், கண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் திருகோணமலை, வரோதயநகர், கண்ணியா வீதி, பிரதி பிரதான செயலாளரின் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) அலுவலகத்தில் விரைவாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்/ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. 2024.09.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு திருகோணமலை, வரோதயநகர், கண்ணியா வீதி, பிரதி பிரதான செயலாளரின் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) அலுவலகத்தில் விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று நடத்தப்படும்.
08. ஒப்பந்தத்தை கையளிப்பதில் பெறுகை குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**அட்டவணை**

| வேலையின் பெயர் | CIDA தரம் | நிர்மாண ஆகு செலவு (ரூ) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூ) | விலைமனுவின் செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை தொகை (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை மாவட்ட வரோதய நக் கண்ணியா வீதி கிழக்கு மாகாண சபைக்கான நான்கு மாடி அலுவலக கட்டிட தொகுதியின் மூன்றாம் மாடியின் மீதி வேலைகள் | சி-6 மற்றும் சி-5 (கட்டிடம்) | 17.583 மில். | 60 நாட்கள் | 8000 | 2024.12.18 வரையும் (77 நாட்கள்) | 176,000 | 2025.01.15 வரையும் (105 நாட்கள்) |
| திருகோணமலை மாவட்ட வரோதய நகர் கண்ணியா வீதி கிழக்கு மாகாண சபைக்கான நான்கு மாடி அலுவலக கட்டிட தொகுதியின் கேட்போர்கூடத்திற்கு வளிச்சீராக்கலை வழங்கல் மற்றும் இணைத்தல் | ஈஎம்3 மற்றும் மேற்பட்டது | 12,315 மில். | 60 நாட்கள் | 8000 | 2024.12.18 வரையும் (77 நாட்கள்) | 123,500 | 2025.01.15 வரையும் (105 நாட்கள்) |

**பொறியியலாளர் கே. சந்திரமோஹன்,**
**தலைவர்,**
**கி.மா பிரதி பிரதான செயலாளரின் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு) பெறுகைக் குழு,**
**பிரதி பிரதான செயலாளரின் (பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு)**
**அலுவலகம், கிழக்கு மாகாணம்,**
**கண்ணியா வீதி,**
**வரோதய நகர்,**
**திருகோணமலை.**
**திகதி: 11.09.2024.**

FOR VEHICLES, PROPERTY, ELECTRONICS, LEISURE & SPORTS, JOBS & WHAT YOU WANT
ANYTHING YOU WANT,
WHENEVER YOU WANT...
It's Simple, Trusted & Fast...
adz.lk
it's what you want
adz.lk THE TRUSTED MARKETPLACE FOR BUYING & SELLING

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**
**மன்னார் மாவட்ட விளையாட்டு கட்டிட தொகுதியில் நீச்சல்தடாகம் மற்றும் தடாக அரங்கின் நிர்மாண மீதி வேலை.**
**ஒப்பந்த இல.: DSD/PRO/3/3/69-2024**

மன்னார் மாவட்ட விளையாட்டு கட்டிட தொகுதியில் நீச்சல்தடாகம் மற்றும் தடாக அரங்கின் நிர்மாண மீதி வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். (ஒப்பந்த இல.: DSD/PRO/3/3/69-2024)

1. இவ்வேலையானது பின்வருவனவற்றை அடக்குகின்றது.
   கொங்கிறீட் வேலைகள், தச்சுவேலைகள், நீர்ப்புகாப்பு வேலைகள், தரை சுவர் மற்றும் சீலிங் மெருகூட்டல் , உலோக வேலைகள் மற்றும் பெயிண்டிங் வேலைகள், மின்னியல் வேலைகள், நீர் வழங்கல் மற்றும் குழாய் வேலைகள்.
   நிர்மாணக்காலமானது 160 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருப்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   3(அ) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் நீச்சல் தடாக துறையில் எஸ்பி1 தரத்தில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள்.
   3(ஆ) கடந்த ஐந்து (5) வருடங்களில் ஒப்பந்தக்காரர் ஆகக் குறைந்தது மூன்று செயற்றிட்டங்களை இதற்கு சமமான சிக்கல் தன்மையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பொறியியல் சேவைகளுக்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 0112677960) கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024.09.11 ஆம் திகதியிலிருந்து 2024.10.01 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் (வேலை நாட்களில்) மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-7, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பெறுகைக்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
6. 2024.10.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 575,000.00 (ஐந்து இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா) பெறுமதியான விலைக்கோரல் ஆவண கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கேள்விப்பிணையானது அதனை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. 2024.10.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-07, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை ,**
**கொழும்பு-7.**
**தொலைபேசி: 011 2677960**

## போதனா வைத்தியசாலை இரத்தினபுரி

# பெறுகை அறிவித்தல்

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான கீழ்க்காணும் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தலின் பிரகாரம் CIDA நிறுவனத்தில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.10.14 10.30 மணிவரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட பெறுகை ஆவணங்களை 2024.09.11 முதல் 2024.10.11 வரை அரச விடுமுறை தினம் தவிர்த்து வாரத்தின் வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத ரூ. 3500.00 கட்டணத்தை காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2024.10.14 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படுமாறு அப் பெறுமதியின் அடிப்படையில் விலைமனு திறக்கப்படும் தினம் முதல் எதிர்வரும் 119 நாட்கள் செல்லுபடியாகும். இலங்கை மத்திய வங்கியில் செல்லுபடியாகும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது அப் பெறுமதிக்கு சமமான தொகை (மீளளிக்கப்படும்) பிணையாக வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலைமனுக்களை குறித்த தினம் குறித்த நேரத்திற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களுக்கு இல. 045 - 2222261 மூலம் கணக்காளரிடம் விசாரிக்கலாம்.

| | இலக்கம் | வேலை விடயம் | குறைந்தபட்ச CIDA தகைமை |
|---|---|---|---|
| 01 | THR/E17/PA14/2024 | Extension of Administration Office - Stage II | C5/C6 |
| 02 | THR/E17/PA16/2024 | Renovation of Main Kitchen | C5/C6 |
| 03 | THR/E17/PA17/2024 | Modification of Office Building for Security & Cleaning Staff and Construction of Condemned Store | C5/C6 |
| 04 | THR/E17/PA18/2024 | Supplying and Fixing of Air Conditioner Units and Fans for Wards and Other Areas | C5/C6 |
| 05 | THR/E17/PA19/2024 | Renovation of Roof Plumbing and Eave Ceiling in Main Building | C5/C6 |
| 06 | THR/E17/PA20/2024 | Asphalt Overlaying Hospital Car Park and Access Roads | C5/C6 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி,**
**2024.09.09**

## பிழை திருத்தம்

**சூரியவெவ பிரதேச சபை**
**சொத்துகளை குத்தகைக்குவிடல்**

2024.09.06ம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தலின் முதலாம் பந்தியின் நான்காம் வரியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி "2024 செப்டெம்பர் 29ம் திகதி 27ம் திகதி" எனவும், கேள்வி அறிவித்தலின் இறுதி பாகத்தில் " 2023ம் ஆண்டு" "2024ம் ஆண்டு" எனவும் திருத்தப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**சூரியவெவ பிரதேச சபை**
**சூரியவெவ**
**2024.09.11**

**2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 திகதியாகிய இன்று,**

CU/3573/25 என்ற வழக்கின் 3ம் பிரதிவாதியான இல 14, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் எனும் முகவரியில் வசித்து வந்த சாந்தகுமார் நிரோஜன் என்பவரிற்கு குறித்த வழக்கில் அக்கறை ஏதேனும் இருப்பின் 12.09.2024ம் திகதி குறித்த வழக்கானது கௌரவ திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் அழைக்கப்படும் போது தங்களிற்கு குறித்த வழக்குத்தொடர்பில் ஆட்சேபனை ஏதேனுமிருப்பின் மன்றிற்கு தெரிவிக்கலாம்.

**மனுதாரர்களின் சட்டத்தரணி**

**பதிவாளர்**
**திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## இலங்கை தேசிய வைத்தியசாலை
## கொழும்பு — 10

# பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையிலுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு ICTAD பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்கு, மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணமாக 4,000.00 ரூபாவைச் செலுத்தி 2024.09.11ஆம் திகதி மு.ப. 9.00 முதல் 2024.10.01ஆம் திகதி பி.ப. 3.00 வரை, பொது நிர்வாக அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களைத் தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து, வேலையின் பெயரை உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு 2024-10-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் அவ்வேளையில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

| இல. | வேலை | மதிப்பீட்டுச் செலவு ரூபா | தரம் | மீளளிக்கப் படும் பிணை முறி ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா சதம் | கருத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் பங்களாவின் புதுப்பித்தல் வேலைகள் (AC-1/84/2024) | 28,582,712.00 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C5 அல்லது C4 | 429,000.00 | 4,000.00 | மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனு 5,000,000.00 ரூபாவிற்கு மேற்படின், விலைமனு ஆவணங்களை கையேற்கும்போது பொது ஒப்பந்த பதிவாளர் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 02. | சத்திரசிகிச்சை கழிவு முகாமைத்துவ பிரிவில் களஞ்சிய வசதிகளை விஸ்தரித்தல் (AC-1/79/2022) | 8,035,103.00 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C7 அல்லது C6 | 120,500.00 | 2,500.00 | |
| 03. | 43 இலக்க வார்டில் உள்ள கூட்ட மண்டபத்தின் ஸ்லெப் மற்றும் மலசலகூடத்தின் புதுப்பித்தல் வேலைகள் (AC-1/41/2023) | 3,944,375.00 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C8 அல்லது C7 | 60,000.00 | 2,500.00 | |
| 04. | 200 தாதியர் விடுதிகளின் உள்ளகச் சுவர்களுக்கு நிறப்பூச்சு பூசுதல் (AC-1/85/2024) | 18,161,450.00 | விசேடத்துவம்: கட்டிடம் தரம்: C6 அல்லது C5 | 270,000.00 | 4,000.00 | |

**வைத்தியர் டபிள்யூ. கே. விக்கிரமசிங்க,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**கமத்தொழில் அமைச்சு**
**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**
செயற்றிட்ட இல.: **P163742**

மேற்கூறிய தலைப்பில் 2024 செப்டெம்பர் 04ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் 7ஆம் பந்தியை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

7. வேலைத் தள விஜயம் 2024 செப்டெம்பர் 13ஆம் திகதி இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து 2024 செப்டெம்பர் 18ஆம் திகதி விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
   விளம்பரத்தின் ஏனைய அனைத்து விடயங்களிலும் மாற்றம் இல்லை

**டாக்டர் ஆர்.எம். ஆரியதாச,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்),**
**லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை.**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**[IFB No.: RDA/PD/UVA/RMTF/2024/01]**

மேலேயுள்ள IFB இலக்கத்தின் கீழ் மொனராகல மாவட்டத்தில் (ஒரு ஒப்பந்தம்) வீதி மேம்படுத்தும் வேலைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் (ஊவா) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.09.11 ஆம் திகதியிலிருந்து 2024.10.02 ஆம் திகதியன்று வரையும் வீஅஅ இன் **www.rda.gov.lk** என்ற இணைய பக்கத்தை பார்வையிடும்படி அல்லது 057-2222170 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மாகாண பணிப்பாளர் (ஊவா மாகாணம்), வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைக்கோரல் அழைப்பு

**மாவட்டச் செயலகம், நுவரெலியா**

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர் மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான பாடசாலை கிரிக்கெட் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2024 என்பதற்காக புதிய ஆடுகளத்தை நிர்மாணிப்பதற்காக, தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையைப் பயன்படுத்தி, தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| பிரதேச செயலாளர் பிரிவு | பாடசாலை எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு (கட்டிட நிர்மாணம்) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் வைப்புத் தொகை ரூபா | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் கால எல்லை மற்றும் இடம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் திகதி, இடம் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நுவரெலியா | 3 | 3.7 | C8, C7 | 3,000.00 | 2024-09-11ஆம் திகதி முதல் 2024-10-03ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்கிடல் பிரிவில் | பணமாக ரூபா 37,000.00<br>வங்கிப் பிணையாக ரூபா 74,000.00 | 2024-12-31 | 2024-09-25 - மு.ப. 10.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தின் ஆஷ்சர்ய மண்டபத்தில் |
| தலவாக்கலை | 4 | 5 | C8, C7 | | | பணமாக ரூபா 50,000.00<br>வங்கிப் பிணையாக ரூபா 100,000.00 | | |
| நோர்வூட் | 6 | 7.8 | C7, C6 | | | பணமாக ரூபா 78,000.00<br>வங்கிப் பிணையாக ரூபா 156,000.00 | | |
| அம்பகமுவ | 2 | 2.6 | C8, C7 | | | பணமாக ரூபா 26,000.00<br>வங்கிப் பிணையாக ரூபா 52,000.00 | | |
| வலப்பனை | 4 | 5 | C8, C7 | | | பணமாக ரூபா 50,000.00<br>வங்கிப் பிணையாக ரூபா 100,000.00 | | |
| ஹங்குரன்கெத்த | 4 | 5 | C8, C7 | | | பணமாக ரூபா 50,000.00<br>வங்கிப் பிணையாக ரூபா 100,000.00 | | |
| கொத்மலை | 7 | 9.1 | C7, C6 | | | பணமாக ரூபா 91,000.00<br>வங்கிப் பிணையாக ரூபா 182,000.00 | | |

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-10-13ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், நுவரெலியா எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது விலைமனுதாரர் / அவரின் பிரதிநிதியொருவரினால் நேரில் கொண்டுவந்து மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் உள்ள செயலாளர் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுக் கிடைக்கச் செய்யலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாடசாலை கிரிக்கெட் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2024 என்பதற்காக விலைமனு கோரல்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் உள்ள செயலாளர் பிரிவில் 2024-10-04ஆம் திகதி மு.ப. 11.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் மு.ப. 11.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக் கோரலின் இறுதித்தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**(விசாரணை கணக்கிடல் பிரிவு - 052-2222233/36)**
**தலைவர்,**
**மாவட்டச் செயலக பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**நுவரெலியா.**

## படல்கும்புர பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

படல்கும்புர பிரதேச சபைக்குச் சொந்தமான படல்கும்புர பஸ் நிலைய புதிய வர்த்தக கட்டிடத்தொகுதியின் கடை அறைகள் 09 ஐ 2025.01.01 முதல் 2029.12.31 வரை 05 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு 055-2250175 அல்லது badalkumbura.ps.gov.lk இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இறுதித் திகதி : 2024.10.07**

**டபிள்யூ. எப்.பீ.இனோகா**
**சபை செயலாளர்,**
**பிரதேச சபை,**
**படல்கும்புர**

Observer ADZ · வரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

**Gampaha - 033 22 23 464**
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

**Wattala - 011 2 937 989**
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

**Nilpanagoda - 077 8 627 321**
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

**Wattala - 011 2 932 511**
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

**Kochchikade - 031 22 78 359**
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

**Batuwatta - 071 8 921 271**
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

**Dunagaha - 077 3 517 752**
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

**Ja-Ela - 011 2 947 379**
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

**Negombo - 071 480 43 55**
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

**Katunayake - 077 4 115 998**
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

**Kandana - 011 2 233 651**
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

**Minuwangoda - 011 2 297 881**
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

**Katana - 031 2 241 687**
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

**Ja-Ela - 071 8 571 713**
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

**Kotugda - 011 2 290 815**
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

**Negombo - 071 552 22 40**
1944 - H. A. S. Pushpalatha Rosairo - Rosairo Newspapers and Advertising, Negombo.

**Udugampola - 071 4 554 696**
1470 - K. K. Danesh Pradeepa - 'Kumudu' Nilwala Road, Udugampola.

**Ganumulla - 076 2 217 181**
1969 - S. Damith Mellawa Thanthrige - Ganumulla

**Indigolla - 033 5 613 736**
1982 - M. M. Manjula Saman Kumari - 72/5/C/2, Yakkala Road, Indigolla.

**Kelaniya - 011 2 947 379**
1457 - G. Wimalasiri Perera - No. 555, Dhanushka Velandasela, Waragoda Road, Kelaniya.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**


# கேள்வி மனு (டெண்டர்) விலைக்கோரல் சம்பந்தமாக வண்ணாத்திவில்லு பிரதேச சபை

01. வண்ணாத்திவில்லு பிரதேச சபைக்கு உரித்தான சொத்துக்கள் 2025.01.01ம் திகதியில் இருந்து 2025.12.31ம் திகதி வரை குத்தகை கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2024.09.11ம் திகதி முதல் 2024.09.25ம் திகதி மு.ப 10.00 மணி வரை குத்தகை தொகை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. டெண்டர் விண்ணப்பம் 2024.09.24ம் திகதி பி.ப 01.00 மணி வரையும் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

03. குறிப்பிட்ட டெண்டர் விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும்போது குத்தகைக்கு விடப்படும் சொத்துக்கள் தொடர்பான உப பட்டியலும் டெண்டர் உடன்படிக்கை பத்திரமும் பெற்றுக்கொள்ள முடியும்.

04. 2025ம் வருடத்திற்கு சொத்துக்கள் குத்தகைக்கு எடுக்கும்போது டெண்டர் உடன்படிக்கை பிரகாரம் விண்ணப்பதாரி செயற்பட வேண்டும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 2024.09.25ம் திகதி மு.ப 10.15 மணிக்கு டெண்டர் குழு முன்னிலையில் திறந்து வைக்கப்படும்.

06 மேலதிக விபரங்கள் யாவும் வண்ணாத்திவில்லு பிரதேச சபைக்கு வருகைதந்தோ அல்லது 032- 5677052 மற்றும் 032-3297251 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**2024.09.03 ம் திகதி**
**வண்ணாத்திவில்லு பிரதேச சபை**

**எச்.எம்.ஐ.பீ. ஹேரத்**
**செயலாளர்**
**வண்ணாத்திவில்லு பிரதேச சபை**

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உள்ள கனரக உருப்படிகள் (Hardware Items) சார்ந்த உட்கட்டமைப்பை பராமரித்தல்

**ஒப்பந்த இலக்கம் : IR/PAM/14/28/124/2024**

01. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உள்ள கனரக உருப்படிகளை பராமரிப்பிற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறியிடப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் (மேல் நிலை) தலைவர் கோருகின்றார். பராமரிப்பு காலம் 1 வருடமாகும்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறைமையின் ஊடாக விலைக்கோரல் நடாத்தப்படும்.

03. விலைமனு சமர்ப்பித்தல் மற்றும் ஒப்பந்தங்களை கையளிக்கப் பெறுவதற்கான தகைமை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர்.

அ) ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் ஒப்பந்ததாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும் என்பதுடன் இது சம்பந்தமான சத்தியக்கடதாசியை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ) இலங்கையில் செல்லுபடியாகும் வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ) அரசாங்க திணைக்களங்கள்/நிறுவனங்கள் அல்லது மிகவும் கீர்த்தி வாய்ந்த தனியார் கம்பனிகளில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள இதனையொத்த கனரக பொருட்களைப் பராமரிப்பில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

ஈ) முக்கிய பராமரிப்பு பணியாளர்கள் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. மீளளிக்கப்படாத கட்டணமாக பதினைந்தாயிரம் ரூபாவைச் (ரூ. 15,000/-) செலுத்துவதன் பேரில் 2024.09.11ஆம் திகதி முதல் 2024.10.01ஆம் திகதி வரை 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

06. 2024-10-02ஆம் திகதி மு.ப. 11.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 15ஆம் மாடி, பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ கிளை, திணைக்களப் பெறுகைக்குழு (மேல்நிலை) தலைவருக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்களால் சமுகமளிப்பதற்கு தேர்ந்தெடுத்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.

07. விலைமனுக்கள் 2025-01-02ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

08. ஐந்து இலட்சம் (ரூ. 500,000.00) இலங்கை ரூபா கொண்ட ஓர் விலைமனு பிணை எல்லா விலைமனுவுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் விலைமனு ஆவணத்தின் அனுமதிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் வங்கிப்பிணை படிவத்தில் மாத்திரமான ஓர் விலைக்கோரல் பிணை முறியாகவிருத்தல் வேண்டும். 2025-02-02ஆம் திகதி வரை விலைமனுப்பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகை குழு (மேல் நிலை)**
**பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ கிளை,**
**15ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02.**
**2024-09-11ஆம் திகதி.**

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு

## துண்டாக்கப்பட்ட மீன் வழங்குதல்

**Q 597/24**

- வதிவிட நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் நுகர்வுக்காக 2024/2025ஆம் வருடத்திற்கு நுகேகொடை, தலபத்பிட்டியவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக துண்டாக்கப்பட்ட மீன்களை வழங்குவதை உறுதி செய்ய முடியுமான அரச வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனத்திற்கு துண்டாக்கப்பட்ட மீன்களை வழங்குவதில் குறைந்தபட்சம் மூன்று வருட திருப்திகரமான அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகள், வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து (ஒப்பந்தக்காரர்களிடமிருந்து) பெறுகைக்குழுத் தலைவரினால் 2024-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தொடர்பாக விண்ணப்பம் கோரப்படுகின்றது. அதன் பிரகாரம், குறித்த வழங்குநர் துண்டாக்கப்பட்ட மீன்களை அன்றாடம் ஒரு வருடத்திற்கு தொடர்ந்து வழங்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுக்கோரல், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறைக்கமைவாக மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக ஆர்வங்காட்டும் வழங்குநர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு மற்றும் பணிப்பாளருக்கு நிறுவன கடிதத் தலைப்பிலான எழுத்துமூல வேண்டுதலொன்றை வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பித்ததன் பின்னர், 2024.09.12ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் விலைமனுப் பத்திரங்களை வழங்கல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- 2024/2025ஆம் வருடத்தில் துண்டாக்கப்பட்ட மீன்களின் அண்ணளவான தேவைப்பாட்டுத் தொகை மற்றும் தகவல்கள் விண்ணப்பத்துடன் வழங்கப்படும்.
- உரிய முறையில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தபாலுறையொன்றினுள் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், “2024/2025ஆம் வருடத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு துண்டாக்கப்பட்ட மீன்களை வழங்கும் ஒப்பந்தம்” எனக் குறிப்பிட்டு 2024.09.26ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக இங்கு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி நேரம் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக விண்ணப்பங்கள் திறக்கப்படும் விண்ணப்பதாரர்க்கு அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
- உத்தேச விலைமனுதாரர்கள் விலைமனுப் பத்திரங்களை எவ்வித கட்டணமுமின்றி வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- மேலதிக விபரங்களை, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2778610 நீடிப்பு 3142 அல்லது 011-2778624

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**



# பெறுகை அறிவித்தல்

## அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை

**வரலாற்று முக்கியம் வாய்ந்த கசாகல ரஜமஹா விகாரைக்கு வருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்களின் துப்புரவேற்பாட்டு வசதிக்காக நிர்மாணிக்கப்பட்ட ஓய்வு மண்டபம் மற்றும் கழிப்பறை கட்டமைப்பின் பகுதி வேலையை பூர்த்தி செய்யும் திட்டம்**

**(பகுதி அடிப்படையில் வேலைகளை பூர்த்தி செய்யும் திட்டம்)**
**விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி: 2024.10.22 அன்று**

அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் பெறுகைக் குழு தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்ட வேலைக்காக 2024.10.02 ஆம் திகதி மு.ப. 10.00 வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும். அன்றைய தினம் மு.ப. 10.30க்கு அந்த அலுவலகத்தில் விலைமனுதாரர்கள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

| விபரம் | தேவையான பதிவு (CIDA) 2021.02.18 ஆம் திகதி அரச நிதிச் சுற்றுநிருப இலக்கம் 01/2016(iii) இன் 3.3 ஆம் பிரிவு | விலைமனுப் பிணை அல்லது பண வைப்பு (ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| வரலாற்று முக்கியம் வாய்ந்த கசாகல ரஜமஹா விகாரைக்கு வருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்களின் துப்புரவேற்பாட்டு வசதிக்காக நிர்மாணிக்கப்பட்ட ஓய்வு மண்டபம் மற்றும் கழிப்பறை கட்டமைப்பின் பகுதி வேலையை பூர்த்தி செய்யும் திட்டம் (பகுதி அடிப்படையில் வேலைகளை பூர்த்தி செய்யும் திட்டம்) (2024/SP/BP/11) | C6 அல்லது C7 (கட்டிடங்களுக்கு மாத்திரம்) | விலைமனுப் பிணை ரூப 100,000.00 அல்லது பண வைப்பு ரூபா 50,000.00 2025.01.27 ஆம் திகதி வரை, (விலைமனுப் பிணை/ பண வைப்பின் மூலப் பிரதியை விலைமனு ஆவணத்தின் மூலப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.) | 2,000.00 |

- விலைமனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னர் முன்மொழியப்பட்ட நிர்மாண திட்டம் தொடர்பில் புரிதலைப் பெறுவதற்கு தளத்தை பரீட்சிக்கும்படி இங்கு குறிப்பிட்டு கூறப்படுகிறது.

01. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டிடங்களுக்காக பதிவு செய்யப்பட்ட (C6 அல்லது C7) ஒப்பந்ததாரர்களுக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்படும்.

02. விலைமனு ஆவணங்களை 2024.10.01 ஆம் திகதி பி.ப. 2.00 வரை அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

03. விலைக்கேட்பு தேசிய போட்டிரீதியான விலைமனு மூலம் மேற்கொள்ளப்படும். முன்மொழியப்பட்ட திட்டத்தின் முழு செலவு மதிப்பிடப்பட்ட ஐம்பது மில்லியன் ரூபாவுக்கு குறைவு என்பதால், பிராந்திய நிதி முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை அரச நிதிச் சுற்றுநிருப இலக்கம் 01/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பொருந்தும். (Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the estimated value of work to be performed under this procurement (excluding VAT and other Taxes) is below Rs. 50 million, regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular no. 04/2016(iii))

04. பெறுகை தொடர்பில் மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் சாதாரண அலுவலக நேரத்தில் அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

05. விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது ஒவ்வொரு விலைமனுவுடனும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வகையில் விலைமனு பிணை ஒன்றை அல்லது பண வைப்பு ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு பிணையாயின் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றினால் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, அது நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும். இந்தப் பிணை விலைமனு ஆவணத்தின் 09 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட படிவத்தின்படி “செயலாளர், அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை” என்று குறிப்பிடுதல் வேண்டும். பண வைப்பாயின் குறித்த பணத்தை அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி, விலைமனுவின் மூலப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை இரு பிரதிகளில் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அதனை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு இறுதியில் ஓர் உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை திறக்கின்ற சந்தர்ப்பத்தில் விலைமனுக்களை சமர்ப்பிப்பவர்கள் அல்லது அவர் சார்பில் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

07. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 90 நாட்கள்.

08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.09.25 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை கூட்ட அறையில் இடம்பெறும்.

09. பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

**2024.09.11**
**செயலாளர்,**
**பெறுகைக் குழுத் தலைவர்,**
**அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை,**
**அங்குணகொலபெலெஸ்ஸ.**

**தொலைபேசி: 047-2228275**
**மின்னஞ்சல்: angupelessaps@gmail.com**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்

01. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
03. “1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின்” ஏற்பாடுகள் மூலம் விலைமனு நிர்வகிக்கப்படும். அதனால், விலைமனு மொத்தப் பெறுமதி ஐந்து மில்லியன் இலங்கை ரூபாவுக்கு (இ.ரூபா 5,000,000.00) மேற்பட்டிருந்தால் மாத்திரம் விலைமனுவுடன் சேர்த்து குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 11ஆவது பிரிவின்படி இலங்கையின் பொது ஒப்பந்த பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
05. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக தொடர்புடைய துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
06. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்குத் தேவையான தகைமை விலைமனு ஆவணத்தில் பிரிவு 05 இல் உள்ள அட்டவணை (விலைமனு தரவு/ ஒப்பந்தத் தரவு) மற்றும் பிரிவு 4 இல் உள்ள தகைமை விபரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
07. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வார நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
08. மீளளிக்கப்படாத கட்டணமாக 7,500.00 ரூபாவை செலுத்தி 2024.09.11 ஆம் திகதி தொடக்கம் 2024.09.30 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
09. விலைமனுக்களை 2024.10.01 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் பதுளை, மார்ட்டீன் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பு விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
10. அனைத்து விலைமனுக்களும் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
11. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.09.24 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு பதுளை, மார்ட்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கலாம்.

| உள்ளூர் நிர்வாகத்தின் பெயர் | ஒப்பந்த இல. | பணி விபரம் | மதிப்பிடப்பட்ட செலவு (மில். இ.ரூபா) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைமனு பிணை தொகை (ரூபா) | விலைமனு பிணை செல்லுபடி |
|---|---|---|---|---|---|---|---|
| உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா | LDSP/UP/BD/DLG/W/2024/2 | CLG அலுவலகக் கட்டிடத்தின் மேம்பாடு | 85.00 | 90 நாட்கள் | C4 மற்றும் C3 – கட்டிடம் | 850,000.00 | 2025.02.25 |

**பிரதித் திட்டப் பணிப்பாளர்**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**திட்ட அமுலாக்கல் பிரிவு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்**
**ஊவா மாகாணம்**
**0552222407**
**2024.09.11**

# இலங்கை ஏ 323 ஓட்டங்கள்



தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோக பூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணி முதல் இன்னிங்ஸுக்காக 323 ஓட்டங்களை பெற்றது.

கிம்பர்லி, டயமன்ட் ஓவல் மைதானத்தில் கடந்த ஞாயிறன்று ஆரம்பமான நான்கு நாட்களைக் கொண்ட இந்தப் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று இலங்கை ஏ அணி தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்தது. இதன்போது ஆரம்ப வீரர் ஓஷத பெர்னாண்டோ அபார சதம் ஒன்றைப் பெற்றார். 146 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 21 பௌண்டரிகளுடன் 122 ஓட்டங்களைப் பெற்றார்.

அதேபோன்று அணித் தலைவர் பசிந்து சூரியபண்டார 61 ஓட்டங்களை குவித்தார். இறுதியில் இலங்கை ஏ அணி முதல் இன்னிங்ஸில் 91.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் பெயர்ஸ் செவனபோல் 4 விக்கெட்டுகளைப் பதம்பார்த்தார்.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க ஏ அணி முதல் இன்னிங்ஸுக்காக 108.2 ஓவர்களில் 372 ஓட்டங்களைப் பெற்றது. மத்தியு பிரீட்ஸ்கே 129 ஓட்டங்களை குவித்தார்.

இலங்கை ஏ அணியின் சார்பில் வேகப்பந்து வீச்சாளர் ஏஹான் மலிங்க 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு சாமிக்க குணசேரக, இசித்த விஜேசுந்தர மற்றும் நிஷான் பீரிஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். இன்று போட்டியின் கடைசி நாளாகும்.

# நியூசிலாந்து டெஸ்ட் தொடரிலும் ஜயசூரிய பயிற்சியாளராக நீடிப்பு



நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும் சனத் ஜனயசூரிய இடைக்கால தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக நடந்து முடிந்த டெஸ்ட் தொடர் வரையே ஜயசூரிய இடைக்கால பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட நிலையிலேயே அவரது பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையுடன் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுவதற்காக நியூசிலாந்து அணி இலங்கை வரவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதோடு இரண்டாவது டெஸ்ட் போட்டி செப்டெம்பர் 26 தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் கிறிஸ் சில்வர்வுட்டுக்கு பதில் இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட சனத் ஜனசூரிய கடந்த இந்தியாவுக்கு எதிரான ஒருநாள், டி20 தொடர்கள் மற்றும் இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணங்களில் பயிற்சியாளராக செயற்பட்டார்.

இதில் இந்தியாவுக்கு எதிராக இலங்கை 27 ஆண்டுகளின் பின்னர் ஒருநாள் தொடர் ஒன்றை வென்றிருந்தது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணி இழந்தபோதும் ஓவலில் நடந்த கடைசி போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இங்கிலாந்தை 10 ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் போட்டி ஒன்றில் இலங்கையால் வீழ்த்த முடிந்தது.

இலங்கை அணிக்கு இன்னும் நிரந்தர தலைமை பயிற்சியாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. அதற்கான தேர்வு நடைமுறைகள் இடம்பெற்று வருவதாக இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இடைக்கால பயிற்சியாளராக செயற்படும் சனத் ஜயசூரிய கடந்த டிசம்பரில் இலங்கை கிரிக்கெட் ஆலோசகராக ஓர் ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. சிறுவர்களுக்கு சமூக ஊடகத் தடை



சிறுவர்கள் சமூக ஊடகத்தை பயன்படுத்துவதற்கு தடை விதிக்க அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும் முன்னர் வயதை சரி பார்க்கும் சோதனை நடவடிக்கை ஒன்று செயற்படுத்தப்படவுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பனிஸ் நேற்று (10) தெரிவித்தார்.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டொக் ஆகிய தளங்களைப் பயன்படுத்தப் பிள்ளைகள் குறைந்தது 14 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்கள் சமூக ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கு சீனா, பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் பல மாநிலங்களிலும் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. சமூக ஊடக பயன்பாடு சிறுவர்கள் இடையே உடல் மற்றும் உளப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கவலை அதிகரித்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# பங்களாதேஷில் மீண்டும் ஆர்ப்பாட்டம்



பங்களாதேஷில் தேசிய கீதத்தை மாற்றுவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு எதிராக புதிய ஆர்ப்பாட்டம் வெடித்துள்ளது.

பங்களாதேஷில் ஆட்சி கவிழ்ப்புக்குக் காரணமான ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து தேசிய கீதம் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது. இந்நிலையில் உடிச்சி ஷிபா கொஸ்தி என்ற முன்னணி கலாசார அமைப்பு நாடு தழுவிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளது.

ரவீந்திரனாத் தாகூரினால் எழுதப்பட்ட தேசிய கீதத்தைப் பாடியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் தேசிய கீதத்துக்கு எதிராக இடம்பெறும் எந்த ஒரு சதி தொடர்பிலும் நாம் பொறுமைகாக்க மாட்டோம் என்று ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். பங்களாதேஷின் தேசிய கீதம் மற்றும் தேசியக் கொடியை இந்துக்கள் இருவர் உருவாக்கிய நிலையில் அவை மாற்றப்பட வேண்டும் என்று பங்களாதேஷ் ஜமாத்தே இஸ்லாமிய அமைப்பு பரிந்துரைத்திருந்தது.

# தாய்வானில் திருடுபோகும் கைத்தொழில் திறமைகள்



தாய்வானின் சிப் தொழில்நுட்பம் உள்ளிட்ட அதிநவீன கைத்தொழில் திறமைகளும் வர்த்தக இரகசியங்களும் திருடப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தைய்பே, சிஞ்சு உள்ளிட்ட நான்கு நகர்களில் மேற்கொண்ட சோதனைகள் மற்றும் விசாரணைகளின் ஊடாக இத்திருட்டு நடவடிக்கைகள் தெரிய வந்திருப்பதாக தாய்வான் நீதியமைச்சின் புலனாய்வு பணியகம் தெரிவித்துள்ளது. இச்செயலில் ஈடுபட்ட நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக சட்ட ரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிப் தொழில்நுட்பம் உட்பட அதிநவீன கைத்தொழில் தொழில்நுட்ப துறைகளில் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் தாய்வானும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



# மக்கள் அடைக்கலம் பெற்ற கூடாரங்கள் மீது இஸ்ரேல் பயங்கரத் தாக்குதல்: 40 பேர் பலி

## 'மனிதாபிமான வலயம்' இலக்கு: பலஸ்தீனர்களின் பலி எண்ணிக்கை 41,000 ஐ தாண்டியது

தெற்கு காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் கூடாரங்களில் அடைக்கலம் பெற்றிருக்கும் 'மனிதாபிமான வலயத்தில்' இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 60க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

கான் யூனிஸ் நகரில் அல் மவாசி பகுதியில் இருந்த குறைந்தது 20 கூடாரங்கள் மீது நேற்று (10) காலை தாக்குதல் நடத்தப்பட்டதாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் குறைந்தது ஐந்து ரொக்கெட்டுகள் விழுந்ததாகவும் இதனால் அங்கு 30 அடி ஆழமான பள்ளம் ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும் பார்த்தவர்கள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் மற்றும் ரபாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கையின்போதும் அருகில் உள்ள கடற்கரைப் பகுதியான அல் மவாசியை மனிதாபிமான வலயமாக இஸ்ரேல் அறிவித்தது. இதனைத் தொடர்ந்தே மக்கள் இங்கு கூடாரங்களை அமைத்து அடைக்கலம் பெற்றனர்.

தாக்குதலை அடுத்து உருவான பெரும் பள்ளத்திற்கு இடையே உயிர் தப்பியோரைத் தேடும் மீட்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததாக உள்ளூர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேலிய கண்காணிப்பு விமானங்கள் வானில் வட்டமிட, தீ பரவிய சூழலில் சம்பவ இடத்தில் பெரும் குழப்பம் இருந்து வந்ததாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

தாக்குதல்கள் இடம்பெற்ற விரைவில் தமது அன்புக்குரியவர்களைத் தேடி மக்கள் அந்த ஆழமான பள்ளத்தை தோண்டும் காட்சிகள் வெளியாகியுள்ளன. 'ஒட்டுமொத்தக் குடும்பங்களும் மணலில் புதையுண்டுள்ளன' என்று பொதுமக்கள் பாதுகாப்பு நிறுவனம் கூறியது.

'இந்த வெறித்தனமான போரில் கொடூரமான படுகொலைகளில் ஒன்றாக இந்தத் தாக்குதல் உள்ளது' என்று காசா சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை மீட்பதில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அம்புலன்ஸ் பணியாளர்கள் சிரமத்தை எதிர்கொண்டு வந்ததாகவும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கான் யூனிஸில் மனிதாபிமான வலயத்திற்குள் நடத்தப்பட்டு வந்த 'ஹமாஸ் பயங்கரவாதிகளின்' கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நிலையம் ஒன்றை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இதனை நிராகரித்திருக்கும் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் இலக்கு வைத்த பகுதியில் தமது போராளிகள் இருக்கவில்லை என்றும் தமது அருவருப்பான குற்றங்களை நியாயப்படுத்துவதற்கு இஸ்ரேலிய நிர்வாகம் பொய்களை கூறிவருகிறது என்றும் குற்றம்சாட்டியுள்ளது.

'தமது உறுப்பினர்கள் எவரும் பொதுமக்களின் ஒன்றுகூடல்கள் அல்லது அந்த இடங்களை இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்துவதை போராளிகள் பல தடவைகள் மறுத்துள்ளனர்' என்று ஹமாஸ் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ரயீத் அபூ முஹம்மர் என்பவரின் மகளும் கொல்லப்பட்டவர்களில் உள்ளார். அவரது மனைவி மற்றும் மற்ற மகள் மணலில் புதையுண்ட நிலையில் உயிருடன் தோண்டி எடுக்கப்பட்டனர். அவர் உயிர் தப்பிய மகளை சுமந்திருந்தார்.

'நானும் மணலுக்குள் இருந்தேன். நான் வெளியே வந்து எனது மகள்மார் மற்றும் மனைவியை தேடினேன். எனது அயலவரின் உடல் பாகங்களை எனது கூடாரத்திற்குள் கண்டேன். எனது குடும்பத்தினரை காணும் வரை அயலவர்களின் உடல் பாகங்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இது தான் இஸ்ரேலின் இலக்குகள்' என்று அவர் குறிப்பிட்டார்.

காசாவின் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும்போல் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு மத்தியில் தொடர்ந்து இடம்பெயர்ந்து வருகின்றனர். இதில் இஸ்ரேல் மனிதாபிமான வலயம் என்று அறிவிக்கப்படும் பகுதிகளுக்கு மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த மனிதாபிமான வலயத்தை இஸ்ரேல் சுருக்கி வரும் நிலையில் குறுகிய பகுதியில் பெரும் எண்ணிக்கையாக பலஸ்தீனர்கள் சிக்கியுள்ளனர்.

காசாவில் போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்கு சதுர கிலோமீற்றர் ஒன்றில் 1,200 பேர் வாழ்ந்து வந்தனர். எனினும் தற்போது அல் மவாசி மனிதாபிமான வலயத்தில் ஒரு சதுர கிலோமீற்றரில் 30,000 மற்றும் 34,000 இற்கு இடைப்பட்ட மக்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். இதன் பாதுகாக்கப்பட்ட பகுதி 50 சதுர கிலோமீற்றரில் இருந்து 41 சதுர கிலோமீற்றர் வரை சுருங்கி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கணக்கிட்டுள்ளது.

தவிர காசாவில் ஏனைய பகுதிகளிலும் இஸ்ரேல் நேற்று உக்கிர தாக்குதல்களை நடத்தியது. காசா நகரின் கிழக்கே உள்ள அல் ஷவா சதுக்கத்தில் இடம்பெற்ற தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தெற்கு காசாவின் ரபா நகரில் உள்ள அல் மஷ்ரூ பகுதியில் இடம்பெற்ற இஸ்ரேலின் குண்டு மழையில் மேலும் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் (திங்கட்கிழமை முடிவுற்ற) இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 32 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 100 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 11 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,020 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 94,925 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

இதேவேளை காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் நேற்று வடக்கில் ஆரம்பிக்கப்படவிருந்தபோதும் அது முன்னெடுக்கப்படுவது குறித்து உறுதி செய்யப்படவில்லை என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி தெரிவித்துள்ளார். தடுப்புமருந்து வழங்கும் இந்த இறுதிக் கட்ட பணிக்காகச் சென்ற ஐ.நா. வாகனங்களை இஸ்ரேலிய இராணுவம் துப்பாக்கி முனையில் தடுத்ததாக செய்தி வெளியான நிலையிலேயே லசரினி இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதாப் பணியாளர்கள் ஏற்கனவே முதல் இரு கட்டங்களில் தெற்கு மற்றும் மத்திய காசாவில் 10 வயதுக்கு உட்பட்ட குறைந்தது 441,647 சிறுவர்களுக்கு வெற்றிகரமாக தடுப்பு மருந்து வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களில் சுகாதார கட்டமைப்பு சீர்குலைக்கப்பட்ட நிலையில் 25 ஆண்டுகளில் முதல் முறையாக போலியோ தொற்று சம்பவம் பதிவானது. இந்த அபாயகரமான தொற்றை கட்டுப்படுத்த காசாவில் உள்ள சுமார் 640,000 குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்க வேண்டி இருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 11ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.